ஜெர்மனியிலும் வன்னியன்
தொலைபேசி அட்டைகள்


தொடர்புகட்கு: ரவி
01726312893 / 0622642067
Pub.

1.50 Euro ஜேர்மனி

# ஈழமுரசு

ஐரோப்பா
POOBALAM WEEKLY
2004 06 - 22 Juin 2004 18

சம்யுக்தா
Credits Immobiliers
வீடு வாங்க கடன் உதவி
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
SAM-YUKTHA
Credits-Finances-Investssements
6, Rue Cail -75010 Paris
Tél/Fax: 01 40 34 03 24
(M° La Chapelle/Gare du Nord)

## அமைதி முயற்சியில் இரட்டை வேடம்

# பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்

## விடுதலைப் புலிகள் எச்சரிக்கை

(14.06.04)

இலங்கையின் சமாதான முயற்சிகளில் சிறீலங்கா அரச தலைவர் சந்திரிக்கா குமாரதுங்கவின் முரண்பட்ட கருத்துக்களைத் தெரிவித்து இரட்டை வேடம் போடுவது நாட்டில் மீண்டும் பாரிய எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்று விடுதலைப் புலிகள் கடுமையாக எச்சரித்துள்ளனர். விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்றும் அவர்களின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத்திட்டத்தைப் பற்றிப்பேச முடியும் என்றும் சில இடங்களில் கூறும் சந்திரிகா வேறு சில இடங்களில் இதற்கு முரணான கருத்துக்களை கூறிவருகின்றார் என்றும் குறிப்பாக இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கு பதிலாக நிரந்தரத்தீர்வு பற்றியே பேசவேண்டும் என்றும் விடுதலைப் புலிகளுடன் மட்டும் பேச முடியாதென்றும் அவர் கூறிவருவதை உலக நாடுகள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி 4ம் பக்கம்...


விரிவான செய்தி 32ம் பக்கம்...



சந்திரிக்காவால் வந்த தலைவலியோ ?



போர் விமானங்கள், உலங்குவானூர்திகள், கப்பல்கள் அவசரமாகக் கொள்வனவு 3



தமிழ்ச்செல்வன் ஐரோப்பா வருகிறார் 4

**Orient Textilien & Schmuck**

Koenigswall 16 (AM hbf),
44137 Dortmund-
Tel: 0231-162377
Fax:49-231-147836

தரம் உத்தரவாதம் அதிகதேர்வு மலிவோ மலிவு !!

* அனைத்து ஜவுளி வகைகள்
* கனம், தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள்
* அழகிய அன்பளிப்புப் பொருட்கள், அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய உடைகள்
* வாத்தியக் கருவிகள், கைக்கடிகாரங்கள்
* நவீன வண்ணங்களில் தரமான தங்காபரணங்கள், தாராள தேர்வில் 916/22K உத்தரவாதத்துடன் சிங்கப்பூர் விலையில் விற்பனையாகிறது.

உரிமையாளர்: ச.ஜெகதீஸ்



Pub

உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை - கப்டன் கஜன்



**V.T.Cash & Carry**

900g யாழ்ப்பாணம் மிளகாய்துள் ஒரு போத்தல் 1Euro – மட்டக்களப்பு முறையில் தயாரிக்கப்பட்ட கட்டா கருவாடு 250g 1euro – 350 ச.மீற்றரில் அமைந்துள்ள ஸ்தாபனம்

Tél: 01 40 05 07 18
Fax: 01 40 05 06 92

15, Rue Cail, 75010 Paris.
M°: La Chapelle-Gare du Nord

# வெள்ளவத்தையில் பொலிஸ் பதிவு முறை தமிழர் வீடுகளுக்கு படிவம் விநியோகம்

கொழும்பு வெள்ளவத்தைப் பொலிஸார் தமிழர்களின் வீடுகளுக்கு விபரம் கோரும் படிவமொன்றை விநியோகித்து வருகின்றனர். பொலிசாரின் இந்தத் திடீர் நடவடிக்கை பொதுமக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. மீண்டும் பொலிஸ் பதிவு நடைமுறை அறிமுகப்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கையாகவே பொலிசாரின் இந்தச் செயல் அமைந்துள்ளதாகப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டும் `ரோனியோ' முறையில் அச்சிட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ள இந்தப் படிவத்தில் ஒரு தமிழ் எழுத்துக் கூட இல்லை என்றும் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுள்ள தமிழர்கள் தெரிவிக்கின்றனர். இதில், வெள்ளவத்தையில் வந்த திகதி முதல் வீடு வாங்கித் தந்தவர், குடியிருப்பாளர்களின் எண்ணிக்கை, வாகன விபரம், முன்னர் இருந்த இடம் உட்பட பலகேள்விகள் கேட்கப்பட்டுள்ளன.

இப்படிவத்தில் பொலிஸ் திணைக்களத்தை உறுதிப்படுத்தும் அடையாளங்கள் எதுவும் அச்சிடப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## துறைமுகங்களின் பாதுகாப்புக்கு புதிய திட்டம் மங்களவிடம் கடற்படைத் தளபதி சமர்ப்பிப்பு

(13.06.04)

இலங்கையில் உள்ள அனைத்து துறைமுகங்களினதும் பாதுகாப்பு தொடர்பான புதிய திட்டமொன்றை சிறீலங்கா கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, துறைமுக அபிவிருத்தி மற்றும் விமான சேவைகள் அமைச்சர் மங்கள சமரவீரவிடம் கையளித்துள்ளார். சர்வதேச கடல்வள அமைப்பு விடுத்த வேண்டுகோளின் பேரில், அதன் சர்வதேச மற்றும் துறைமுக பாதுகாப்புக் கோவைக்கு அமையவே சிறீலங்காக் கடற்படையினர் இந்தப் புதிய பாதுகாப்புத் திட்டத்தைத் தயாரித்துள்ளனர்.

கொழும்பு, காலி, திருகோணமலை, பருத்தித்துறை மற்றும் காங்கேசன்துறை துறைமுகங்களின் பாதுகாப்புத் தொடர்பான தங்களது புதிய திட்டத்தையே கடற்படையினர் அமைச்சர் மங்கள சமரவீரவிடம் கையளித்துள்ளனர். சம்பந்தப்பட்ட துறைமுகங்களுக்கு ஒவ்வொரு நிறுவனங்களினதும் கப்பல்கள் வரும் போது எதிர்நோக்கும் பாதுகாப்புப் பிரச்சினையையும் அதனை வெற்றிகரமாகக் கையாள மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளையும் அடிப்படையாகக் கொண்டே இந்தப் புதிய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகக் கடற்படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடற்படையினர் கையளித்துள்ள இந்தத் திட்டத்தைப் பரிசீலித்த பின்னர் இதனை அமுல்படுத்துவது தொடர்பாக முடிவெடுக்கப்படுமென துறைமுக அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

## வவுனியாவில் வே.பாலகுமாரனின் நூல்கள் வெளியீட்டு விழா

(13.06.04)

தமிழீழ விடுதலைப் புலிகளால் வெளியிடப்படும் சிங்கள மொழி இதழான, தேதுன்னவில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பொன்று எதிர்வரும் 20ம் திகதி நூலாக வெளியிடப்படவுள்ளது. வவுனியா இந்து இளைஞர் மண்டபத்தில், இந்த நூல் வெளியீட்டு விழா இடம்பெறும் என தெரிவிக்கப்படுகிறது. அன்றைய தினம், கா.வே.பாலகுமாரன் அவர்கள் எழுதிய 'மௌனித்தவர் மனக்குரல்' - பாகம் ஒன்றும், 'வன்னியிலிருந்து ஓர் மடல்' எனும் கடிதங்களின் தொகுப்பும் நூல்களாக வெளியிடப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ச.முருகானந்தனின் 'தரை மீன்கள்' சிறுகதைகளின் தொகுதி வெளியீட்டு விழா நாளை செவ்வாய்கிழமை கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது. மருத்துவ கலாநிதி கா.சுயந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வெளியீட்டு உரையினை தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன் அவர்கள் நிகழ்த்தவுள்ளார்.

**பற்களின் அழகு சொற்களுக்கு உறுதி!**
**உங்கள் பற்களில் பிரச்சினையா ?**



புதிய பற்கள் கட்டவேண்டுமா?
ஆலோசனைக்கு எம்மை நாடுங்கள்!
தொடர்புகளுக்கு:
01 48 84 92 67
06 25 89 75 52
என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள்.

ஸ்வரா இசைக்குழு



உங்கள் மங்களகரமான வைபவங்களுக்கு
இசைமழை பொழிந்து
சிறப்பித்திட என்றென்றும்

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்:
அருமை – 0664866681
மாறன் – 0664447207
குகானந்தன் – 0664819995

**Meubles Europeens**

உங்கள் வீட்டுத் தளபாடத் தேவைக்கு ஜேர்மன், பெல்ஜியம் தயாரிப்பு புதிய பழைய வீட்டுத் தளபாடங்கள் மலிவு விலையில்.
லெதர் சோபாக்கள் 3+ 2+1 சோகேஸ்
சாப்பாட்டு மேசைகள் கட்டில்
அலுமாரி குசின செட் மற்றும் அனைத்துவகை வீட்டுத் தளபாடங் களையும், வீட்டுப் பாவனைப் பொருட்களையும் உங்கள் விருப்பம் போல் தெரிவு செய்துகொள்ள நாடுங்கள்.

Meubles Europeens
4, Rue Des Villas
94800 Villejuif
Mo -Villejuif Louis Aragon (N°: 7)
Tél: 01 46 77 19 40 - 06 64 42 42 62

**திறக்கும் நேரம்**
திங்கள் முதல் சனி வரை - 14H - 20H
ஞாயிறு - 10H - 18H

Pub-Fr-20

**EUROCONSULT SARL TRADUCTIONS**

**மொழி பெயர்ப்பு நிலையம்**
அனைத்துவித மொழி பெயர்ப்பு, இலவச சட்ட ஆலோசனை, வர்த்தக - கணக்காய்வு - தொழிலாளர் பிரச்சனைகள், நிர்வாக கடிதம் போன்ற உங்கள் தேவைகளுக்கு
24, Rue Perdonnet , 75010 Paris
Tel: 0153267010 - Fax: 0153267502

**போட்டோ பாலா**
மங்கலகரமான உங்கள் விழாக்கள் மற்றும் அனைத்து நிகழ்வு போட்டோ அல்பங்களை பாதுகாப்பான முறையில் Lamination செய்துகொள்ளாம்
உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்:
Photo Bala
87 Rue de Clignancourt, 75018 Paris
Tel&Fax: 01.42.23.39.15 / 06 18 35 40 77

**Errances Travels**



55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 560 Eu |
| Delhi | - | 560 Eu |
| Bangkok | - | 550 Eu |
| Colombo | - | 660 Eu |
| Singapour | - | 660 Eu |
| Madras | - | 658 Eu |
| New york | - | 550 Eu |
| Montreal | - | 540 Eu |
| Oslo | - | 315 Eu |
| Toronto | - | 540 Eu |


# சிறீலங்கா வான்படை தனது 4வது `மிக்' விமானத்தை இழந்தது!

(12.06.04)

சிறீலங்கா விமானப் படை தனது நான்காவது `மிக்-27' ரக யுத்த விமானமொன்று கடந்த புதன்கிழமை இழந்துள்ளது. கட்டு நாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு ஐந்து நிமிட நேரத் தினுள் இந்த விமானம் நீர்கொழும்பு வாவிக்குள் வீழ்ந்து வெடித்துச் சிதறியுள்ளது. இயந்திரக் கோளாறு காரணமாக இந்த அனர்த்தம் ஏற் பட்ட போதிலும், விமானம் வாவிக் குள் வீழ்வதற்கிடையில் விமானி `பரசூட்' மூலம் குதித்து உயிர்தப்பி யுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, வழமையாக போர் பயிற்சியிலீடுபடும் இவ் விமானம் கடந்த புதனன்றும் வழ மைபோல் காலை 8.45 மணியள வில் கட்டுநாயக்க விமான நிலை யத்திலிருந்து பயிற்சிக்காகப் புறப்பட்டது. சுமார் ஆயிரம் அடி உயரத்திற்கு மேலெழுந்த நிலை யில், விமானத்தில் திடீரென இயந்திரக் கோளாறு ஏற்படவே விமானம் தீப்பற்றிக் கொண்டது. உடனடியாக, விமானி இது பற்றி விமானப் படைத்தள கட்டுப்பாட்டு நிலையத்திற்கு அறிவிக்கவே, சிறி தும் தாமதியாது விமானத்தை தரையிறக்குமாறு அவருக்கு பணிப் புரை வழங்கப்பட்டுள்ளது. இதை யடுத்து அவர் விமானத்தை திருப்பி தரையிறக்கும் முயற்சியிலீடுபட்ட போது, விமானம் கட்டுப்பாட்டை இழந்து, தலைகீழாக நீர்கொழும்பு வாவியை நோக்கி வேகமாக இறங் கவே, விமானி உடனடியாக பர சூட் மூலம் வெளியே குதித்துள்ளார். மிக வேகமாக வந்த விமானம் வாவிக்குள் வீழ்ந்து பெரும் தீப் பிளம்புடன் வெடித்துச் சிதறியது.

விமானம் ஆபத்தில் சிக்கிய தையடுத்து நீர்கொழும்பு வாவி நோக்கி விரைந்து வந்த உலங்கு வானூர்தியொன்று வாவியினுள் தத்தளித்துக் கொண்டிருந்த விமா னியை மீட்டது. இதேநேரம் விமா னம் வீழ்ந்த பகுதி நோக்கி மீன் பிடிப் படகுகளும் கடற்படைப் படகுகளும் விரைந்து வந்துள்ளன. விமானம் வீழ்ந்து நொருங்கிய பகுதிக்கு விமானப் படையினரும் படகுகளில் வந்து அப்பகுதியில்




பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடு பட்டனர். விமானத்தின் முன்பகுதி சேற்றுக்குள் தலைகீழாக குப்புற வீழ்ந்த நிலையில், பின்புற இறக்கை பகுதி நீருக்கு வெளியே தெரிந்தது.

சிறீலங்கா விமானப் படையினர் வசம் தற்போதுள்ள நான்கு மிக் போர் விமானங்களில் ஒன்றாக இந்த மிக்-27 விமானமிருந்தது. இதனுடன் மற்றொரு விமானமும் பயிற்சியிலீடுபட்டிருந்த போதும், அது எதுவித ஆபத்துமின்றி தரை யிறங்கியது. உக்ரேன் தயாரிப்பான இவ்விமானம், சுமார் இரண்டு மில்லியன் டொலர் பெறுதியான தெனவும் தெரிவிக்கப்படுகிறது. இதற்கு முன்னர் 2001ம் ஆண்டு மற்றொரு மிக்-27 விமானம் கட்டு நாயக்க விமானத்தளச் சுற்றாடலில் வீழ்ந்து நொருங்கியதில் அதன் உக்ரேன் விமானி உயிரிழந்தது டன் பொதுமக்கள் 7 பேர் காய மடைந்ததும் தெரிந்ததே. அத் துடன், கட்டுநாயக்க விமானப் படைத்தளம் மீது கறுப்பு யூலை தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட பாரிய தாக்குதலில் இரு மிக்-27 ரக போர் விமானங்கள் மற்றும் இரு சுப்பசொனிக், கிபிர் விமானங் களையும் சிறீலங்கா விமானப் படையினர் இழந்திருந்தமை குறிப் பிடத்தக்கது.

இதேவேளை `மிக்' ரக போர் விமானங்கள் பறப்பது இடைநி றுத்தி வைக்கப்பட்டுள்ளதாக விமா னப்படைத் தளபதி ஏயார் மார்ர்ல் டொனல்ட் பெரேரா தெரிவித்துள் ளார். `மிக்- 27' வீழ்ந்து நொருங் கியதையடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்த விமான விபத்து தொடர்பாக விசாரணை செய்ய உக்ரேனிலிருந்து விமானத் தயாரிப்பு நிறுவன பொறியியலாளர் குழுவொன்று இலங்கை வரவுள் ளது. அவர்களின் விசாரணை அறிக் கைகள், மற்றும் மீட்கப்பட்டுள்ள விமானப் பாகங்கள் மீதான பரி சோதனை அறிக்கை சமர்ப்பிக்கப் படும் வரை, `மிக்' விமானங்கள் பறப்பது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

## போர் விமானங்கள், போர்க் கப்பல்கள் சிறீலங்கா அவசரமாக கொள்வனவு

(14.06.04-)

சிறீலங்கா விமானப் படையும், கடற்படையும் தமக்குத் தேவை யான போர்க் கலங்களை வாங்கு வதில் அதிக அக்கறை காட்டத் தொடங்கியுள்ளன. சிறீலங்கா விமா னப் படையினர் முன்னுரிமை அடிப்படையில் போர் விமானங் கள், உலங்குவானூர்திகள் மற்றும் நவீனரக பயிற்சி விமானங்களைக் கொள்வனவு செய்வதில் தீவிர அக் கறை காட்டி வருகின்றது. போர் விமானங்களுக்கும், யுத்த உலங்கு வானூர்திகளுக்கும் ஏற்பட்டுள்ள பெரும் பற்றாக்குறையை அடுத்தே கிபிர், மிக்-27, கே 8 விமானங் களையும், எம்.ஐ.-17 ரக உலங்கு வானூர்திகளையும் உடனடியாகக் கொள்வனவு செய்ய வேண்டியிருப் பதாக விமானப்படையின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அண்மையில் கிபிர் பயிற்சி விமானமொன்று கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் விமானப் படையை உடனடியாகப் பலப்படுத் துவதற்காக புதிய போர் விமானங் களையும், பயிற்சி விமானங்களை யும் போக்குவரத்து உலங்குவா னூர்திகளையும் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளதாகவும், சிரேஷ்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, சிறீலங்காக் கடற் படையினருக்கு அமெரிக்காவிட மிருந்து நவீனரக போர்க்கப்பல் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன. இந்தக் கப்பல் கொள்வ னவு தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கென கடற்படை அதிகாரிகள் கொண்ட குழுவொன்று இன்னும் இரு வார காலத்துக்குள் அமெரிக்கா செல்லவுள்ளது.

நீண்டகால கடனுதவி அடிப்ப டையில் அமெரிக்கக் கடற்படைக் குச் சொந்தமான `என்கரேஜ்' என்ற போர்க்கப்பலையே சிறீலங்கா கடற்படை கொள்வனவு செய்யவுள் ளது. சிறீலங்கா கடற்படை பெற் றுக் கொள்ளவுள்ள இக் கப்பலின் கடமைகளுக்கென பயிற்சி பெற அதிகாரிகள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், கப்பல் பணிகளும் அவர்களுக்கு பொறுப் பளிக்கப்பட்டுள்ளன.

70 பேர் கடமையாற்றக் கூடிய துடன், உலங்குவானூர்திகள் இர ண்டை நிறுத்தி வைக்கக்கூடிய வசதியும் தூர இலக்கு கனரக ஆயுதங்கள் பலவற்றையும் இக் கப்பல் கொண்டுள்ளது என்று கடற்படை அதிகாரியொருவர் தெரி வித்துள்ளார். இந்தப் போர்க்கப் பலை யூலை இறுதிக்குள் எடுத்து வருவதற்கான சகல ஏற்பாடுகளும் கடற்படையினரால் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

## சிறீலங்காவின் புதிய இந்திய தூதராக நிருபமா ராவ்

(14.06.04)

சிறீலங்காவிற்கான புதிய இந் தியத் தூதுவராக நிருபமா ராவ் நியமிக்கப்படவுள்ளார். தற்போதைய இந்தியத் தூதுவர் நிருபம் சென் நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்தியாவின் நிரந் தரப் பிரதிநிதியாக நியமனம் பெற வுள்ளார்.சிறீலங்காவிற்கான புதிய தூதுவராக நியமிக்கப்படவுள்ள நிருபமா ராவ் தற்போது இந்திய வெளிவிவகார அமைச்சின் தலை மைச் செயலகத்தின் நிர்வாக பிரி வின் மேலதிக செயலாளராக பணிபுரிந்து வருகிறார். அதற்கு முன்னதாக இந்திய வெளிநாட்ட மைச்சின் பேச்சாளராக பணிபுரிந்த இவரே வெளிநாட்டமைச்சில் பணி புரிந்த முதல் பெண் பேச்சாளராக



வும் கருதப்படுகிறார். அத்துடன் சிறீலங்காவிலும் சிறிது காலம் தூதரகத்தில் கடமையாற்றியுள்ளார்.

இந்திய-சீன எல்லைப் பகுதி பிணக்கிற்கான தீர்வு எட்டப்படு வதற்கு காரணமாய் இருந்த பேச்சு வார்த்தை குழுவிற்கும் இவர் தலை மையேற்றிருந்தவர். இதேவேளை, இந்தியாவின் பிரதமராய் மன் மோகன் சிங் பதவியேற்ற பின் இந்திய வெளிநாட்டமைச்சில் மேலும் பல மாற்றங்களும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதற்கமைய, இந் தியாவின் பிரிட்டிஷ் தூதுவராக இருந்த றொனன் சென் இந்தியா விற்கான அமெரிக்க தூதுவராக நியமிக்கப்படவுள்ளார். இதே போலவே, ஐக்கிய நாடுகள் சபைக் கான இந்திய நிரந்தர பிரதிநிதி யாய் பணிபுரியும் கமலேஷ் சர்மா பிரிட்டனுக்கான இந்திய தூதுவ ராக நியமிக்கப்படவுள்ளார்.

## ரட்ணசிறி பறக்க விட்ட சமாதானப் புறா கழுத்து முறிந்து வீழ்ந்து இறந்தது

அமெரிக்காவினால் நடாத்தப் படும் பல்தேசிய படைத்துறைப் பயிற்சிப் பட்டடறையின் போது சிறீலங்காவின் அமைச்சர் ரட்னசிறி விக்கிரமநாயக்காவால் பறக்கவிடப் பட்ட சமாதானப் புறா கழுத்து முறிந்த நிலையில் இறந்து வீழ்ந் துள்ளது. குக்குளு கங்கையில் உள்ள சிறீலங்காப் படையினரின் முகாமில் இடம்பெற்ற பல்தேசிய படையினர் கலந்து கொண்ட படைத்துறைப் பயிற்சிப் பட்டறை யின் போது, அமெரிக்காவின் ஆசியப் பிராந்திய கட்டளைத் தள பதி, சிறீலங்காவுக்கான அமெரிக் கத் தூதுவர் மற்றும் பலர் கலந்து கொண்டதோடு, நிகழ்வின் ஆரம் பமாக சமாதானப் புறாக்களையும் வானில் பறக்கவிட்டனர். இப்பயிற் சிப் பாசறை நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட புத்தசாசன அமைச்சரும், பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் படைத் துறையின் பிரதியமைச்சருமான ரட்னசிறி விக்கிரமநாயக்காவால் பறக்கவிடப்பட்ட சமாதானப் புறா வானில் பறந்த சில நொடிகளில் கழுத்து முறிந்த நிலையில் இறந்து வீழ்ந்துள்ளது. இந்நிகழ்வால் ரட் ணசிறி மிகவும் வேதனையடைந் துள்ளதாகவும், அபசகுணமாக இடம்பெற்ற இந்நிகழ்வு தொடர் பாக அச்சம் கொண்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

"SHELVA" "ZUG"
Credit and Insurance
குறைந்த வட்டியில் அதிகூடிய
வங்கிக்கடன்
30% வீதத்தில் வாகனக் காப்புறுதி
சாரதிப் பத்திரம் இல்லாவிட்டாலும் 30 மட்டுமே...
வீட்டுக்காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
இலங்கையிலிருந்து சுவிஸ் வருபவர்களுக்கான மருத்துவக் காப்புறுதி
(Visa கிடைக்காவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்)
"SHELVA" "ZUG"
T.Thangarajah
Buonaserstr. 2
6343 Rotkreuz
Switzerland
Telefon
041 790 64 63
041 790 64 66
Fax
041 790 64 68
Natel
079 514 64 28

# சட்டநிபுணர்களுடனான முக்கிய ஆலோசனை

# தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழு சுவிஸ் வருகிறது

(14.06.04)

சிறீலங்கா அரசுடன் சமாதானப் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிக்கும் பட்சத்தில் அது தொடர்பாக தங்களது சட்ட மற்றும் அரசியலமைப்பு நிபுணர்களுடன் முக்கிய ஆலோசனைகளை நடத்துவதற்காக, விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவொன்று எதிர்வரும் 18ம் திகதி சுவிற்சர்லாந்து வரவுள்ளது. ஜெனீவாவில் எதிர்வரும் 20ம் திகதி நடைபெறவுள்ள இந்த ஆலோசனைக் கூட்டத்தில், உலகின் பல்வேறு பாகங்களிலுமிருந்து விடுதலைப் புலிகளின் சட்ட நிபுணர்களும் அரசியலமைப்பு நிபுணர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இலண்டனில் தற்போது தங்கியிருக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளதாகவும் தெரியவருகிறது. அத்துடன், சிறீலங்காவின் முன்னாள் சட்டமா அதிபர் சிவா பசுபதியும் கலந்துகொள்ளவுள்ளதாகவும் தெரியவரும் அதேவேளை, விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் மற்றும் பெண் போராளிகள், கிழக்கு மாகாணப் போராளிகள் ஆகியோரும் இடம்பெறுவர் எனவும் தெரியவந்துள்ளது.



இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து, சுவிஸ் வெளிநாட்டமைச்சு உயரதிகாரிகளையும் விடுதலைப் புலிகள் சந்தித்து பேசவுள்ளனர். இதற்கான அழைப்பை சுவிஸ் வெளிவிவகார அமைச்சு விடுதலைப் புலிகளுக்கு விடுத்துள்ளது.

## ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல்

### ஆளும் கட்சிகள் தோல்வி - எதிர்க்கட்சிகள் வெற்றி

(14.06.04)

ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்திற்கு கடந்த ஞாயிற்றுக் கிழமை நடந்த தேர்தலில் பெரும்பாலான நாடுகளின் ஆளும் கட்சிகள் தோல்வியைச் சந்தித்திருக்கின்றன. குறிப்பாக ஐக்கிய இராச்சியத்தின் றொனி பிளேயர் தலைமையிலான தொழிற் கட்சியும், இத்தாலியின் சீவியோ பெர்லஸ்கோனியின் வலதுசாரிக் கட்சியும் படு தோல்வியைச் சந்தித்திருக்கின்றன.

மொத்தமாக 732 ஆசனங்களுக்காக நடந்த தேர்தலில் ஐரோப்பிய மக்கள் கட்சி 277 ஆசனங்களையும் ஐரோப்பிய பொதுவடமைக் கட்சி 199 ஆசனங்களையும் முற்போக்கு ஜனநாயகக்கட்சி 68 ஆசனங்களையும் கைப்பற்றி முன்னணியில் உள்ளன. இவை மூன்றும் இடதுசாரி அணிகளைச் சேர்ந்தவையாகும். றொனி பிளேயருடைய தொழிற்கட்சி 1999 தேர்தலை விட இம்முறை 6வீத வாக்குச் சரிவை எதிர்நோக்கியது. அதேபோல ஜேர்மனியின் சமூக ஜனநாயகக்கட்சியும் 9 வீத வாக்குச் சரிவை எதிர்நோக்கியது. பிரான்சில் மொத்தமுள்ள 78 ஆசனங்களில் எதிர்க்கட்சியான சோசலிசக் கட்சி 30 ஆசனங்களைப்பெற்று முன்னணியில் உள்ளது. ஸ்பெயின் சோசலிசக்கட்சி 54 ஆசனங்களில் 25 ஆசனங்களைப் பெற்று வெற்றியீட்டியிருக்கின்றது. அண்மையில் ஆட்சிக்கு வந்த இந்தக்கட்சி ஈராக்கில் இருந்து துரிதமாக படைகளை மீளப்பெற்றதற்கு மக்கள் அளித்த அங்கீகாரமே இந்த வெற்றி என்று அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்தத் தேர்தல் முடிவுகள் பொதுவாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் ஆளும் அரசாங்கங்களுக்கு உடனடியாக எந்த பாதிப்பையும் தராவிட்டாலும் அந்த அரசாங்கங்களின் செல்வாக்கு வீழ்ச்சியை மக்கள் புரிந்துகொள்ள இது உதவும். பொதுவாக முன்னைய தேர்தலை விட இம்முறை வாக்களிப்பு வீதம் மிகக்குறைவாக இருந்துள்ளது. ஒட்டுமொத்தமாக 44 சதவீதத்திற்கும் குறைவான மக்களே வாக்களித்துள்ளனர். பிரான்ஸ், டென்மார்க், ஜேர்மனி போன்றநாடுகளில் வாக்களிப்பு வீதம் பெரிதும் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## அமைதி முயற்சியில்....

1ம் பக்கத் தொடர்ச்சி

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து இரட்டை வேடமிட்டு மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டு வரும் ஜனாதிபதி உலக நாடுகளையும், விடுதலைப் புலிகளையும் ஏமாற்றி வருவதாகவும் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


வடக்கு-கிழக்கு இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்த பேச்சுவார்த்தைகளையும், இலங்கை இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகளையும் ஏககாலத்தில் தொடர வேண்டும் என ஜனாதிபதி நிபந்தனைகளை விதிக்க ஆரம்பித்திருப்பதாக விடுதலைப் புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக தமிழீழ விடுதலைப் புலிகளை ஏற்றுக் கொண்டு பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்ட இடத்திலிருந்து மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும் கூறியிருந்த ஜனாதிபதி, இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தைகள் தொடரும் என்றும் தெரிவித்திருந்ததையும் இவ்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு விடுதலைப் புலிகளுடன் மட்டுமே பேச்சுவார்த்தைகளை நடாத்தப் போவதாக தெரிவித்திருந்த ஜனாதிபதியின் கூற்றுக்கள், சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் முன்னெடுக்கப்படும் என்ற நம்பிக்கையை தோற்றுவித்திருந்ததாக விடுதலைப் புலிகள் இவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்க தற்போது விதித்து வரும் நிபந்தனைகள் இந்த நம்பிக்கைகளை சிதறடித்து விட்டதாகவும் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொங்கோவில் இராணுவ புரட்சி

### அதிபரின் ஆதரவு படைகள் முறியடித்தன

(13.06.04)



ஆப்பிரிக்கா கண்டத்தில் உள்ள கொங்கோ நாட்டில் அதிபர் ஜோசப் கபிலாவுக்கு எதிராக திடீர் இராணுவ புரட்சி ஏற்பட்டது. எனினும் சில மணி நேரத்திலேயே கொங்கோ அதிபரின் ஆதரவு படைகள் அதனை முறியடித்தன. கொங்கோவில் அதிபர் ஜோசப் கபிலா தலைமையிலான கூட்டணி ஆட்சி நடந்து வருகிறது. இந்நிலையில், கொங்கோ இராணுவத்தில் ஒரு பிரிவினர் கடந்த 11ம் திகதி அதிகாலை அரசுக்கு எதிராக திடீரென்று புரட்சியில் ஈடுபட்டனர். இராணுவ உயர் அதிகாரி எரிக் லைஸ்கே தலைமையிலான இந்த படையினர் தலைநகர் கின்ஷாசாவில் மின்சார வழங்கல்களை துண்டித்தனர். இதனால் நகரம் இருளில் மூழ்கியது. அதிபர் ஜோசப் கபிலாவின் மாளிகையை புரட்சி படையினர் கைப்பற்ற முயன்றனர். இதைத் தொடர்ந்து அவர்களுக்கும், அரசு ஆதரவுப் படைகளுக்கும் இடையே கடும் துப்பாக்கி சண்டை நடந்தது. முடிவில் புரட்சி படையினர் ஒடுக்கப்பட்டனர். புரட்சிக்கு தலைமை தாங்கிய இராணுவ உயர் அதிகாரி எலிக் லைஸ்கே புரட்சி முறியடிக்கப்பட்டதை தொடர்ந்து தலைமறைவாகி விட்டார். அவரை அதிபரின் படை தேடி வருகிறது.

இதேவேளை, அதிபரின் பாதுகாப்பு படையினர் சிலரும் இந்த திடீர் புரட்சியில் கலந்து கொண்டதாக கூறப்படுகிறது. புரட்சியின் போது அரசு தொலைக்காட்சி ஒளிபரப்பு நிறுத்தப்பட்டது. பின்னர் சிறிது நேரத்தில் மீண்டும் ஒளிபரப்பு தொடங்கியது. அப்போது தொலைக்காட்சியில் பேசிய கொங்கோ வெளியுறவு அமைச்சர் அன்டாஸ்னே கோண்டா, இராணுவத்தில் ஒரு சிறு குழுவினர் வன்முறையில் ஈடுபட்டதாக கூறினார். தகவல் தொடர்பு அமைச்சர் விதாலே காமர்கே கூறுகையில், நிலைமை அரசின் முழு கட்டுப்பாட்டில் இருப்பதாக தெரிவித்தார். புரட்சியில் ஈடுபட்டவர்கள் இராணுவ முகாமுக்கு திரும்பி விட்டதாகவும், இரத்தம் சிந்தாமல் புரட்சி ஒடுக்கப்பட்டதாகவும் அதிகாரி ஒருவர் கூறினார்.

### வன்னியில் வடக்கு - கிழக்கு அபிவிருத்தி தொடர்பான

## திட்டமிடல் கருத்தரங்கு

(15.06.04)

வடக்கு கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனங்களை ஒருங்கிணைத்து அவற்றின் செயற்பாடுகளை ஒரு வேலைத்திட்டத்தின் கீழ் கொண்டு வருவது தொடர்பாக கிளிநொச்சியில் இன்று நடைபெறுகின்றது. கிளிநொச்சியில் உள்ள திட்டமிடல் மற்றும் மேம்பாட்டிற்கான செயலகத்தில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சுப.தமிழ்ச்செல்வன் கலந்து கொள்ளவுள்ளார்.

வடக்கு கிழக்கில் பணியாற்றும் அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் ஐ.நா. அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இந்த மாநாட்டில் பங்குபெற்றவுள்ளனர். வடக்கு கிழக்கின் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் உள்ள இடையூறுகள், மீள் குடியேற்றம், கண்ணிவெடி அகற்றல் மற்றும் சர்வதேச நிதியுதவியை பெற்றுக்கொள்வது தொடர்பான பல்வேறு விடயங்கள் இந்த மாநாட்டில் ஆராயப்படவுள்ளன. பல அரசார்பற்ற நிறுவனங்கள் தன்னிச்சையாக வடக்கு - கிழக்கில் பணிகளை மேற்கொள்வதை ஒரு ஒழுங்கிற்குள் கொண்டுவருவது தொடர்பாகவும் இன்றைய மாநாட்டில் கலந்துரையாடப்படும் என வன்னிச் செய்திகள் தெரிவித்தன.

உங்கள் பிள்ளைகளும் சுவிஸ் நாட்டில் உயர் கல்வி பெற்று நல்ல தரமான தொழில்களை பெறமுடியும்.

சுவிஸ் நாட்டின் பிரபல மொழியியல் **ஆசிரியர் லிங்கம்** அவர்களின் நெறியாள்கையில்
பாடசாலை மாணவர்களுக்கான டொச்மொழிக்கல்வி ஆரம்பமாகின்றது.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணிமுதல் 12 மணிவரை
5ம், 6ம் வகுப்பு மாணவர்களுக்கு
**இடம்: Breitenreinplatz -27, Bern**

புதன்கிழமைகளில் மாலை 6 மணிமுதல் 8 மணி வரை
3ம், 4ம் வகுப்பு பாடசாலை மாணவர்களுக்கு
**இடம்: Eigerplatz, Bern**

**தொடர்புகளுக்கு: Lingam master - 062 79741 64 / 079 334 47 33**

ஈழமுரசு
ஐரோப்பா
POOBALAM WEEKLY

# முரண்பாடுகளின் மொத்த உருவம்

காலத்திற்கு காலம், நேரத்திற்கு நேரம், சந்தர்ப்பத்திற்கு ஏற்ற மாதிரி சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா கருத்துக்களை வெளியிட்டுவருவது உலகமே இன்று அறிந்த ஒன்று. ஒருமுறை சொன்ன கருத்துக்கு முரணாக, அடுத்த தடவை அவர் சொல்லும் கருத்து அமைந்திருக்கும். கடந்த பத்து ஆண்டுகால சந்திரிகாவின் ஆட்சியில் அவர் ஆற்றிய உரைகளையும், வழங்கிய செவ்விகளையும் தொகுத்துப் பார்த்தால், அதிர்ச்சி தான் ஏற்படும். அவ்வளவிற்கு ஒன்றுக்கு ஒன்று முரண்பாடான கருத்துக்கள் நிறைந்து கிடக்கும். முரண்பாடுகளின் மொத்த உருவமாக சந்திரிகா காட்சியளிப்பார்.

இதன் ஒரு பகுதிதான் கடந்தவாரம் அவர் தொலைக்காட்சியில் ஆற்றியுள்ள உரையும். ஐக்கிய சுதந்திர முன்னணிக் கூட்டமைப்பு ஆட்சிப்பீட மேறி 60 நாட்கள் நிறைவடைந்துள்ளமையை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு சந்திரிகா உரையாற்றுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. கடந்த 12ம் திகதி சனிக்கிழமை அவ் உரை தொலைக்காட்சி வழியாக ஒளி பரப்பட்டது. ஆனால் அந்த உரை ஒளிபரப்பட்டபோது சந்திரிகா இலண்டனில் இருந்துள்ளார்.

தனது உரைக்கு ஜே.வி.பி. மற்றும் இனவாத மற்றும் பௌத்த மதவாத அமைப்புகளிடம் இருந்து கடும் எதிர்ப்புக்கள் கிளம்பும் என்பதை முன்கூட்டியே உணர்ந்திருந்த சந்திரிகா, தனது உரையை ஒளிப்பதிவு செய்து கொடுத்துவிட்டு, உடனடியாகவே இலண்டன் புறப்பட்டு வந்துவிட்டார். அவர் நாட்டில் இல்லாத நேரமே அவரது இந்தக் கருத்துக்கள் ஒளிபரப்பப்பட்டுள்ளன. அவர் எதிர்பார்த்ததுபோலவே அவரது உரைக்கு கடுமையான எதிர்ப்பு ஜே.வி.பி. தரப்பில் இருந்து கிளம்பியுள்ளதுடன், இடைக்கால நிர்வாகசபையை வழங்குவது குறித்து விடுதலைப் புலிகளுடன் பேசினால், தாம் கூட்டமைப்பில் இருந்தும் வெளியேற வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அது எச்சரித்திருக்கின்றது.


சந்திரிகா தனதுரையில் அவ்வாறு என்ன சொல்லிவிட்டார், எதற்காக ஜே.வி.பி. இவ்வளவு கோபம் கொள்கின்றது என்பதுதான் ஆச்சரியமான கேள்வி. ஏனெனில் இனப் பிரச்சினைக்கான இறுதித் தீர்வு பற்றியே சமாதானப் பேச்சுக்களில் முதலில் பேசவுள்ளதாகவும், பேச்சுகள் தீர்க்கமான ஒரு கட்டத்தை எட்டிய பின்பே வடக்கு - கிழக்கிற்கான இடைக்காலத் தன்னாட்சி நிர்வாக சபை யோசனையை ஆராயலாமென்றும் கூறிவந்த சந்திரிகா, இந்த உரையின் மூலம் தனது நிலைப்பாட்டிலிருந்து அதிரடியாக இறங்கி வந்திருப்பதான ஒரு தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளார். தன்னை ஒரு சமாதானப் புறாவாகவும், ஆட்சியில் அமர்ந்து கடந்த 60 நாட்களாக தான் சமாதானத்திற்காக உழைத்து வருவதாகவும் தனது உரையில் சுட்டிக்காட்ட முனைந்திருக்கிறார் சந்திரிகா. இதில் தமிழ் மக்களுக்கு எதனையும் வழங்கிவிடப்போவதாக கூறிவிடவில்லை. அல்லது, விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு, விடுதலைப் புலிகளுடன் மட்டுமே பேசுவதாகவும், இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்து முதலில் பேசி, இணக்கம்கண்டு, அதை நடை முறைப்படுத்திய பின்பு, இறுதித்தீர்வு குறித்து ஆராயலாம் என்றோ சந்திரிகா எதனையும் சொல்லிவிடவில்லை. சுருக்கமாகச் சொல்வதென்றால் சந்திரிகா பழைய மொந்தையில் புதிய கள்ளை ஊற்றியுள்ளார், அவ்வளவுதான்.

விடுதலைப் புலிகளால் இடைக்கால நிர்வாகசபை தொடர்பான ஆலோசனை கையளிக்கப்பட்ட உடனேயே, ரணில் அரசின் அமைச்சுக்களைப் பறித்து ஆட்சியை கலைத்து, ஜே.வி.பி.யுடன் கூட்டமைத்து தேர்தலை நடாத்தியவர் சந்திரிகா. எனினும் தேர்தலில் அவர் எதிர்பார்த்தளவிற்கு வெற்றி பெறமுடியவில்லை. இப்போது பலமற்ற சிறுபான்மை அரசாக ஆட்சியில் ஆட்டம் கண்டுகொண்டிருக்கின்றார். எனவே, உடனடியாக மீண்டும் ஒரு தேர்தலை சந்திக்கவேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டால், தன்னை ஒரு சமாதானப் பிரியையாகக் காட்டிக்கொள்ள வேண்டியது அவசியம். சமாதான வேடம்போடுவதன் மூலமே தொடர்ந்து ஆட்சியையும் அதிகாரத்தையும் தக்கவைத்துக்கொள்ள முடியும் என்பதுடன், சர்வதேச உதவி வழங்கும் நாடுகளால் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிதியை பெற்றுக்கொள்வதற்கும் இந்த வேடமே இன்று சந்திரிகாவுக்கு தேவையாக இருக்கின்றது. எனவே, ஜே.வி.பி. என்ற ஓணானை மடியில் கட்டி அவஸ்தைப்பட்டாலும், இன்று சமாதானக் குரலை எழுப்பவேண்டிய கட்டாயத்தில் சந்திரிகா இருக்கின்றார். அதனால், இவ்வாறான உரைகள் மூலம் மக்களையும் உலக சமூகத்தையும் ஏமாற்றி தனது முன்னைய கசங்கிய சமாதான அங்கியை தூக்கி அணிவதற்கு பகீரதப்பிரயத்தனம் செய்துவருகின்றார்.

இந்நிலையில், அவரிடம் ஒரு தடவை ஏமாந்த சர்வதேசம், மீண்டும் ஒருமுறை ஏமாந்துவிடுமா, அல்லது முரண்பாடுகளின் மொத்த உருவமான சந்திரிகாவின் போலி முகத்திரையை அகற்றி, உண்மையாகவே சமாதானத்திற்காக அர்ப்பணிப்புகளை மேற்கொண்டு வரும் தமிழ்ச் சமூகத்திற்கு அதனை வழங்கவைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுமா என்பதே தமிழ் மக்கள் முன் எழுகின்ற கேள்வி.

# இரண்டாம் கட்ட ஈழப்போர் - ஒரு மீள்பார்வை -

தமிழீழ விடுதலைப் போர் முதலாம் கட்டம், இரண்டாம் கட்டம், மூன்றாம் கட்டம் என வரலாற்று ரீதியில் வகுக்கப்பட்டு இருக்கிறது. ஆரம்ப காலம் முதல் அதிபர் பிறேமதாசா அவர்களுடனான பேச்சுவார்த்தைக்காலம் வரை முதலாம் கட்ட ஈழப்போர் காலம் என்றும், 90ம் ஆண்டுகாலப்பகுதியில் அதிபர் பிறேமதாசா அவர்களுடனான பேச்சுவார்த்தை முறிவடைந்து போர்தொடங்கி சந்திரிகா அம்மையாருடன் பேச்சுவார்த்தை துவங்கும் வரை இரண்டாம் கட்ட ஈழப்போர் காலம் என்றும், சந்திரிகா அம்மையாருடன் பேச்சுவார்த்தை முறிவடைந்து இன்று வரையிலான காலம் மூன்றாம் கட்ட ஈழப்போர் காலம் எனவும் வரையறுக்கப்பட்டுள்ளது.




அந்த வகையிலே ஜூன் 10ம் நாள் தமிழீழ விடுதலைப்போரில் ஒரு முக்கிய நாளாகும். அதாவது 1990ம் ஆண்டு இதே நாளில்த்தான் இரண்டாம் கட்ட ஈழப்போர் வெடித்தது. 90ம் ஆண்டின் முற்பகுதியில் துவங்கிய புலிகளின்தும் அரசினதும் பேச்சுவார்த்தை பிறேமதாசா அரசின் அடாவடித்தனங்களின் விளைவாக 10.06.1990 அன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தின் மூலம் முற்றுப்பெற்றது.

அப்போதைய சிறீலங்காவின் அதிபர் பிறேமதாசாவுக்கும் புலிகளுக்குமிடையே பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கையில், மறுபுறத்தில் அரசின் பல கபடநாடகங்கள் அரங்கேறிக்கொண்டிருந்தன. ஒருநாள் சிறீலங்கா பொலிசாரால் முஸ்லிம் பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுகிறார். அதுபற்றி முறைப்பாடு செய்யச் சென்ற அவளது கணவனுக்கு என்ன நடந்தது என்று தெரியாத நிலையில் மூன்று நாட்கள் கழிந்தன. அவரை விடுதலை செய்யுமாறு கோரிக்கையை பொலிசாரிடம் முன்வைக்கிறனர், விடுதலைப் புலிகள். பொலிசாரே விடுதலைப் புலிகளின் கோரிக்கையை நிராகரிக்கிறார்கள். இறுதியில் மட்டுநகர் பொலிசில் இருந்து விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் தொடுக்கப்படுகிறது. இதனையடுத்து மட்டுநகர் பொலிஸ் நிலையம் விடுதலைப் புலிகளினால் சுற்றி வளைக்கப்படுகிறது. அங்கிருக்கும் சகல பொலிசாரையும் சரணடையுமாறு கோரிக்கை விடுக்கிறார்கள் விடுதலைப் புலிகள். இந்தக்கோரிக்கையை ஒரு பகுதி பொலிசார் ஏற்றுக்கொண்டு சரணடைய, ஏற்றுக்கொள்ள மறுத்தவர்கள் புலிகளுக்கு எதிராக சண்டை செய்கிறார்கள். போர் துவங்குகிறது. மட்டுநகர் பொலிஸ் நிலையம் துவம்சம் செய்யப்படுகிறது. மாவட்டம் முழுவதிலுமுள்ள பொலிஸ் மற்றும் இராணுவ முகாம்களை சுற்றிவளைத்து விடுதலைப் புலிகள் யுத்தம் செய்கிறார்கள். பின்னர் தமிழீழம் முழுவதிலும் வெடிக்கிறது, இரண்டாம் கட்ட ஈழப்போர்.

தமிழீழ விடுதலைப்போரில் இந்த இரண்டாம் கட்ட ஈழப்போர் காலம் முக்கியத்துவம் கொண்ட ஒரு காலப்பகுதியாக அமைந்திருந்தது. கெரில்லா அணிகளாக நின்று சிறீலங்கா படைகளுக்கெதிராக போர் நடத்திவந்த விடுதலைப் புலிகள் ஒரு மரபுப் படையணியாக வளர்ச்சியடைந்து யுத்தம் மேற்கொண்டது இந்தக்காலப் பகுதியில்தான் என்பது யாவரும் அறிந்த ஒரு விடயம். குறிப்பாக இந்த காலப்பகுதியில் நடைபெற்ற சில தாக்குதல்களைப் பார்க்கும்போது இது புலனாகும்.

யாழ். கோட்டையிலிருந்து சிறீலங்கா படையினரை வெளியேற்றியது, மாங்குளம் முகாம் மீதான தாக்குதல். இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஆனையிறவு படைத்தளங்களுக்கு எதிராக புலிகள் மேற்கொண்ட ஆகாய, கடல்வெளிச் சமரைக் குறிப்பிடலாம். குறிப்பாகச் சொல்லப்போனனால் மூன்றாம் கட்ட ஈழப்போரில், புலிகள் உலகம் வியக்கும் பல சாதனைகளை நிகழ்த்துவதற்குரிய படிப்பினைகளை இரண்டாம் கட்ட ஈழப்போரில்தான் கற்றுக் கொண்டார்கள்.



இதற்கு சிறந்த உதாரணமான ஒன்றைக் கூறலாம். இரண்டாம் கட்ட ஈழப்போரில், ஆனையிறவுப் படைத்தளம் மீது ஆகாய கடல்வெளிச்சமர் என்ற பெயரிலான ஒரு மரபுவழிச்சமரை மேற்கொண்டிருந்தார்கள். அந்தபோரில் எதிர்பார்த்தளவுக்கு பலாபலன்களை விடுதலைப் புலிகளால் அடைய முடியவில்லை. அதற்கு காரணம் அப்போது கடற்புலிகளின் வளர்ச்சி குறிப்பிடும்படியாக இருக்கவில்லை. எதிர்பார்த்த பலாபலன்களை ஆனையிறவுச் சமரிலே புலிகள் அடைய முடியாமல்போனமைக்கு இதுவும் ஒரு காரணம். அந்தப்படிப்பினையின் அடிப்படையில் மீண்டும் ஆனையிறவுத்தளம் வெற்றிக் கொள்ளப்பட்டதற்கு ஒரு முக்கிய காரணியாக இருந்தது, கடற்புலிகள் எனலாம். அவர்களின் கணிசமான பங்களிப்பு இப்படை த்தளங்கள் வெற்றிக்கொள்ளப்பட்டதற்கு ஏதுவாக அமைந்தது.

எது எப்படியோ இரண்டாம் கட்ட ஈழப்போர் தமிழீழ விடுதலைப் போரில் மிகவும் முக்கியமான ஒரு காலகட்டம் என்பதில் சந்தேகமில்லை.

**- காந்தகுமார்**
(மட்டு)

# நியதிகளை மாற்றியுள்ள இராணுவத் தளபதி நியமனம்

பல்வேறு இழுபறிகளுக்கு மத்தியில் அடுத்த இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட நியமிக்கப்படுவது உறுதியாகியிருக்கிறது. ஆனால் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டே கொடவின் நியமனம் குறித்த உத்தியோக பூர்வ அறிவிப்பு இது வரை வெளியிடப்படாத போதும் - இந்த நியமனம் குறித்து ஜே.வி.பி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.



சாந்த கொட்டேகொட

சேவை மூப்பின் அடிப்படையில் - சிரேஷ்ட நிலையில் உள்ள அதிகாரியான மேஜர் ஜெனரல் சாந்த கொட்டே கொடவுக்கு இராணுவத்தளபதி பதவி வழங்கப்பட வேண்டும். ஆனால் இதை ஜனாதிபதி சந்திரிகாவோ அல்லது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியோ விரும்பவில்லை. மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட ஐ.தே.கவுக்கு சார்பானவர் என்பதே இதற்குக் காரணமாகும். சேவை மூப்பின் அடிப்படையில் இராணுவத் தளபதியாக நியமிக்க வேண்டும் என்ற கட்டாயம், சனாதிபதி சந்திரிகாவுக்கு இல்லை.

அவர் வேறு தகுதியான எவருக்கும் இப்பதவியை வழங்க முடியும். இந்த நிலையால்தான் இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட நியமிக்கப்படுவாரா என்ற சந்தேகங்கள் எழுந்தன.

இவருக்கு அடுத்தடுத்த நிலையிலுள்ள மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவை இராணுவத் தளபதியாக நியமிக்கக் கூடிய வாய்ப்புகளும் இருந்தன. இதற்கு இராணுவத்துக்குள்ளும், கடும் போக்காளர்கள் மத்தியிலும் பலத்த ஆதரவும் இருந்தது. பல்வேறு ஆலோசனைகளுக்குப் பின்னர் சனாதிபதி சந்திரிகா, சேவை மூப்பின் அடிப்படையில் இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சாந்த கொட்டே கொடவை நியமிக்க முடிவு செய்திருக்கிறார். இவர் எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி பதவியேற்கவுள்ளார்.

1970ம் ஆண்டு பெப்ரவரி 05ம் திகதி இராணுவத்தில் இணைந்து கொண்ட சாந்த கொட்டே கொட 1971இல் பயிற்சியை முடித்து 2ம் லெப்டினனாக இலகு காலாற் படையின் முதலாவது பற்றாலியனில் இணைந்து கொண்டார். 1973 இல் லெப்டினனாகவும், 1976 இல் கப்டனாகவும், 1980 இல் மேஜராகவும், 1988 இல் லெப்.கேணலாகவும், 1991 இல் கேணலாகவும், 1993 டிசம்பரில் பிரிகேடியராகவும், 1998 முதல் மேஜர் ஜெனரலாகவும் பதவி உயர்வு பெற்றார்.

1978ம் ஆண்டுக்குப் பின் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்ட அனைவருமே ஒரு குறிப்பிட்ட அடிப்படைத் தகைமை பெற்றவர்களாக இருந்துவருவர்கள். இரண்டரை தசாப்தகாலமாக - எழுதப்படாத விதியாக இருந்து வந்த நடைமுறையை மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொடவின் நியமனம் மாற்றியமைத்திருக்கிறது.

விடுதலைப் புலிகளின் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், யாழ்.குடாநாட்டுக்கான படைத்தளபதியாக பதவி வகித்த ஒருவரே இராணுவத் தளபதியாக வரும் நடைமுறை உருவானது. பிரிகேடியர் வீரதுங்க, ஹமில்டன் வனசிங்க, சேபால ஆட்டிக்கல, சிசில் வைத்தியரத்ன, ஜெரி டிசில்வா, றொகான் தலுவத்தை, சிறிலால்வீர சூரிய, லயனல் பலகல்ல என்று எல்லோருமே யாழ். குடா நாட்டுத் தளபதியாகப் பதவி வகித்து, இராணுவத் தளபதிப் பதவியைப் பிடித்தவர்கள்தான். ஆனால் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட யாழ். குடா நாட்டுக்கான தளபதிப் பதவியை முன்னெப்போதும் வகிக்காமலேயே - இரண்டு தசாப்த கால மரபை உடைத்த இராணுவத் தளபதியாகப் பதவியேற்கவுள்ளார். ஆனால் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டே கொட நீண்டகாலம் யாழ். குடாநாட்டில் பல்வேறு இராணுவ முகாம்களின் பொறுப்பதிகாரியாகப் பதவி வகித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

பூநகரியில் நிலை கொண்டிருந்த 10வது பிரிகேட்டின் கட்டளைத் தலைமையகம் மண்டைதீவில் இருந்தபோது - கேணலாக இருந்த சாந்த கொட்டேகொட, இதற்குக் கட்டளை அதிகாரியாக இருந்தார். 1993இல் இத்தளம் தாக்கப்பட்டபோது, போதிய முன்னெச்சரிக்கை வழிகளைக் கையாண்டு மேலும் - உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து தாக்குதலை முறியடிக்க படைகளைத் தயார்ப்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு இவர் மீது சுமத்தப்பட்டது. இராணுவ நீதிமன்ற விசாரணைகளில் இவர் மீது தவறு காணப்பட்டாலும், அதற்கு தண்டனை எதுவும் வழங்கப்படவில்லை என்பதால் தப்பித்துக் கொண்டார்.

இதன் பின்னர் இவர் பல்வேறு உயர் இராணுவப் பதவிகளை வகித்ததுடன், இராணுவப் புலனாய்வுப் பிரிவில் அதிக அனுபவம் பெற்றவராகவும் மாறினார். இராணுவப் புலனாய்வுப் பிரிவில் இவர் பெற்றிருக்கும் அனுபவமே, இராணுவத் தளபதிப் பதவியைப் பிடிக்க உதவியிருக்கிறதென்றால் மிகையில்லை. இப்போதுள்ள சூழலில் கடும் போக்குள்ள ஒருவரை இராணுவத்தளபதியாக நியமிப்பது ஆபத்தானது என்பதை சனாதிபதி சந்திரிகா நன்கு உணர்ந்திருக்கிறார். நட்சத்திர நிலைத்தளபதியான மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, இராணுவக் கடும் போக்காளர். இவரது இராணுவச் செயற்பாடுகள் சில, சனாதிபதி சந்திரிகாவுக்குப் பிடித்தாலும் - எவரையும் மதிக்காமல் செயற்படும் தன்மை உட்பட்ட சில நடவடிக்கைகளால் இவருக்கும் அரச தலைமைக்கும் இடையில் முரண்பாடுகள் இருந்தன.

இராணுவ நடவடிக்கைகள் இடம் பெறும் சூழல் ஒன்றில் நிச்சயமாக மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கே வாய்ப்புகள் அதிகமாக இருந்திருக்கும். ஆனால் சமாதான காலத்தில் - புலிகளுடன் நேரடியாக முரண்படாத வகையில், இராணுவத்தைத் தயார் நிலையில் வைத்திருக்கக் கூடிய ஒருவராகவும் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டே கொட இருப்பதால்தான், இராணுவத் தளபதி பதவி அவருக்கு வழங்கப்பட்டது. இராணுவப் புலனாய்வுப் பிரிவில் பெற்ற நீண்டகால அனுபவம், இவரை நெளிவு, சுழிவுகளுக்கு வளைந்து செயற்படக் கூடியவராக இனங் காட்டியதால்தான் இராணுவத் தளபதி பதவி இவரைத் தேடிவந்திருந்தது.

இராணுவத் தளபதி ஒருவருக்கு இப்போது மூன்று முகங்கள் தேவைப்படுகின்றன. இராணுவத்தைக் கட்டுக் கோப்புடன் வைத்திருக்க ஒருமுகம், விடுதலைப் புலிகளுடன் முரண்படாத ஒரு முகம். அதேவேளை கருணா போன்ற புலிகள் எதிர்ப்புச் சக்திகளுடன் இணைந்து செயற்பட இன்னொரு முகம். இதுதான் இப்போது இராணுவத் தளபதிக்குத் தேவைப்படுவது. தற்போதைய தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்லவுக்கு இந்த மூன்று முகம் இருப்பதுபோலவே - மேஜர் ஜெனரல் சாந்த கொட்டே கொடவுக்கும் பொருந்தும் என்பது சனாதிபதி சந்திரிகா எதிர்பார்க்கிறார். இதனால் தான் தனக்கு விசுவாசமாகச் செயற்படக் கூடியவர் என்ற எந்த நம்பிக்கையும் இல்லாவிட்டாலும், இவரை இராணுவத் தளபதிப் பதவிக்கு நியமித்திருக்கிறார்.

**தற்போதைய தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்லவுக்கு இந்த மூன்று முகம் இருப்பதுபோலவே – மேஜர் ஜெனரல் சாந்த கொட்டே கொடவுக்கும் பொருந்தும் என்பது சனாதிபதி சந்திரிகா எதிர்பார்க்கிறார்.**

ஐ.தே.க. சார்பானவர் என்ற மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொடவின் நிலைப்பாடு சற்றுப் பின்னடைவை ஏற்படுத்தினாலும் கூட, ஜனாதிபதி இந்த நியமனத்தில் உறுதியாக இருப்பதாகத் தெரியவருகிறது.

அதேவேளை, இராணுவத்தளபதி மாற்றம் இடம் பெறுவதற்கு ஒரு சில வாராங்களுக்குள் இராணுவக் கட்டமைப்பில் பல முக்கிய மாற்றங்கள் இடம் பெற்றிருக்கின்றன. (மே மாத இறுதிப் பகுதியில் முக்கிய இராணுவ அதிகாரிகள் இடமாற்றப்பட்டும், புதிய பதவிகள் வழங்கப்பட்டும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன)

சனாதிபதி சந்திரிகாவின் பணிப்பின் பேரிலேயே இந்த மாற்றங்களை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஒன்பது பிரிகேடியர் தர சிரேஷ்ட அதிகாரிகளுக்கும் 22 கேணல் தர அதிகாரிகளுக்கும் இடமாற்றங்கள், பதவிப் பொறுப்பு மாற்றங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

ஒரேயடியாக - தானும் பதவி விலகும் சமயத்தில் இப்படிக் கட்டமைப்பு மாற்றம் ஒன்றை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல செய்திருப்பது - மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொடவை முன்னெச்சரிக்கையுடன் எதிர்கொள்ள, ஜனாதிபதி சந்திரிகா போட்டிருக்கும் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டதா என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறது.

**– சுபத்திரா**

## பாரிசில் நாட்டுப்பற்றாளர் நடேசனுக்கு அஞ்சலி



மட்டக்களப்பில் கடந்த மே 31ம் திகதி, இனந்தெரியாதோரால் பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்ட பிரபல பத்திரிகையாளரும் நாட்டுப் பற்றாளருமாகிய திரு. நடேசன் அவர்களுக்கு மரியாதை செய்யும் முகமாக பிரான்ஸ் தமிழர் மனித உரிமைகள் மையத்தினரால் (TCHR) கடந்த 9ம் திகதி பாரிஸ் முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில் அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது.

தமிழினத்தின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் நியாயங்களை எழுத்துத் துறையால் வற்புறுத்திய அந்த ஊடகவியலாளரின் அஞ்சலி நிகழ்வில் பல ஊடகத்துறையைச் சேர்ந்தவர்களும் கணிசமான அளவு பொது மக்களும் கலந்துகொண்டு தமது அஞ்சலியைச் செலுத்தினார்கள்.

தமிழர் மனித உரிமைகள் மையத்தைச் சேர்ந்த வின்சென் தேவசகாயம் தலைமையில் மாலை 6.30 மணிக்கு அகவணக்கத்துடன் ஆரம்பமாகிய இந் நிகழ்வை வழக்குரைஞரும், ஈழமுரசு ஆசிரியர் குழுவைச் சேர்ந்தவருமான திரு. கந்தையா நவரேந்திரன் அவர்கள் தீபம் ஏற்றித் தொடக்கி வைத்தார்.

தொடர்ந்து பல ஊடகத்துறையைச் சேர்ந்தவர்களும் பொதுமக்கள் சிலரும் அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள். ஊடகத்துறை சார்ந்து ஈழமுரசு நிர்வாக ஆசிரியர் திறலோன், ஈழநாடு ஆசிரியர் பாலச்சந்திரன், TTN தமிழ்த் தொலைக்காட்சி செய்தி ஆசிரியர் திரு.சிறீதரன், ஊடகவியலாளர் திரு.ஜெயா, ABC வானொலி கட்டுப்பாட்டாளர் அரியரத்தினம் ஆகியோர் உரையாற்றினர்.

குறிப்பாக எல்லைகளற்ற பத்திரிகைகள் அமைப்பு சார்பாக வருகை தந்திருந்த பிரெஞ்சு ஊடகவியலாளர் Vincent Broselle இன் உரை மிகவும் காத்திரமானதாய் அமைந்திருந்தது. அவர் தனது உரையில் இலங்கை அரசின் அலட்சியப் போக்கைக் கண்டித்ததுடன், பத்திரிகையாளர்களின் உயிர்கள் காக்கப்படவேண்டியதன் அவசியத்தையும், நடேசன் படுகொலையின் சூத்திரதாரிகளைக் கண்டுபிடிப்பதற்குத் தமது முழு ஒத்துழைப்பை வழங்குவதாயும் குறிப்பிட்டார்.

அஞ்சலி நிகழ்வை ஒழுங்கமைத்திருந்த தமிழர் மனிதர் உரிமைகள் மையத்தைச் சேர்ந்த திரு. கிருபாகரன் பேசுகையில், நடேசனின் படுகொலை ஐ.நா சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், தொடர்ந்து தாம் அந்தப் பணியை முன்னெடுப்பதாகவும், குறிப்பிட்டார். ஏற்கனவே நடேசன் மீது கொலை மிரட்டல், அச்சுறுத்தல் மேற்கொள்ளப்பட்டதைத் தமிழர் மனித உரிமைகள் மையம் ஐ.நாவில் முறையிட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

# சந்திரிகாவை ஆட்டுவிக்கும் ஜே.வி.பி. !

ஐக்கிய மக்கள் முன்னணி அரசாங்கம் தற்போது இரண்டுவகையான பிரச்சினைகளை மிகத் தீவிரமாக எதிர்நோக்கி வருகின்றது. ஒன்று பெரும்பான்மையை நிரூபிக்கவேண்டியநிலை. இரண்டாவது ஜே.வி.பியுடனான முரண்பாடு. இந்த இருவகையான பிரச்சினைகளும் ஆரம்பம் முதலே இருந்து வந்தபோதும் இடைக்கால நிர்வாகம் குறித்த பேச்சுவார்த்தைக்கான ஜனாதிபதியின் சமிக்ஞைகள் வெளிவந்த நாள் முதல், தீவிரமடைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. ஜனாதிபதியைப் பொறுத்தவரை தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலண்டனுக்கு புறப்படுவதற்கு முன்னர் கொழும்பிலுள்ள நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்காரை அழைத்து சமாதான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும் தனது நிலைப்பாட்டை உறுதிப் படுத்தியிருக்கின்றார். அது மாத்திரமல்ல, பிரித்தானியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளின் தூதுவர்களையும் அழைத்து பேசியிருக்கின்றார். சமாதானப் பேச்சுவார்த்தை என்பதற்கு அப்பால், நிதியுதவி வழங்கும் நாடுகளிடமிருந்து நிதியைப்பெற வேண்டிய அவசியம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. இருந்தாலும் ஒப்பாசாரத்திற்கேனும் விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகக் கோரிக்கைக்கு அவர் இணங்கியிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.


சந்திரிகா

ஆனால் அரசாங்கத்திற்குள் இருக்கின்ற பிரதான பங்காளிக்கட்சியான ஜே.வி.பி., தங்கள் நிலைப்பாட்டில் இருந்து இறங்கி வந்தது போன்ற ஒரு மாயையைக் காட்டினாலும், இடைக்கால நிர்வாகம் என்றவுடன் அதனை ஈழராச்சியமாக சித்தரிக்க முற்படுவதும், புலிகளுக்கு சம அந்தஸ்த்து வழங்குவதும் அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியாததாகவே இருக்கின்றது. அரசாங்கத்திற்கு பெரும்பான்மை இல்லை என்ற ஒரே காரணத்தைக் காட்டி, ஜனாதிபதியை அச்சுறுத்துவதுடன் தமது நிலைப்பாட்டை ஏற்று செயற்படுத்த வேண்டும் என்ற அழுத்தங்களையும் தினமும் ஜே.வி.பி வழங்கி வருகின்றது. பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும்; அரசாங்கத்தை தொடர்ந்து கொண்டு நடத்த வேண்டும் என்ற சிந்தனை அல்லது நோக்கம் ஜே.வி.பிக்கு கடுகளவேனும் இல்லை. முன்னாள் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரசை அரசாங்கத்தில் இணைத்துக் கொள்வதற்கு ஜனாதிபதி எடுத்த முயற்சிகளுக்கு எல்லாம் முட்டுக்கட்டை போட்டவர்கள் ஜே.வி.பிதான். அது மாத்திரமல்ல, சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் அரசாங்கத்தில் இணைந்துவிடக் கூடாது என்பதிலும் ஜே.வி.பி கவனமாகவே செயற்பட்டு வருகின்றது.

இவ்வாறு பெரும்பான்மை இல்லாமல் அந்தரத்தில் அல்லது முன்னெச்சரிக்கையுடன் அரசாங்கம் எந்த நேரமும் நடந்துகொள்ள வேண்டிய ஒரு நிலையில் இருக்க வேண்டும் என்பதை ஜே.வி.பி விரும்புகின்றது. அப்போது தான் தமது கோரிக்கைகளையும் நிலைப்பாடுகளையும் நிறைவேற்ற முடியும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். இது ஜனாதிபதிக்கு தெரியாதது அல்ல. ஏன், பிரதமர் மகிந்த ராஜபக்சவிற்கு ஜே.வி.பியின் அவ்வாறான திருவிளையாடல் புரியாதது அல்ல. ஆனால் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இருக்கக்கூடிய கருத்து முரண்பாடுகள் அல்லது ஒவ்வாமை, ஜே.வி.பியின் அவ்வாறான திருவிளையாடல்களுக்கு முடிவு கட்டக்கூடிய சாத்தியமான சூழ்நிலையை தோற்றுவிக்கமுடியாமல் இருக்கின்றது. இந்த இரு பிரதான தலைவர்களுக்கும் இடையேயான ஒவ்வாமை ஜே.வி.பிக்கும் சாதகமாக அமைந்திருக்கின்றது. ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து, 'எதிர்கால ஆரோக்கியமான அரசியல்; நிரந்தர சமாதானம் என்பதெல்லாம்' தற்போதைய நிலையில், வெகு தூரம் நோக்கிய சிந்தனையாகவே இருக்கின்றது.

எவ்வாறாயினும் ஜே..வி.பியை முரண்பாட்டிலும் உடன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு அரசாங்கத்தில் உள்ள சிரேஷ்ட அமைச்சர்கள் தீவிரமுயற்சி எடுத்து வருகின்றார்கள். அமைச்சர்களான மங்கள சமரவீர, நிமால் சிறிபாலடி சில்வா, ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே ஆகியோர் ஜே.வி.பியின் பிரசாரச்செயலாளர் விமல் வீரவன்ச, பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவை கடந்த திங்கட்கிழமை காலை சந்தித்து கலந்துரையாடியிருக்கின்றனர். சர்வதேச நிதியுதவிகளை பெறுவதற்காகவேனும் புலிகளுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்க வேண்டும் என்ற கரு-த்தை ஜே.வி.பிக்கு எடுத்துரைத்திருக்கின்றனர். ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பித்தாலும், இடைக்கால நிர்வாகம் குறித்த பேச்சு பேச்சுவார்த்தைக்கு இடமிருக்கக் கூடாது என விமல் வீரவன்ச அழுத்தம் திருத்தமாகக் கூறியிருப்பதாக அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார். ஜனாதிபதி இலண்டனில் இருந்து திரும்பியதும் அது பற்றிய தமது இறுதி நிலைப்பாட்டை அறிவிக்கவுள்ளதாக விமல் வீரவன்ச தங்களிடம் கூறியதாக அமைச்சர் ஜெயராஜ் கூறியிருக்கின்றார். இதனை நோக்குமிடத்து ஜே.வி.பி அரசாங்கத்துடன் ஒத்துப்போவதற்கான வாய்ப்புக்கள் இல்லையென்றே தோன்றுகின்றது.

அதேவேளை மற்றுமொரு பொதுத்தேர்தலை சந்திப்பது குறித்து ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கா, மகரகமவிலுள்ள தமது கட்சித் தலைமையகத்தில் கடந்த திங்கட்கிழமை சிறப்புரை ஒன்றை ஆற்றியிருக்கின்றார். கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றிய சோமவன்ச இன்னுமொரு பொதுத்தேர்தலை சந்திப்பதன் மூலம் ஜே.வி.பி கூடுதலான ஆசனங்களை பெறமுடியும் என்ற கருத்தை வெளியிட்டிருக்கின்றார். ஆகவே கிராம மட்டங்களில் இன்றிலிருந்தே வேலைகளை ஆரம்பியுங்கள் என்று வேண்டுகோள் விடுத்திருக்கின்றார். அரசாங்கம் பெரும்பான்மையை நிரூபிப்பதற்காக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை அரசாங்கத்துடன் இணைத்துக் கொள்வதற்கும் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்றும் சோமவன்ச அடித்துக்கூறியிருக்கின்றார். ஆகவே தான் இவை அனைத்துமே சிறீலங்கா அரசியலில் பெரும் நெருக்கடியை தோற்றுவிப்பதற்கான சந்தர்ப்பங்களாகவே அமைந்திருக்கின்றன. ஆனால் ஜனாதிபதியோ என்ன விலை கொடுத்தாயினும் இந்த அரசாங்கத்தை கொண்டு நடத்திவிடவேண்டும் என்பதில் ஆர்வமாக இருக்கின்றார்.

> ஆகவேதான் இவையனைத்தையும் நோக்குமிடத்து, சிறீலங்காவில் நிரந்தர அமைதியும் ஆரோக்கியமான அரசியலும் அல்லது ஜனாதிபதி கருதுகின்ற சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பித்தல், வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்ளுதல் என்ற எதிர்பார்ப்புக்கள் எல்லாமே கானல்நீர்தான்.

ஆனால் அவரின் இந்த எதிர்பார்ப்பு நிறைவேற வேண்டுமானால், ஜே.வி.பி ஒத்துழைத்தால் மாத்திரமே சாத்தியப்படும்.

பௌத்த குருமாரின் ஆதரவை தங்கள் கட்சிக்கு பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் ஜே.வி.பி காட்டுகின்ற ஆர்வம் கூட, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கு ஏற்புடையதாக இல்லை. பௌத்த குருமாரைக் கொண்ட ஹெல உறுமய என்ற கட்சியைவிட, ஏனைய பௌத்த குருமார் அனைவரையும் தங்கள் வசப்படுத்துவதில் ஜே.வி.பியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தீவிரமாக ஈடுபடுகின்றனர். பௌத்த மகாசங்கப் பிரதிநிதிகளையும் அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகளைச் சேர்ந்த பௌத்த குருமார்களையும் சந்தித்து தமது நிலைப்பாட்டை விளக்கி வருகின்றனர்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு அங்கம் வகிக்கின்ற எதிர்க் கட்சி வரிசையில் ஹெல உறுமய தேரர்கள் அமர்ந்து கொண்டு புலிகளின் ஈழராச்சியக்கோரிக்கைக்கு துணை போகின்றார்கள். அதனாலேதான் ஹெல உறுமயவை தாங்கள் கடுமையாக எதிர்ப்பதாக ஜே.வி.பி கூறிவருகின்றது. ஜே.வி.பியின் இந்தக்கூற்று, ஏனைய பௌத்த குருமார் மத்தியில் அதிகமாக எடுபடுகின்றது என்றே கூறவேண்டும். ஏனெனில் கடந்த நாடாளுமன்ற அமர்வில், அக்மீமன தயாரட்ன தேரர் நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டது, சட்டவிரோதமானது என பௌத்த மகாசங்கம் கண்டித்திருக்கின்றது. புலிகளின் கோரிக்கையை நிறைவேற்றிவரும் ஐக்கிய தேசிய முன்னணியின் ஆதரவுடன் ஹெல உறுமய செயற்படுவதாகவும் பௌத்த மகாசங்கம் சுட்டிக்காட்டி ஆட்சேபனையைத் தெரிவித்திருக்கின்றது. அது மாத்திரமல்ல அஸ்கிரிய பீடாதிபதி உத்தரகித்த தேரர் ஹெல உறுமய அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்காவிட்டாலும் ஐக்கிய தேசிய முன்னணியுடன் சேரக்கூடாது என்று வேண்டுகோள் விடுத்திருக்கின்றார். நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற தாக்குதலில் காயமடைந்த இரு தேரர்களையும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்று பார்வையிட்டிருப்பதையும் ஒரு எச்சரிக்கையாக கருதும்படி உத்தரகித்த தேரர், ஹெல உறுமயவிடம் கூறியிருக்கின்றார். இது குறித்து கருத்து வெளியிட்ட ஹெல உறுமயவின் நாடாளுமன்ற குழுத்தலைவர் எல்லாவல மேதானந்த தேரர், ஈழராச்சியம் கோரும் புலிகளின் செயற்படுகளையும் அவர்களின் ஆதரவாளர்களான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகளையும் தாம் அவதானித்து வருவதாகவும், எந்தக் காரணம் கொண்டும் அவர்களோடு தாங்கள் இணைந்து செயற்பட மாட்டோம் என்றும் கூறியிருக்கின்றார். தமது தேரர்களைத் தாக்கிய அரசாங்க உறுப்பினர்களை தாங்கள் மன்னிப்பதாகவும், ஆனால் தர்மராச்சியத்தை உருவாக்கக்கூடிய செயற்பாடுகளுக்கும், இது பௌத்த நாடு என்பதற்கான அடையாளத்தையும் அரசாங்கம் சரியான முறையில் பேணுமானால், அவர்களுக்கு ஆதரவு வழங்க தயாராக இருப்பதாகவும் கூறியிருக்கின்றார்.


விமல் விரவன்சா

ஆகவேதான் இவையனைத்தையும் நோக்குமிடத்து, சிறீலங்காவில் நிரந்தர அமைதியும் ஆரோக்கியமான அரசியலும் அல்லது ஜனாதிபதி கருதுகின்ற சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பித்தல், வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்ளுதல் என்ற எதிர்பார்ப்புக்கள் எல்லாமே கானல்நீர்தான். ஜே.வி.பி என்ற சக்தி பல வழிகளாலும் தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்களை விதைத்து வருகின்றது. அதனை தடுப்பதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதிக்கோ அல்லது நடுநிலை சிந்தனையாளர்கள் எனப்படுகின்ற சிரேஷ்ட அமைச்சர்களுக்கோ திராணி இல்லை. கடந்த அரசாங்கத்தின் போதுகூட, இனவாதிகளை முட்டிமோதி எதிர்த்துப் பேசுவதற்கு ரணில் விக்கிரமசிங்காவும் பீரிசும், மிலிந்த மொறகொடவும் திராணியற்றவர்களாகவே இருந்தனர். வேறு வகையில் கூறுவதானால் இவர்களின் மறைமுகமான இனவாத சிந்தனைகளே, ஜே.வி.பியின் அவ்வாறான நிலைப்பாடு மேலோங்குவதற்கு காரணமாக அமைந்தது எனலாம். தற்போது இனவாதத்தை தூண்டுவதிலும் பரப்புவதிலும் முன்னிலை வகிப்பது ஜே.வி.பியா ஹெல உறுமயவா என்ற போட்டி நடத்தினால் அதில் வெற்றிபெறப்போவது யார் என்பதை நீங்களே கணக்கெடுத்துக்கொள்ளுங்கள்.

– கொழும்பிலிருந்து **ஊரோடி**

# இந்தியா–இலங்கை இடையே தரைவழிப் பாதை?!

## கடலில் மூழ்கிய பாலத்தை வெளியே கொண்டு வர நடவடிக்கை

தமிழகத்தில் உள்ள தனுஷ் கோடிக்கும் இலங்கையில் உள்ள தலைமன்னாருக்கும் இடையே பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஓர் இயற்கையான கற்பாலம் இருந்ததும் அது கடலுக்குள் மூழ்கிக் கிடப்பதும் இப்போது விஞ்ஞான பூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் (நாசா) செயற்கைக் கோள் ஒன்று சமீபத்தில் இந்திய, இலங்கைப் பகுதிகளைப் படம் பிடித்து அனுப்பியது. அதில் தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையே கடலுக்குள் மூழ்கி உள்ள கற்பாலம் பதிவாகி இருந்ததைக் கண்டனர்.


நெதர்லாந்து நாட்டின் பல்கலைக்கழகத்தில் பூலோகவியல் விஞ்ஞானியாக பணியாற்றும் ஆர். டி.சில்லிங் என்பவர், நாசா செயற்கைகோள்ப் படத்தை மையமாக வைத்துச் சில ஆய்வுகளை மேற்கொண்டார். அப்போது தனுஷ்கோடி - தலைமன்னார் பாலம் பற்றிப் பல புதிய தகவல்கள் கிடைத்தன. தனது ஆராய்ச்சி பற்றி அவர் கூறியதாவது: 'இந்தியாவும் இலங்கையும் இயற்கையிலே ஒரு பாலத்தால் இணைக்கப்பட்டு இருந்தன. இதற்கு ஆதம் பாலம் என்று பெயர். தனுஷ்கோடிக்கும், தலைமன்னாருக்கும் இடையே இருந்த இந்த பாலம் பல குட்டிக் குட்டித் தீவுகள் ஒன்றாக இணைந்து உருவானது. இந்தத் தீவுகள் சுண்ணாம்பால் ஆனவை. கடல் நீருக்கு வெளியே காட்சி அளித்த இந்தச் சுண்ணாம்புக் கற்பாலமானது காலப்போக்கில் கடலுக்குள் மூழ்கிவிட்டது. இப்போது கடல் மட்டத்தில் இருந்து சுமார் 2 மீட்டருக்குக் கீழே சுண்ணாம்புக் கற்பாலம் மூழ்கிக் கிடக்கிறது. நாசா செயற்கைகோள் படத்தில் அதை தெளிவாகப் பார்க்க முடிகிறது.

கடலில் மூழ்கியிருக்கும் பாலத்தை நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திக் கடல் மட்டத்துக்கு மேலே கொண்டு வர முடியும். சுண்ணாம்பு என்பது கல்சியம் கார்பனேட் ஆகும். சுண்ணாம்புப் பாறைக்குள் ஆழமாக துளைகள் போட்டு அதில் சல்பிரிக் அமிலத்தைச் செலுத்த வேண்டும். அப்போது சுண்ணாம்புக்குள் இரசாயன மாற்றம் ஏற்பட்டு ஜிப்சமாக (கால்சியம் சல்பேட்) மாறிவிடும். சுண்ணாம்பை விட ஜிப்சம் அதிக இடத்தை ஆக்கிரமிக்கக் கூடியது. சுண்ணாம்பு ஜிப்சமாக மாறும் போது பாறையின் அளவு பெரிதாகி மேலே எழும். இதனால் கடலுக்குள் மூழ்கிக் கிடக்கும் சுண்ணாம்புக் கற்பாலம் ஜிப்சம் பாலமாக கடல் மட்டத்துக்கு மேலே பல அடிகள் உயரத்துக்கு வெளியே எழும். கடந்த 2000ம் ஆண்டு ஒரு சுண்ணாம்புக் குவாரியில் எங்கள் பல்கலைக்கழகத்தின் சார்பில் நடத்தப்பட்ட சோதனையில் இந்த முயற்சி வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்டது. இதே தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தினால் ஆதம் பாலத்தைப் பல நூறு அடிகள் உயரத்துக்கு மேலே கொண்டு வந்து இந்தியா - இலங்கை இடையே, தரைவழித் தொடர்பை உருவாக்க முடியும். இந்தியத் தொழிற்சாலைகளில் ஏராளமான அளவுக்கு சல்பிரிக் அமிலம் கழிவுப் பொருளாக உற்பத்தி ஆகிறது. அதை 'ஆதம்' பாலத்தைக் கடலுக்கு மேலே கொண்டு வரப் பயன்படுத்தலாம்.' இவ்வாறு விஞ்ஞானி சில்லிங் கூறினார்.




## அப்துல் கலாமின் சுயசரிதை வைரமுத்து குரலில் ஒலிப்பதிவு

சனாதிபதி அப்துல் கலாமின் சுயசரிதை கவிஞர் வைரமுத்துவின் குரலில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது. சனாதிபதி அப்துல்கலாம் 'அக்கினிச் சிறகுகள்' என்ற பெயரில் சுயசரிதை எழுதி இருக்கிறார். அந்தச் சுயசரிதையை சுருக்கமாக ஒலிப்பதிவு செய்யத் தயாரிப்பாளர் ஷோபா விஸ்வநாத் திட்டமிட்டார். இதைத் தொடர்ந்து அப்துல் கலாமின் வாழ்க்கை வரலாற்றுக்குக் கவிஞர் வைரமுத்து குரல் கொடுக்க ஒலிப்பதிவு செய்யப்பட்டது.



வைரமுத்து




அக்கினிச் சிறகுகள்

"புகழ் பெற்ற ஒரு தலைவரின் வாழ்க்கை வரலாற்றைப் பதிவு செய்யக் கவர்ச்சியும், காந்தமும் மிக்க ஒரு குரல் தேவைப்பட்டது. கவிஞர் வைரமுத்துவின் குரல் அதற்குப் பொருத்தமாக இருக்கிறது" என்று ஷோபா விஸ்வநாத் தெரிவித்தார். ராமேஸ்வரம் ரெயில் நிலையத்தில் ஒரு பத்திரிகை திரட்டும் பையனாக வாழ்க்கையை தொடங்கியது முதல் உழைப்பால் அணு விஞ்ஞானி ஆனது வரையிலான அப்துல் கலாமின் வாழ்க்கை வரலாறு வைரமுத்து வாசிப்பில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது. 'அக்கினிச் சிறகுகள்' ஒலிப்பதிவு விரைவில் ஒரு விழாவில் வெளியிடப்பட உள்ளது.

இது குறித்து கவிஞர் வைரமுத்து கூறுகையில், "ஒரு மனிதன் சிகரத்தில் இருப்பது மட்டுமே கண்ணுக்குத் தெரிகிறது. சரிவுகளில் அவன் அடைந்த காயங்கள் கண்ணுக்குத் தெரிவதில்லை. அப்துல் கலாமின் வாழ்க்கை வரலாறு இளைஞர்களுக்கு நம்பிக்கை ஊட்டும்" என்று தெரிவித்தார்.

## விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குமாறு திருமாவளவன் வலியுறுத்தல்



தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடி வரும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்திய அரசு நீக்க வேண்டுமென விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன் வேண்டுகோள் விடுத்துள்ளார். தமிழ்நாட்டின் திருநெல்வேலியில் கடந்த 9ம் திகதி புதன்கிழமை இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின்போதே, அவர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கையில் சமாதான முயற்சிகள் முக்கியமான காலகட்டத்தை எட்டியுள்ள நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிப்பது அவசியமற்றதெனவும், இது தொடர்பாக மத்திய அரசாங்கம் தீர்க்கமான முடிவினை எடுக்க வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். இலங்கையிலுள்ள சிறுபான்மையின மதத்தவர்களின் உரிமைகளுக்கு ஆதரவளிப்பதென தனது குறைந்தபட்ச பொது நிகழ்ச்சித் திட்ட வரைவில் மத்திய அரசு கூறியுள்ளதைத் தாம் வரவேற்பதாகக் தெரிவித்த திருமாவளவன், இலங்கையின் சிறுபான்மையின மக்களின் உரிமைகள் தொடர்பாகவும், இதே நடைமுறையினை மத்திய அரசு கையாள வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## பலாலி விமான நிலையத்தைச் சீர்திருத்த இந்தியா நிபந்தனை?

பலாலி விமானத் தளத்தைத் திருத்திச் சீரமைத்துத் தருவதற்கு இந்தியா முன்வந்திருப்பதாக மீண்டும் தகவல் வெளியாகி இருக்கின்றது. 400 கோடி இந்திய ரூபா செலவில் இந்தப் பணிகளை முடித்துத் தருவதற்கு இணங்கியுள்ள இந்தியா, சிறிலங்கா விமானப்படையைத் தவிர வேறு எந்த அரசோ, விமான நிறுவனமோ இந்த விமானத்தளத்தை உபயோகிக்கக் கூடாதென நிபந்தனை விதித்திருப்பதாக தெரியவருகின்றது.

ஐ.தே.கட்சி அரசாங்கம் பதவியிலிருந்த காலத்திலேயே இந்த யோசனை தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், இந்தியாவின் இந்த நிபந்தனை காரணமாகப் பாலாலி விமானத்தள புனரமைப்பு முன்னெடுக்கப்படவில்லையென்றும் தெரிவிக்கப்படுகின்றது. அண்மையில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் புதுடில்லிக்குச் சென்றிருந்த சமயம் மீண்டும் இந்த யோசனை பரிசீலனைக்கு வந்ததாக அறியப்படுகின்றது.

விமான நிலையத்தின் மீதான சிறிலங்காவின் இறைமையை இந்தியா மறுக்காது போனாலும் ஏதோ ஒருவகையில் அதன் மீது தனக்குக் கட்டுப்பாடு இருக்கவேண்டும் எனக் கருதுவதாகத் தெரிகின்றது. இந்த விமான நிலையத்தை எதிர்காலத்தில் வேறு நாடுகளின் பயன்பாட்டுக்கு அரசாங்கம் விட்டுக்கொடுக்கக்கூடும் என்று இந்தியா அஞ்சுவதாகத் தெரிகின்றது. அமெரிக்காவின் பிரமுகர்கள் யாழ்ப்பாணம் விஜயம் செய்யும் போது தமது நாட்டு விமானத்தையே பயன்படுத்துவது வழமை. கடந்த ஆண்டு அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான கிறி-ஸ்ரினா றொக்காவுடன் அமெரிக்க விமானம் ஒன்று திடீரென பலாலி விமானத் தளத்திற்குச் சென்று இறங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

லாச்சப்பலில் ஒரு புதிய உதயம்
தரமான, கூடவே சுவையான
இறைச்சித் தெரிவுகளுக்கு நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்
லாச் சபலில் யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை
5, Rue Perdonnet, 75010 Paris.
Métro - La Chapelle / Gare du Nord
Tél: 01 40 05 92 91
எமக்கு வேறு கிளை நிறுவனங்கள் இல்லை
யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை
YALPPAANAM BOUCHERIE

ஆட்டு இறைச்சி - மாட்டு இறைச்சி
கோழி இறைச்சி
மான் இறைச்சி - மரை இறைச்சி
காட்டுப் பன்றி - காட்டுக் கோழி
இன்னும்...! இன்னும்...! பலவகை.


Pub-Fr

# பாரிசில் பாரிய தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டம்

## இத்தாலி காவல்துறை வெளிட்ட திடுக்கிடும் தகவல்

(பாரிஸ்)

பாரிஸ் நகரத்தில் தற்கொலைத் தாக்குலை அல்லது அதற்கு ஒப்பான ஒரு பாரிய தாக்குதலை இஸ்லாமிய தீவிரவாதிகள் திட்டமிட்டிருந்ததை இந்தாலிய காவல்துறையினர் கண்டறிந்துள்ளனர். கடந்த 7ம் திகதி திங்கட்கிழமை *எகித்தியன் முஹமட்* என்று அழைக்கப்படும் *றபிறி ஒஸ்மான் ஸயித் அஹமத்* என்ற இஸ்லாமியத் தீவிரவாதியை இத்தாலிய எல்லைக்குள் வைத்துக் கைது செய்து விசாரித்தபோதே இந்தத் தகவல் தெரிய வந்ததாக மிலான் நகர காவல் துறையினரை மேற்கோள் காட்டி இத்தாலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



இந்த நபர் கடந்த மார்ச் மாதம் 11ம் திகதி ஸ்பெயின் தலைநகர் மட்றிட்டில் நடைபெற்ற தொடருந்துக் குண்டுத் தாக்குதல்களின் முக்கிய சூத்திரதாரி என்றும் இவரிடமிருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் இவரது கூட்டாளியான முக்கிய நபர் ஒருவர் பெல்ஜியத் தலைநகர் பிரஸல்சில் வைத்துக் கைது செய்யப்பட்டதாகவும் அந்த ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த இரண்டு சந்தேக நபர்களிடமும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் தொடர்ச்சியாக மேலும் 15 பேர் இத்தாலியின் பல்வேறு பகுதிகளிலும் கைது செய்யப்பட்டதாகவும் அந்த ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. இத்தாலிய நீதித்துறை இவர்களுக்கு எதிராகப் பிறப்பித்துள்ள 27 பக்க தடுப்புக்காவல் உத்தரவில், இவர்கள் பாரிஸ் நகர மெத்ரோக்களின் பாதுகாப்பு மற்றும் வெடிபொருட்கள் தொடர்பான உரையாடல்களைத் தமது கைத்தொலைபேசி மூலம் மேற்கொண்டார்கள் என்றும், பாரிசில் தற்கொலைத் தாக்குதல் நடத்துவது தொடர்பான ஒத்திகை ஒன்றையும் தொலைபேசி மூலமே நடத்தினர்கள் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தத் தகவல்கள் பிரான்சின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைப் பிரிவினருடன் பரிமாறிக் கொள்ளப்பட்டதாக மிலான் பிரதேச காவல்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆனால் பிரான்சின் உள்நாட்டு அமைச்சர் இந்தத் தகவல்கள் இத்தகைய தாக்குதல் ஒன்று நிகழ இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு போதுமானதாக இல்லை என்று கூறியுள்ளார். இந்தத் தகவல்களை அலட்சியம் செய்ய முடியாது என்றாலும் இதை மட்டும் வைத்துக்கொண்டு பாரிசில் தாக்குதல் நடக்கப் போகிறது என்ற முடிவுக்கு வரமுடியாது என்று பிரான்சின் உள்நாட்டு அமைச்சு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். கடந்த மார்ச் மாதம் மட்றிட்டில் நடந்த தொடருந்துக் குண்டுத் தாக்குல்களில் 191 பொதுமக்கள் பலியானது குறிப்பிடத்தக்கது.

# ஜேர்மனியின் கோர்ல்ன் நகரில் குண்டுவெடித்தது

## 22 பேர் காயம். வாகளங்கள் கட்டங்கள் சேதம்

ஜேர்மனியின் நான்காவது பெரிய நகரமான கோர்லன் நகரில் கடந்த 10ம் திகதி மாலை நான்கு மணிக்கு இந்தக் குண்டு வெடித்துள்ளது. மக்கள் நடமாட்டம் நிறைந்த பரபரப்பான கடைத் தொகுதி ஒன்றில் ஒரு மூன்று மாடிக் கட்டடத்துக்கு முன்பாக இந்தக் குண்டு வெடித்துள்ளது. இந்தக் குண்டு வெடிப்புக்கான உண்மையான காரணம் இந்தச் செய்தி எழுதும் வரை கண்டறியப்படவில்லை. இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தின் பின்னணியில் குற்றவியல் செயற்பாடுகளோ பயங்கரவாத நோக்கங்களோ இருக்கக் கூடும் என்று கோர்ல்ன் நகர காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். குண்டு வெடித்த பகுதி




பில் ஒரு முடிசீரமைப்பகம் உடபட பல கடைகளும் அவற்றக்கு முன்புறமாக நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களும் பலத்த சேதத்துக்குள்ளாகின.

துருக்கிய மக்கள் அதிகம் வாழும் பகுதியில் நடந்த இந்தக் குண்டு எங்கும் ஆயிரக்கணக்கான ஆணிகள் சிதறிக்காணப்பட்டதாகவும் இந்தச் சம்பவத்தில் 22 பேர் காயமடைந்தது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவசர உதவி மீட்புப் பணி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# றொனி பிளேயரின் புதிய குடிவரவுக் கொள்கை இனப்பாகுபாட்டை உருவாக்குமென அச்சம்

ஐக்கிய இராட்சியத்துக்குள் வரும் ஆசிய ஆபிரிக்க இன மக்களை கட்டுப்படுத்துவதற்காக பிரித்தான தலைமை அமைச்சர் றொனி பிளேயர் புதிய குடிவரவுக் கொள்கை ஒன்றை வகுத்து வருவதாக அவரது அலுவலக வட்டாரங்களிலிருந்து கசிந்துவந்த தகவல்கள் தெரிவித்தன. கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து குடிவரவுச் சட்டங்களை இறுக்குவதன் மூலம் இதைச் செய்யலாம் என்று றொனி பிளேயர் நம்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுநலவாய அமைப்பு நாடுகளைச் சேர்ந்த இளம் வயதினர் கல்வி கற்பதற்கும் விடுமுறையைக் கழிப்பதற்கும் விடுமுறை நாட்களில் ஐக்கிய இராட்சியத்தில் வேலை செய்வதற்கும் அனுமதியளிக்கும் சட்டங்கள் சட்டவிரோத குடியேற்றக் காரர்களுக்கு உதவுவதால் அவற்றை இறுக்குவதற்கு றொனி பிளேயர் ஆலோசித்து வருகிறார். குறிப்பாக ஆசிய ஆபிரிக்க நாடுகள் விடயத்தில் இந்த இறுக்கத்தைப் பேணுவதற்கும் வெள்ளை இனத்தவர்களை அதிகமாகக் கொண்ட அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கு இதிலிருந்து விதிவிலக்களிக்கவும் பிளேயர் தீர்மானித்திருப்பதாக நம்பப்படுகின்றது.

ஆனால் றொனி பிளேயருடைய இந்த நடவடிக்கை இனப்பாகுபாட்டுத் தன்மை கொண்டதாக அமைந்துவிடும் என்று மனித உரிமை அமைப்புக்கள் எச்சரித்துள்ளன. குடிவரவுச்சட்ட விதிகளை தீர்மானிக்கும் விடயத்தில் இனம் அல்லது தேசியம் ஆகியவை தீர்மானிக்கும் அம்சங்களாக இருக்கக் கூடாதென்ற லிபரல் டெமோகிரட்டிக் கட்சி தெரிவித்துள்ளது.


# இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா ஆதரவு

## - ஜனாதிபதி அப்துல் கலாம் -

இலங்கையின் சிறுபான்மை மொழி, மதக் குழுக்களின் நியாயபூர்வ அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய சமாதான முயற்சிகளுக்கு இந்தியாவின் ஜனநாயக முற்போக்கு முன்னணி அரசாங்கம் ஆதரவளிக்குமென இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

காங்கிரஸ் தலைமையிலான ஜனநாயக முற்போக்கு முன்னணி அரசாங்கத்தின் குறைந்த பட்சபொதுச் செயல் திட்டத்தை இந்திய நாடாளுமன்றத்தின் லோகசபை, ராஜ்யசபை ஆகிய இரு அவைகளிலும் உத்தியோகபூர்வமாக சமர்ப்பதித்துக் கடந்த திங்கட்கிழமை உரையாற்றியபோதே இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு புதிய அரசின் வெளியுறவுக் கொள்கை குறித்து உரையாற்றிய குடியரசுத் தலைவர், இலங்கையிலுள்ள சகல பிரிவினரும் கௌரவத்துடனும் சுயமரியாதையுடனும் வாழ்வதற்கு தேவைப்படும் அம்சங்களை நிறைவேற்றக் கூடியதான சமாதான முன்முயற்சிகளை தனது அரசாங்கம் ஆதரிக்குமென அறிவித்தார்.



அப்துல் கலாம்

அத்துடன், இலங்கையின் ஸ்திரத்தன்மை, ஆட்புல ஒருமைப்பாட்டைப் பேணிப் பாதுகாத்து, மொழி மத சிறுபான்மைக்குழுக்களின் நியாயபூர்வ அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய சமாதான முயற்சிகளுக்கு இந்தியா ஆதரவளிக்கும் என்றும் கலாம் உறுதியளித்துள்ளார்.

இந்திய ஜனாதிபதி புதிய அரசின் கொள்கைப் பிரகடன உரையில் மேலும் தெரிவித்திருப்பதாவது, ‘தெற்காசியாவிலுள்ள அயலவர்களுடன் நெருங்கிய பொருளாதார, அரசியல் பிணைப்புகளை கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளிக்கும். பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கத்துக்கு (சார்க்) வலுவூட்ட அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கும். தெற்காசிய நாடுகளுடன் நீர் வளம், சூழல் தொடர்பான செயல் திட்டங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படும். பங்களாதேஷ், பூட்டான், நேபாளம், மாலைதீவு போன்ற நாடுகளுடன் பங்குடமை நடவடிக்கைகள் அதிகரிக்கப்படும். பிராந்தியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக சீனாவுடன் அரசியல் பாதுகாப்பு பரிமாற்றங்கள் முன்னெடுக்கப்படும்’ என்றும் கலாம் கூறியுள்ளார்.

# பாரிஸ்: உணவுப் பொருட்களுக்கு மிகைப்படுத்திய விளம்பரம் வழக்குத் தொடுக்க நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் திட்டம்

(பாரிஸ்)

பிரான்சிலுள்ள ஊடகங்களிலும் மக்கள் தொடர்புச்சாதனங்களிலும் சில வகை உணவுப் பொருட்களுக்காக மேற்கொள்ளப்படும் விளம்பரங்கள் மிகைப்படுத்தப்பட்டவையாக உள்ளனவென்று பிரான்சின் நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது. இவ்வாறு மக்களுக்குத் தவறான தகவல்களைத் தந்து தங்களது பொருட்களை வாங்கவைக்கும் நிறுவனங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கவும் இந்தச் சங்கம் தீர்மானித்துள்ளது.

ஒரு பிரபல வெதுப்பகம் தயாரித்து வழங்கும் குழந்தைகளுக்கான அப்ப வகையைச் சேர்ந்த உணவுப் பொருளில் நிறைய ஊட்டச்சத்துகள் உள்ளதெனக் கூறப்படுகின்றபோதிலும் அதில் உண்மையில்லை என்றும் நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் கூறியுள்ளது.

சிலவகை தண்ணீருக்கு செய்யப்படுகின்ற விளம்பரங்களும் நுகர்வோருக்குத் தவறான தகவலைத் தருவதாக இந்தச் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது. சிறு பிள்ளைகளுக்கான இனிப்பு வகைகள் மற்றும் உடல் நிறை குறைப்புக்கான சில வகை பத்திய வகைச் சாப்பாடுகளுக்குச் செய்யப்படுகின்ற விளம்பரங்கள் எல்லாமே நுகர்வோருக்கு பிழையான தகவல்களை தெரிவித்து அவர்களை அப் பொருட்களை வாங்க வைக்கின்றன என்றும் இவ்வாறு மக்களுக்கு மிகைப் படுத்தப்பட்ட தகவல்களை வழங்கும் ஒவ்வொரு உணவு உற்பத்தி நிறுவனத்துக்கும் எதிராக 20 ஆயிரம் யூரோ வரை நட்டஈடு கோரி வழக்குத் தொடர இருப்பதாக இந்தச் சங்க நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.


7வது தடவையாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - பிரான்ஸ் நடாத்தும் மாபெரும்
தமிழர் விளையாட்டு விழா - 2004
GRANDE RENCONTRE SPORTIVE - TAMOULE
மைதான நுழைவுச் சீட்டுடன் பெறுமதிவாய்ந்த பரிசுப்பொருட்கள் காத்திருக்கின்றன!
27-06-2004
ஞாயிறு காலை முதல் மாலை வரை
பரந்த le Bourget மைதானத்தில்!
மணக்க மணக்க சுடச்சுட தாயகத்து சுவையுடன் ஒடியல் கூழ் கொத்துரொட்டி இன்னும் பலவகைச் சிற்றுண்டிகளுடன்
தமிழீழ உணவகம்
"புல்வெளியில் அமர்ந்து ஊர்க்கதை பேசிக் கூடிக் கூழ்குடித்து கும்மாளமிட்டு, மண்மணம் வீசும் பாரம்பரிய விளையாட்டுக்களுடன் மன மகிழ்வூட்டும் தமிழர் விளையாட்டுவிழா!"
L'Aire de Vents (Dugny)
Parc Départemental de la courneuve
Accés
Autoroute A1-Sortie LE BOURGET Direction DUGNY Centre
R.E.R (B) LE BOURGET Autobus 133 Arrêt de bus - LA COMÈTE
தொடர்புகட்கு: ORT France, 26 rue du Départment, 75018 Paris.Tél/Fax:01 40 38 30 74, E-mail:trofrance@trofr.com, web:www.trofr.com


INDIAN ASTROLOGER
சாய்பாபா
Laxmi Kanthswamy
பிரபல இந்திய ஜோதிடர் கைரேகை நிபுணர் இந்தியாவிலிருந்து இங்கே வருகை தந்துள்ளார்.
எம்மிடம் வருவதால் உங்கள் சகல பிரச்சனைகளும் தீர்த்து வைக்கப்படும். 99 வீதம் சரியாக கணித்துச் சொல்லப்படும். உங்கள் நிகழ்காலம், வருங்காலம், வியாபாரம், கல்வி, குடும்ப விபரங்கள், தேகசுகம் எல்லாம் சரியாக கணித்துச் சொல்லப்படும். அத்துடன் சாந்தி பூஜா, இலட்சுமி பூஜா பிரார்த்தனைகளும் செய்து தருவோம்.கண் திருஷ்டி, சூனியம் அகற்றுதலும் செய்து தருவோம்.
சந்திக்குமிடம்:
(West London) South hall
Contact:
Tel: 07932724065 / 07939613067


நியூ கபே பாரத்
New Cafe Bharath
இன்று முதல் புதிய நிர்வாகத்தின் கீழ் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.
Cafe Bharath
67, Rue Louis Blanc,
75010 Paris.
Tél: 01 58 20 06 20

# விட்ட இடத்திலிருந்து தொடரும் சந்திரிகா

**கடைசி ஐந்து வருடகாலத்தில் இடம்பெற்ற பேரழிவு மிக்க போரின் நினைவுகள் முற்றுமுழுதாகவே அழியுண்டுவிட்டதாகத் தோன்றுகின்றது.**

**- அதிரின் விஜயமான**

*(தமிழர்களின் தேசிய உரிமைக் குரலை ஆதரித்து எழுதும் சிங்கள ஆய்வாளர்)*

தமிழீழ சிறீலங்கா தேசங்களிற்கு இடையேயான முரண்பாடு ஒப்பீட்டளவில் பகைநிலை குறைந்த - வாய்ப்புக்கள் கூடிய - சாதகமான வலயத்திலிருந்து இடம் மாறி மீள எதிர்மறையான - வாய்ப்புக்கள் குறைந்த வலயத்தினுள் நுழைகின்றது. சந்திரிகா குமாரதுங்க இந்த நெருக்குவாரங்கள் கொண்ட வலயத்தினுள் வேண்டுமென்றே தமிழ் சிங்கள முரண்பாட்டை எடுத்து வந்துள்ளார் எனப் புரிந்து கொள்வதுதான் ஆய்வு ரீதியாகச் சரியான விபரிப்பாக அமையும்.

ஏன் இந்த எதிர்மறையான நிலையை நோக்கி சந்திரிகா நகர்கின்றார்?

இதனை இலகுவாகப் புரிந்து கொள்வதற்குச் சரியான வழி இப்பத்தியின் தலைப்பை மீள வாசியுங்கள்.

பெரும் இராணுவ மற்றும் பொருளாதார நெருக்குவாரங்களின் மத்தியில், 2001ம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் தோற்று ஐக்கிய தேசியக் கட்சியிடம் ஆட்சிப் பொறுப்பைப் பெரும்தன்மையுடன் சந்திரிகா கொடுத்தமையின் நோக்கத்தை மீள ஒருமுறை பரிசீலிக்க வேண்டும். அதேபோன்று இனச்சிக்கலின் முக்கியமானதொரு விவகாரம் பேச்சுக்களிற்கான மேடைக்கு வரும்வேளையில் மீள பின்கதவால் ஆட்சியை பறித்துவிட்டமையையும் மீளப் பரிசீலிக்க வேண்டும்.

2001ம் ஆண்டு வரை சந்திரிகா தலைமையிலான சிறீலங்காப் பேரினவாத அமைப்பானது தமிழர்களின் உரிமைக் குரலை இராணுவ வன்முறைகள் மூலம்தான் நசுக்குவது என்கின்ற திடமான நோக்கினையே வெளிப்படுத்தி வந்தது. அமைதிக்கான போர், பாதை திறப்பிற்கான போர், பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்கின்ற முகப்புகளுடன் சிங்கள இனவாதத்தின் தொடர்ச்சியான போர் ரதம் தமிழர் தாயகத்தினை எரியூட்டியது. எனினும் புலிகளின் வலுவான முறியடிப்பு நடவடிக்கைகளும், வியக்கத்தக்க ஆனையிறவுப் படைத்தளம் மீதான நடவடிக்கை அக்னீகில முறியடிப்பு நடவடிக்கைகள் காரணமாக அந்த போர் வியாபகம் சற்று மூச்சுத்திணறும் சூழலியே ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தமர்ந்தது. இந்த ஆட்சி மாற்றத்தைச் செய்ததன் மூலம் பிழைத்துப் போன ஒரு தடத்திலிருந்து மாறி மறுதடத்தில் ஓட சிங்கள அமைப்புக்கு வாய்ப்பு ஏற்பட்டது. தமிழர்களின் பெருவெற்றி ஏற்படுத்திய பாதிப்புக்கள் அதற்குரிய காலஓட்டத்தில் அணையும் வரை காத்திருப்பதற்கும் இது வாய்ப்பாகிற்று.

*இதனடிப்படையில் ஐ.தே.க. அரசானது தமிழர்களிற்கு எதிரான போரை வேறுவடிவில் - வேறு வழியூடாக நடாத்த முயன்றது. சர்வதேச வலைப் பின்னல் ஊடான பாதுகாப்பு, பொருளாதார பலப்படுத்தல் ஊடான பாதுகாப்பு, சமாதானக் காலத்தினைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் போர்க் குணத்தைத் தணித்தல் என்கின்ற உத்தியே முன்னிறுத்தப்பட்டது. சந்திரிகா தலைமையிலான இனவாத அமைப்பும இந்த உத்தியினிற்கு ஏற்பவே செயற்பட்டது.*

இதனடிப்படையில் ஐ.தே.க. அரசானது தமிழர்களிற்கு எதிரான போரை வேறுவடிவில் - வேறு வழியூடாக நடாத்த முயன்றது. சர்வதேச வலைப் பின்னல் ஊடான பாதுகாப்பு, பொருளாதார பலப்படுத்தல் ஊடான பாதுகாப்பு, சமாதானக் காலத்தினைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் போர்க் குணத்தைத் தணித்தல் என்கின்ற உத்தியே முன்னிறுத்தப்பட்டது. சந்திரிகா தலைமையிலான இனவாத அமைப்பும இந்த உத்தியினிற்கு ஏற்பவே செயற்பட்டது.



ஒரு குறித்த இலக்கை அடையும் வரை இவ்வாறு சிங்கள இனவாத அமைப்பு நகர்ந்து வர முயன்றது. தமிழர்களின் தேசிய வலுவாகவும், தலைமையாகவும் திகழும் புலிகள் அமைப்பு சமாதான கால வியூகத்தினால் சிக்குண்டு வலுவிழந்து, அதன் பிரதான முகவரியான வியத்தகு போரிடும் ஆற்றலை இழக்கும் வரை நகர்த்தவே சிங்கள அமைப்பு முற்பட்டது.

புலிகள் இயக்கம் இந்தத் தடைகளைத் தாண்டி இடைக்கால நிர்வாக அமைப்பு என்கின்ற வலுவான வாதத்தை சர்வதேச மத்தியத்துவத்துடன் கூடிய பேச்சுக்களிற்கான மேடைக்கு வெற்றிகரமாக எடுத்து வந்தபோது விடயம் தமது கையைவிட்டு நகருவதை சந்திரிகாவும், ரணிலும் உணர்ந்து கொண்டனர் *(கவனிக்க: ரணிலும் உணர்ந்து கொண்டார்)*. சந்திரிகா 3 அமைச்சுக்களை ரணிலிடமிருந்து பறித்த போதும், பின்னர் ஆட்சியைக் கவிழ்த்த போதும் ரணில் போர்க்குணம் கொண்டு சந்திரிகாவுடன் மோதவில்லை என்பதைக் கூர்மையாகக் கவனியுங்கள். ரணில் ஒரு பலவீனமான தலைவன் எனச் சில ஊடகங்கள் பகிரங்கமாகவே விபரித்த போதும் ரணில் நடந்து கொண்ட விதமானது ஒரு தந்திரோபாய உத்தியின் அடிப்படையிலானதே எனப் புரிந்து கொள்வது முக்கியமானது.

வேறுதடத்தில் முன்னேற முயன்ற சிங்களம் அந்தப் பாதையைப் புலிகள் தமக்குச் சாதகமாக்க முற்பட்டபோது அதனைக் கைவிட்டுவிட்டு மீள முன்னைய தடத்திற்கே திரும்ப முற்படுகின்றது.

அதுவே எதிர்மறையான - வாய்ப்புக்கள் குறைந்த வலயத்தினிற்குள் தமிழ் - சிங்கள் இன முரண்பாட்டைத் தள்ளிவிடுவதன் நோக்கம்.

இதனால் என்ன இலாபங்களைச் சிங்கள இனவாதம் ஈட்ட முற்படுகின்றது?

முதலாவது, சர்வதேசமயப்பட்டு, சுயநிர்ணய உரிமை பற்றியதான ஏற்றுக்கொள்கைகளுடன் கூடியதாக இடைக்கால அரசமைக்கும் சாத்தியங்களை இடைநிறுத்தலாம். இவ்வாறு இடைநிறுத்துவதற்கான சாத்தியமான வழி ஆட்சிமாற்றமே என்பதை சந்திரிகா மட்டுமல்ல ரணிலும் புரிந்து கொண்டிருப்பார். சர்வதேச சமூகத்தின் நிகழ்ச்சித்திட்டத்துடன் அல்லது சர்வதேச ஈர்ப்புப் பெற்ற விடயத்துடன் சற்று முரண்படும் போக்கை சிங்களத் தலைமை எடுக்கும் போது அதற்குத் தேர்தல் முறையிலான ஆட்சி மாற்றத்தை முன்னிறுத்துவது பாதுகாப்பைத் தரும் என்பது மிக இலகுவான இராஜதந்திர அரிச்சுவடியாகும்.

இரண்டாவது, புதிய வன்மம் கொண்ட பாதைக்குத் திரும்புவதற்கான புற மற்றும் அகச்சூழலைத் தயார்ப் படுத்துவதற்கு அல்லது சூழலைப் பதப்படுத்துவதற்கு எதிர்மறையான வலயம் பெரிதும் உதவும். இத்தகைய வலயத்தினுள் இருந்தவாறு பேச்சுக்களைத் தொடர்வது போல பாசாங்கு காட்டினால் அதீதமான விட்டுக் கொடுப்புக்களுக்கான நெருக்கடி இருக்காது. மேலும், இந்த வலயத்தினுள் இருந்து செயற்பட்டால் புலிகளுக்கு எதிரான பரப்புரை மற்றும் இரகசிய இராணுவ நடவடிக்கைகளைச் செயற்படுத்துவது இலகுவானதாக இருக்கும். கருணா விவகாரத்தைப் பாவித்து தென் தமிழீழத்தைக் கலவரப்படுத்துவது, புலிகளின் முக்கிய தளபதிகளைக் குறிவைப்பது, தமிழ் தேசியத்திற்கு ஆதரவான தாக்கமுள்ள குரல்களை நசுங்கடிப்பது எனப் பல்வகைப்பட்ட நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு இத்தகைய எதிர்மறையான சூழலே வாய்ப்பானது. முன்பு நிலவிய ஒப்பீட்டளவில் சாதகமான வலயத்தில் நின்று செயற்பட்டால் இத்தகைய நடவடிக்கைளை மேற்கொள்ளும் போது ஏற்படும் அழுத்தங்கள் (இராஜதந்திர மற்றம் அரசியல்) எதிர்கொள்வது கடினமானதாக இருக்கும்.

எனவே, சந்திரிகாவின் தேர்வானது போரை மீளத் தொடங்குவது என்கின்ற கோட்பாட்டுடன் நோக்கினால் புத்திசாலித்தனமானது. அவர் முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவதும், அவரது சகாக்கள் மாறிமாறிப் பேசுவதும் கூட இந்த உத்தியினைப் பாதிக்காது. உண்மையில், அவர் தான் முன்னர் விட்டுச் சென்ற இடத்திலிருந்து (2001ல்) மீள நகர முற்படுகின்றார். அதற்கு ஏற்பவே நகர்கின்றார். அவர் தமிழர்களின் உரிமைக் குரலை வன்முறை மூலம் நசுக்குவதே சிங்களப் பேரினவாத நலன்களுக்கு முன்னுள்ள ஒரே தீர்வென உறுதியாக நம்புகின்றார்.

**- ராஜா -**


நேசன் *Cash and Carry*



*இலங்கை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் கடலுணவு வகைகள் உடன் மரக்கறிவகைகள் தொலைபேசி அட்டைகள் மற்றும் தமிழ் மக்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் மிக மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.*

இலங்கை இந்தியா பசுமையான மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள், பதப்படுத்தப்பட்டுள்ள உணவுகள், பழவகைகள், V.D.O C.D க்கள் விற்பனைக்கும், வாடகைக்கும் மற்றும் உங்களுக்கு தேவையான பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

**217, The Broadway, Southall, Middiesex, UB1 1NB - Tel: 020 3574 4018 Fax: 020 8574 4035 Mobile: 07904100201**



# சிறீலங்கா நாடாளுமன்றத்தில் நடந்த தெருக்கூத்து!

கடந்தவாரம் சிறீலங்கா நாடாளுமன்றம் விவாதக்களமாக இல்லாது யுத்தக் களமாக மாறியதில் இரு பௌத்த பிக்குகள் காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சிறீலங்கா வரலாற்றில் முதற் தடவையாக பௌத்தபிக்குகள் தேர்தலில் பங்குபற்றி, நாடாளுமன்றத்திற்குள் நுழைந்தனர். தமக்கு விசேடமாகத் தனியான ஆசனம் ஒதுக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கையும் விடுத்தனர். ஆனால், சிறீலங்கா அரசினால் பேருந்தில் இருந்து விமான நிலையம் வரைக்கும் தனியான ஆசனம் ஒதுக்கிக் கௌரவப்படுத்தப்பட்டுள்ள பௌத்த பிக்குகள் இருவர் நாடாளுமன்றத்திற்குள் வைத்து இரத்தம் வரும் வரைக்கும் தாக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாமல், அங்கு வைத்துப் பௌத்தபிக்கு ஒருவர் துகிலுரியவும்பட்டுள்ளார்.

## துகிலுரியப்பட்ட தேரரை பாதுகாப்பாக அழைத்து வந்த மகேஸ்வரன்

பதவிப்பிரமாணம் செய்வதற்காகச் சபைக்குள் நுழைய முற்பட்ட தேரரை ஆளும்கட்சி உறுப்பினர்கள் நுழையவிடாது தடுக்க முயன்றனர். இதனால், அங்கு கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. எதிர்க்கட்சி உறுப்பினரான தி.மகேஸ்வரன் தேரரை அழைத்துவர எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான மகிந்த சமரசிங்க, ரவி கருணாநாயக்க, எஸ்.பி.திசாநாயக்க, ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோர் பாதுகாப்பு வழங்கினர். அச்சமயம் ஆளும்கட்சி உறுப்பினர்களால் பிக்குவின் காவியுடையைக் களைய முதலாவது முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதன்போது, பாதி கழன்றுவிட்ட காவியுடையை மகேஸ்வரன் முயற்சியுடன் தேரர் சரிப்படுத்திக் கொண்டார்.

இதன்போது அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவிற்கும் ஜோசப் மை


(தொடர்ச்சி 28ம் பக்கம்)

## பிக்குகள் தாக்கப்படும் அளவிற்கு அங்கு என்னதான் நடந்தது?

சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார தலைமையில் கடந்த 8ம் திகதி செவ்வாயன்று காலை நாடாளுமன்றம் கூடியது. சபை அலுவல்கள் ஆரம்பமாகிய போது 4 புதிய உறுப்பினர்களை பதவிப்பிரமாணம் செய்து வைக்கும் பணி இடம்பெறவிருந்தது. முதலாவதாக ஜாதிக ஹெல உறுமயவின் சார்பில் அக்மீமன தயாரட்ண தேரரைப் புதிய நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்வதற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இதனையடுத்தே சபையில் அமளிதுமளி ஏற்பட்டது. புதிய உறுப்பினரான

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

## பாதிப்புற்ற பிக்கு அவசர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றம்




நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற தாக்குதலில் மோசமாகப் பாதிக்கப்பட்ட ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினரான வண. கொலன்னாவ சிறீசுமங்கள தேரர் தற்பொழுது கொழும்பு நவலோக வைத்திய சாலையின் அவசரச் சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருக்கின்றார். அவருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டதுடன் அதிக தடவைகள் அவர் வாந்தியும் எடுத்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதனையடுத்தே வைத்தியசாலை நிர்வாகம் அவரை அவசரச் சிகிச்சைப் பிரிவில் சேர்த்தது.

இதேவேளை மற்றைய பிக்குவான வண. அக்மீமன தயாரத்தன தேரரின் உடல்நிலை நல்ல நிலையில் உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## அரசை எதிர்க்க எதிர்க்கட்சிகளுடன் இணையும் ஜாதிக ஹெல உறுமய

சகல எதிர்க்கட்சிகளுடனும் உடன்படிக்கை ஒன்றை செய்துகொண்டு அரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்க ஜாதிக ஹெல உறுமயக் கட்சி தீர்மானித்துள்ளது. நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட பின்னர் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் ஹெல உறுமயக் கட்சியினரால் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் இணைந்தா அரசிற்கெதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ள இருக்கின்றீர்கள்' என்று ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில், சகல எதிர்க்கட்சிகளுடனும் இணைந்து செயற்படவுள்ளதாக ஹெல உறுமயவின் தம்மாலோக்க தேரர் தெரிவித்தார்.



நாடாளுமன்றத்திற்கு முன்னாள் கூடியுள்ள பௌத்த பிக்குகள்

நாடாளுமன்றத்தில் அந்தக் கட்சியின் உறுப்பினர் அக்மீமன தயாரத்ன தேரரும், கொலன்னாவ சுமங்கல தேரரும் ஆளும் தரப்பினரால் தாக்குதலுக்கு இலக்காகியதையடுத்து எதிர்ப்புத் தெரிவித்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக உடுவே தம்மாலோக்க தேரர் தெரிவித்தார். தமது கட்சி உறுப்பினர்கள் இருவர் தாக்கப்பட்டமைக்கு பலர் காரணமாக இருந்தார்கள் என்று அவர் சுட்டிக்காட்டினார். அவர்களில் அமைச்சர்களான ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளேயும், ஜீவன் குமாரதுங்கவும் முக்கிய இடம்வகித்ததாக அவர் கூறினார்.



## செங்கோலுடன் பாய்ந்தோடிய அமைச்சர்

சபாநாயக்கரை நோக்கி அக்மீமன தேரர் கொண்டுவரப்படுவதைக் கண்ட அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே சபாநாயகரின் ஆசனத்தின் முன் வைக்கப்பட்டிருந்த செங்கோலைத் தூக்கிக்கொண்டு சபைக்கு வெளியே ஓடினார். படைக்கல சேவிதர்கள் தேரருக்குப் பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்ததால் செங்கோலைத் தூக்கிக் கொண்டு ஓடிய அமைச்சரைத் தடுக்க அவர்களால் முடியவில்லை. செங்கோல் களவாடப்பட்ட போதிலும் செங்கோல் இல்லாமலே தேரருக்குச் சபாநாயகரால் சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. இதேவேளை தேரர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டிருந்தபோது ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரொருவர் தேரர் வாசித்துக் கொண்டிருந்த சத்தியப் பிரமாணப் பத்திரத்தையும் பறித்துக்கொண்டு ஓடினார்.

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

# ஜி.8 – ஜி.20 ஆகுமா?


ஜி.8 தலைவர்கள் கடற்கரையில் காட்சியளிக்கின்றனர்.

உலக செல்வந்த நாடுகளின் கூட்டமைப்பான 'ஜி-8' நாடுகளின் மாநாடு கடந்த 8ம், 9ம், 10ம் திகதிகளில் அமெரிக்காவின் ஜோர்ஜியா மாநிலத்தின் சீ ஐலண்ட் பகுதியில் நடந்து முடிந்துள்ளது. உலகில் முன்னேற்றம் அடைந்த 8 நாடுகள் சேர்ந்து 'ஜி-8' என்ற ஓர் அமைப்பை உருவாக்கி உள்ளன. இதில் அமெரிக்கா, பிரான்சு, இங்கிலாந்து, ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி, ரஷ்யா, கனடா ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இந்த மாநாட்டில் ஆப்பிரிக்கா மற்றும் மேற்கு ஆசிய நாடுகளின் தலைவர்களும் கலந்து கொண்டிருந்தார்கள்.

கடந்த வாரம் இடம்பெற்ற மூன்று நாள் மாநாட்டில், ஜி.8 நாடுகளில் மேலும் வளர்ச்சியடைந்த 12 நாடுகளை இணைத்து ஜி.20 நாடுகளாக்குவது குறித்துத் தீவிரமாக ஆராயப்பட்டுள்ளது. அத்துடன் ஈராக், பாலஸ்தீன விவகாரம் குறித்து விவாதிக்கப்பட்டது. இந்த மாநாட்டில் 50 ஆயிரம் பேர் கொண்ட உலக அமைதிப் படையை அடுத்த 5 ஆண்டுகளில் உருவாக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. 8 செல்வந்த நாடுகள் (ஜி.8) அமைப்பின் அதிகாரிகள் 2 பேர் இது தொடர்பாக

# உலக செல்வந்த நாடுகளின் மாநாட்டில் ஆராய்வு


ரஷ்ய அதிபர்


ஜேர்மனிய அதிபர்


கனேடிய தலைமை அமைச்சர்


ஜப்பான் தலைமை அமைச்சர்

எட்டு நாடுகளின் தேசியக்கொடியின் வர்ணத்தில் தயாரிக்கப்பட்ட 8 வாகனங்களில் அந்தந்த நாடுகளின் தலைவர்கள் மாநாட்டு மண்டபத்திற்கு வந்திறங்கினார்கள். இதில் அந்த வாகனத்தைச் செலுத்தி வந்தவர்கள் அந்தந்த நாடுகளின் தலைவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நிருபர்களிடம் கூறியதாவது, ஆபிரிக்க நாடுகளில் நடக்கும் உள்நாட்டு யுத்தங்களை முடிவுக்குக் கொண்டுவர உதவும்படி அந்த நாடுகள் கேட்டுக்கொண்டன. அதைத் தொடர்ந்துதான் உலக அமைதிப்படையை உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டது. அடுத்த 5 அல்லது 6 ஆண்டுகளில் இந்தப் படை உருவாக்கப்படும். தொடக்கத்தில் இந்தப் படை ஆப்பிரிக்காவில் செயல்படும். இந்தப் படைக்குப் பயிற்சி அளிக்கவும், ஆயுதங்கள் வாங்கவும் தேவையான நிதியைப் பெறப் பாராளுமன்றத்திடம் புஷ் அரசு அனுமதி கோரும் என்றார்கள்.

ஈராக் நாட்டில் இருந்து அமெரிக்க இராணுவம் வெளியேறுவது குறித்தும், ஆட்சிப் பொறுப்பைத் தற்காலிக அரசிடம் ஒப்படைப்பது குறித்தும் புதிய தீர்மானம் கொண்டு வரப்படும் என்று நம்புவதாக ஜெர்மனி அதிபர் ஷ்ரோடர் கூறினார்.



அமெரிக்க அதிபர்

இந்த மாநாட்டில் கலந்துகொண்ட செல்வந்த நாடுகளின் தலைவர்களில் சிலர் தங்களது அமைப்பை மேலும் விஸ்தரிப்பது குறித்தும் ஆசியாவின் இரு பெரும் நாடுகளான சீனாவையும், இந்தியாவையும் சேர்த்துக் கொள்வது குறித்தும் விருப்பம் தெரிவித்துக் கருத்துகளை முன்வைத்திருந்தனர். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் அதிகரிக்கும் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டிருக்கும் இத் தலைவர்கள் சீனா, இந்தியா போன்ற நாடுகளுடன் கிரமமாகப் பேச்சுவார்த்தைகளை நடத்துவது குறித்து யோசனைகளைத் தெரிவித்திருக்கிறார்கள்.

8 நாடுகளை உள்ளடக்கிய இந்த அமைப்பில் மேலும் பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளைச் சேர்த்து (ஜி-20) ஆக எண்ணிக்கையை அதிகரித்து உச்சி மாநாடுகளை நடத்தும் யோசனையை கனேடியப் பிரதமர் போல் மார்ட்டின் முன்வைத்திருக்கும் அதேவேளை, சீனாவையும் இந்தியாவையும் பேச்சுக்கு அழைத்து (ஜி-10) உச்சி மாநாடுகளை நடத்தலாம் என்று இத்தாலியப் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறார். இதே வேளை, ஜி-20 உச்சி மாநாடு அடுத்த வருடம் நடைபெறக் கூடிய சாத்தியங்கள் குறித்தும் போல் மார்ட்டின் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

இதே வேளை, இந்த மாநாட்டிற்குக் கண்டனம் தெரிவித்து ஆர்பாட்டங்களும், பேரணிகளும் எதிர்ப்பு நடவடிக்கைகளும் பல நாடுகளிலும் நடத்தப்பட்டுள்ளன. இம்மாநாடு நடைபெற்ற ஜோர்ஜியா மாநிலத்தில் எதிர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றன. இதன்போது எதிர்பாளர்களுக்கும் காவற்துறையினருக்கும் இடையில் மோதல்களும் இடம்பெற்றுள்ளன.


ஜி.8 நாடுகளின் மாநாட்டில் கலந்துகொண்ட (இடமிருந்து வலமாக) பிரித்தானிய தலைமை அமைச்சர் றொனி பிளேயரின் துணைவியார் செரி, பிரெஞ்சு அதிபர் ஜக் சிராக்கின் துணைவியார் பேர்னாட், ரஷ்ய அதிபர் விளாடிமீர் புட்டீனின் துணைவியார் லுட்விலா, அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்சின் துணைவியார் லோரா ஆகியோர் நடந்து வருகின்றனர்.



எதிர்ப்பு நடவடிக்கையில் ஆர்ப்பாட்டக்காரர்கள்

ஹுவான் ருல்ஃபோ(1918). இரண்டு மிகச் சிறிய புத்தகங்களே வெளிவந்திருந்தாலும் ருல்ஃபோ மெக்ஸிகோவின் மிகப் புகழ் பெற்ற எழுத்தாளர். 1924 இல் இவரது தந்தை கொல்லப்பட்டார். தொடர்ந்து இவரது உறவினர்கள் பலரும் படுகொலை செய்யப்பட்டனர். இவரது தந்தையின் தந்தை கிரிஸ்டெரோ கலகத்தின்போது மிகக் கொடூரமான முறையில் கொல்லப்பட்டார். சில ஆண்டுகள் கழித்து இவரது தாயும் இறந்தார்.

**இவரது சிறுகதைத் தொகுப்பு: El llano en llamas (1953)**
**நாவல்: Pedro paramo**
**இரண்டாவது நாவல்: La cordillera**

**- ஹுவான் ருல்ஃபோ (மெக்சிக்கோ)**
**ஆங்கிலவழி தமிழில்: அமரந்த்தா**



சிறுகதை

# நாய்கள் குரைப்பது உனக்குக் கேட்கவில்லையா?

'இக்னேஷியோ, மேலே நீ உட்கார்ந்திருக்கும் இடத்திலிருந்து ஏதாவது வெளிச்சம் தெரிகிறதா? சப்தம் ஏதாவது கேட்கிறதா?'

'என்னால் எதையும் பார்க்க முடியவில்லை'

'நாம் இப்போது நெருங்கி விட்டிருப்போம்'

'ஆமாம். ஆனால் எனக்கு எதுவும் கேட்கவில்லை'

'நன்றாகக் கவனித்துப் பார்'

'எனக்கு எதுவும் தெரியவில்லை'

'நீ ரொம்பப் பாவம் இக்னேஷியோ'

அவர்களின் நீண்டு கருத்த நிழல் ஆற்றோரக் கற்களின் மேல் நீண்டும் சுருங்கியும் மாறி மாறி விழுந்து கொண்டிருந்தது. தடுமாறி நடந்த ஒற்றை நிழலாக இருந்தது அது, நிலவு அப்போதுதான் வட்ட முத்திரையைப் போல பூமியிலிருந்து மேல் நோக்கிக் கிளம்பிக்கொண்டிருந்தது.

'இக்னேஷியோ, நாம் கிராமத்தை நெருங்கி விட்டோமென்று நினைக்கிறேன். உனக்கு நன்றாகக் கேட்குமே. நாய்கள் குரைப்பது உனக்குக் கேட்கவில்லை? அவர்கள் டொனயா மலையின் அடுத்த பக்கத்தில் இருப்பதாய்ச் சொன்னது நினைவில்லை? நாம் மலையைக் கடந்து வந்து ரொம்ப நேரம் ஆகிவிட்டதே? யோசனை செய்து பார் இன்னேஷியோ...'

'ஆமாம், ஆனால் எனக்கு எதுவுமே தெரியவில்லையே?'

'எனக்கு மிகவும் சோர்வாயிருக்கிறது'.

'என்னைக் கீழே இறக்கி விடு.'

கிழவன் முதுகுப் பாரத்தைக் கீழிறக்காமல் கற்சுவரில் சாய்ந்து ஒருவாறு சமாளித்துக் கொண்டான். அவன் கால்கள் மடங்கி விடுகிறாற் போல் கெஞ்சியும் அவன் உட்கார விரும்பவில்லை. அவனுக்குத் தெரியும், அப்படி உட்கார்ந்து விட்டால் மீண்டும் தன்னால் மகனைத் தூக்கி முதுகில் வைத்துக்கொள்ள இயலாதென்று. பல மணி நேரங்களுக்கு முன்னால் அவர்கள் அவனைத் தூக்கி முதுகில் ஏற்றிவிட உதவியிருந்தார்கள். அதன் பிறகுதான் அவன் தன் மகனைத் தூக்கிக்கொண்டு வருகிறான்.

'உனக்கு உடம்பு எப்படியிருக்கிறது?'

'சரியில்லை அப்பா'

அவன் இப்போது மிகவும் குறைவாகப் பேசினான். மிக மிகக் குறைவாக. சில சமயம் தூங்குவதைப் போலவும் சில சமயம் குளிரில் விறைத்து விட்டாற் போலவும் தோன்றும். அவன் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தான். மகன் கால்களை ஈட்டி போல வேகமாக உதைத்துக்கொள்ள ஆரம்பித்ததுமே அவனுக்கு ஜன்னி வந்துவிட்டதை கிழவன் புரிந்து கொண்டான். அவன் தலையைப் பலமாகப் பற்றியிருந்த மகனின் கைகள் மணியை ஆட்டுவது போல ஆட ஆரம்பித்து விட்டன.

அவன் நாக்கைக் கடித்துக்கொண்டு விடாமல் இருப்பதற்காகப் பல்லைக் கடித்துக் கொண்டான். நடுக்கம் குறைந்ததும் மகனிடம் கேட்டான்.

'ரொம்ப வலிக்கிறதா?'

'இல்லை... கொஞ்சம்' என்றான் மகன்.

முதலில் அவன் அடிக்கடி தன்னைக் கீழே இறக்கிவிட்டு விட்டுப் போகுமாறு சொன்னான். தனியே போய்விடும்படியும், மறுநாள் உடல் தேறிய பிறகு சேர்ந்து கொள்வதாகவும் ஐம்பது முறையாவது சொல்லியிருப்பான். இப்போது அவன் அதைக்கூட சொல்லவில்லை. நிலவு காய்ந்து கொண்டிருந்தது. கண்களை நிறைத்த நீலநிற நிலவொளியில் கன்னங் கரேலென்று தரையில் நிழல்கள் விழுந்தன.

'இனியும் நான் எங்கேதான் போகப் போகிறேனோ தெரியவில்லை' என்றான் கிழவன். மகன் பதில் பேசவில்லை. நிலா வெளிச்சத்தில் அவனுடைய முகம் ரத்தமெல்லாம் வடிந்து வெளிறிப்போய் விட்டாற்போல் தோற்றமளித்தது. அவன் முகத்திலிருந்து மொத்தையாக ஒரு வெளிச்சம் வெளிப்படுவதைப் போல இருந்தது.

'உனக்குக் கேட்கிறதா இக்னேஷியோ? என்னால் சரியாகப் பார்க்க முடியவில்லையென்று சொன்னேனே...'

மகன் மௌனம் சாதித்தான்.

கிழவன் தடுமாறி நடந்து கொண்டிருந்தான். தடுமாறி, நிமிர்ந்து, மீண்டும் தடுமாறி இப்படியே போய்க்கொண்டிருந்தான்.

'இது சரியான வழியில்லை. டொனயா மலையின் மறுபக்கம் இருக்கிறதாகச் சொன்னார்கள். நாமும் மலையைத் தாண்டிவிட்டோம். ஆனால் நாம் டொனயாவைப் பார்க்க முடியவில்லை. அது அருகிலிருக்கிறாற் போல ஒரு சத்தத்தைக் கூடக் கேட்க முடியவில்லை. மேலிருந்து நீ ஏதாவது பார்க்க முடிகிறதா என்று சொல்ல மாட்டேனென்கிறாய் இக்னேஷியோ?'

'என்னைக் கீழே இறக்கி விடுங்கள் அப்பா'

'ரொம்ப உடம்பு மோசமாயிருக்கிறதா?'

'ஆமாம்'

'என்ன ஆனாலும் உன்னை நான் டொனயாவுக்கு அழைத்துப் போவேன். அங்கு உன்னை யாரையாவது பார்த்துக் கொள்ளச் செய்கிறேன். அங்கு ஒரு மருத்துவர் இருக்கிறாராம். அவரிடம் உன்னை கூட்டிப் போவேன். பல மணி நேரம் உன்னை சுமந்தாயிற்று. இனி யாருக்காகவும் உன்னை இங்கே விட்டுவிட்டுப் போகப் போவதில்லை நான்.'

பக்கவாட்டில் இரண்டு மூன்று தப்படி தடுமாறி வைத்துப் பின் சமாளித்துக் கொண்டான் கிழவன்.

'உன்னை நான் டொனயாவுக்கு அழைத்துப் போகப் போகிறேன்.'

'என்னை இறக்கி விடுங்கள்' அவன் பேசியது மிகச்சன்னமாய் ரகசியம் போல் கேட்டது.

'எனக்குக் கொஞ்சம் படுத்துக் கொள்ள வேணும் போலிருக்கிறது'

'அப்படியே தூங்கிக் கொள். நான் உன்னை அழுத்தமாகப் பிடித்திருக்கிறேன்.'

கிட்டத்தட்ட நீலமாகவே ஆகிவிட்ட நிலா தெளிவான ஆகாயத்தில் மேலெழும்பிக் கொண்டிருந்தது. வியர்வையில் நனைந்த கிழவனின் முகம் நிலவொளியில் குளிர்ந்திருந்தது. கூசிய கண்களைச் சுருக்கிக் கொண்டான். மகனின் அழுத்தமான பிடியால் அவனால் தலையைக் குனிய முடியவில்லை.

'நான் இதையெல்லாம் உனக்காகச் செய்யவில்லை. இறந்துபோன உன் அம்மாவுக்காகச் செய்கிறேன். அவள் மகன் நீ என்பதால். அதற்காகத்தான் செய்கிறேன். நான் உன்னை இப்படிப் பார்த்த இடத்திலிருந்து உன்னை எடுத்துப் போகாமல் விட்டிருந்தால் அவள் என்னை வெறுத்திருப்பாள். அவள்தான் என்னைப் போக வைத்துக் கொண்டிருக்கிறாள். நீயல்ல. உனக்கு நான் எதுவும் செய்ய வேண்டியதில்லை. ஏனென்றால் தொந்தரவு, வேதனை, அவமானம் இவை தவிர வேறெதையும் நீ எனக்குக் கொடுத்தவனில்லை.'



வியர்வை வழிய வழிய அவன் பேசினான். இரவுக்காற்று வியர்வையை உலர வைத்தும் திரும்பவும் வேர்த்தது.

'ஆனாலும் உன்னை டொனயாவுக்குக் கொண்டு போய் விடுவேன். உன் காயங்களுக்கு அவர்களை வைத்தியம் பார்க்க வைப்பேன். உன் உடல் நிலை சரியானதும் நீ உன் பழைய மர்மக் காரியங்களுக்குத்தான் திரும்புவாய் என்று எனக்குத் திட்டமாகத் தெரியும். நீ என் காது கேட்காத தொலைவுக்குப் போய்விடுகிற பட்சத்தில் அதைப்பற்றி இனி எனக்குக் கவலையுமில்லை. நீ அப்படிச் செய்யும்வரை - என் வரையில் இனி நீ எனக்கு மகனில்லை. நான் உனக்குக் கொடுத்த ரத்தத்தை சபித்து விட்டேன். 'நான் கொடுத்த ரத்தம் உன் குடலில் கெட்டுப் போவதாக' என்று சொல்லிவிட்டேன். நீ அக்கம் பக்கத்தில் திருடியும் மக்களைக் கொலை செய்தும் வாழ்ந்து கொண்டு இருப்பது தெரிந்ததுமே சொல்லி விட்டேன். - அதுவும் நல்ல மனிதர்களை! நீ அப்படிச் செய்திருக்காவிட்டால் உனக்கு ஞானஸ்நானம் செய்து வைத்த என் நண்பன் ட்ரான்க்விலினோ இன்னும் உயிரோடிருந்திருப்பார். உனக்குப் பெயர் வைத்தவர்! அவர்கூட உன் வழியில் வந்த துரதிருஷ்டக்காரராகி விட்டார். அப்போதிருந்தே நான் சொல்லி வருகிறேன். இது என் மகனாயிருக்க முடியாது என்று'

'கவனித்துப் பார். ஏதாவது தெரிகிறதா என்று, அல்லது ஏதாவது கேட்கிறதா என்று. நீ உயரத்திலிருப்பதால் உனக்கு சுலபமாயிற்றே? எனக்குக் காதே செவிடாகி விட்டது போல் இருக்கிறது.'

'என்னால் எதையும் பார்க்க முடியவில்லை'.

'நீ நாசமாய்ப் போவாய் இக்னேஷியோ.'

'எனக்கு தாகமாயிருக்கிறது.'

'பொறுத்துத்தான் ஆக வேண்டும். நாம் நெருங்கி வந்து விட்டோம். விஷயம் என்னவென்றால் நேரம் ரொம்ப ஆகிவிட்டதென்று கிராமத்தில் விளக்குகளை அணைத்து விட்டிருக்க வேண்டும். ஆனால் குறைந்தபட்சம் நாய்கள் குரைப்பது நமக்குக் கேட்க வேண்டும். கேட்க முடிகிறதா பார்.'

'எனக்குச் சிறிது தண்ணீர் கொடுங்கள்.'

'இங்கு தண்ணீரில்லை. கற்கள்தான் இருக்கின்றன. சற்றுப் பொறு. தண்ணீர் இருந்தாலும் உன்னைக் கீழே இறக்க மாட்டேன். உன்னைத் திரும்பவும் மேலே ஏற்றிவிட இங்கு யாருமிருக்கமாட்டார்கள். தனியாக என்னாலும் முடியாது.'


'எனக்கு ரொம்பத் தாகமாக, துக்கமாக இருக்கிறது?'

'நீ பிறந்தபோது, எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. நீ அப்போது அப்படித்தான் இருந்தாய். பசியோடு விழித்து எழுந்து சாப்பிட்டுவிட்டு உடனே திரும்பத் தூங்கி விடுவாய். நீ அவளிடமிருந்த பால் பூராவையும்

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

பாகம் - 2

18




# வலிகாமம் இருந்து வன்னி வரை

**- கவிஞர் நாவண்ணன்**

இந்தச் சிந்தனைகளுக்குள்ளே நீண்ட நேரம் மூழ்கியிருந்தேன். மழை கொட்டிக்கொண்டே யிருந்தது. எம் தலைகளுக்கு மேலால் மூடியிருந்த பாய்ப் பின்னல்களூடே மழை நீர் ஒழுகிக்கொண்டிருந்தது. நாம் குடும்பத்தவர் ஒருவரோடு ஒருவர் ஒட்டி அணைத்தபடி அந்தக் கணகணப்பில் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தோம். அதிகாலை மூன்று மணியிருக்கும் ஆலங்கேணிப்படகுத் துறையை அடைந்தோம். கரைக்கு ஒரு கிலோ மீற்றர் தொலைவு இருக்கும். வயது முதிர்ந்தவர்கள், பெண்கள், சிறுவர், நோயாளிகளைத் தவிர ஏனையோரைப் படகைவிட்டு இறங்கித் தள்ளும்படி கூறினர் ஓட்டிகள். படகுகள் கரையை அடைவதற்காக வாய்க்கால் ஒன்று இருந்தது. ஒரே நேரத்தில் இரண்டு படகுகள் மட்டும் போகக்கூடிய அகழிப்பாதை. அதுவும் படகில் பாரம் அதிகமாக இருப்பின் படகு தரை தட்டிவிடும். பக்கத்திற்குச் சென்றாலும் மேட்டில் சிக்கிவிடும். எனவே முடிந்தவர்கள் இறங்கினோம். முழங்காலை மூடிய தண்ணீர். அதற்குள்ளாகப் படகைத் தள்ளிக்கொண்டு சென்றோம். மழைவேறு குறுணிக் கற்களால் முகத்தில் எறிவது போன்று தாக்கியது. அப்படியே ஒருவாறு கரையை வந்தடைந்தோம். என்னவளையும் பிள்ளைகளையும் இறங்குதுறையில் மேலே ஏற்றிவிட்டுப் படகில் இருந்தபடி எமது பொருட்களை ஒவ்வொன்றாக எடுத்துக்கொடுத்தேன். பிள்ளைகள் பக்கத்தில் இருந்த கொட்டிலினுள் ஒதுங்கிக்கொண்டார்கள். என்னவளும், எனது இரண்டாவது மகள் ஜீனும் பொருட்களை எடுத்துச் சென்று கொட்டிலினுள் வைத்தார்கள்.

அங்கேயிருந்து உழவு இயந்திரப்பெட்டியொன்றில் ஏற்றப்பட்டு இறங்கு துறையின் சோதனைச் சாவடிக் கொட்டில்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கே சென்று இறங்கியதும் சுடச் சுடத் தேநீர் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. பாரிய கடாரங்களில் தண்ணீர் சுடவைத்துக் கொண்டிருந்தனர். அந்தக் குளிருக்குச் சுடுதேநீர் இதமாக இருந்தது. இந்த ஏற்பாட்டைப் பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் செய்து கொடுத்துக்கொண்டிருந்தது. தேநீர்ச் சூட்டுடன் தண்ணீர் கொதித்துக்கொண்டிருக்கும் அடுப்பில் இருந்து எழுந்த வெக்கை அதிகமாக இருந்தது. சோதனைச் சாவடியின் ஒரு தொங்கலுக்குச் சென்று எமது ஈர உடைகளை மாற்றுவதற்காக உடுப்புப் பைகளை எடுத்தோம். அப்பொழுதுதான் தவறு ஒன்று நிகழ்ந்துவிட்டதைக் கண்டு பிடித்தோம். ஓர் உடுப்புப் பையைக் காணவில்லை. இறங்குதுறையில் மழைக்குள்ளே அவசரப்பட்டுப் பொருள்கள் இறக்கிக்கொண்டிருந்தபோது யாரோ மாறி எடுத்துச் சென்று விட்டார்கள் அல்லது வேண்டுமென்றே தூக்கிச் சென்றுவிட்டார்கள். கரையிலே அந்த மழையிருட்டுக்குள் நடந்து விட்ட தவறை யாரும் கண்டுகொள்ளவில்லை. எப்படியோ அந்தப் பை தொலைந்துவிட்டது. அதனுள்யேதான் எனதும் என்னவளதும் சில நல்ல உடைகளும், அடையாள அட்டையும் தொலைந்துவிட்டன. இப்படி கைதவறுதலாக விடப்பட்ட பொருட்களை இறங்குதுறையில் உள்ள அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அங்கே சென்று விசாரிக்கும்படி சொன்னார்கள்.

நிலம் நன்கு விடிந்தபின்னர் ஆறுமணியளவில் அங்கும் சென்று விசாரித்தேன். எமது தொலைந்த பை அங்கு இல்லை. இனியும் தாமதிக்க முடியாது, இனி கிளிநொச்சி நோக்கி நகர வேண்டும். எனவே என்னவர்கள் நின்ற இடத்துக்கு வந்து புறப்படுவதற்கு ஆயத்தமாகினோம்.



கிளிநொச்சி, முழங்காவில், புதுக்குடியிருப்புப் பகுதிகளுக்குச் செல்வதற்குப் பார ஊர்திகள் தயார் நிலையில் இருந்தன. இடம் பெயர்ந்து வருபவர்களை இலவசமாகவே ஏற்றிச்சென்று குறிப்பிட்ட இடங்களில் இறக்கி விடுவதற்கான ஒழுங்குகள் செய்திருந்தார்கள். நாமும் கிளிநொச்சி செல்லும் பார ஊர்தி ஒன்றில் ஏறி எமது சைக்கில்களையும் ஏற்றிக்கொண்டோம். நாம் சென்ற பாரஊர்தி பரந்தன் வழியாகச் சென்று கிளிநொச்சியை அடைந்தது. கிளிநொச்சி பேருந்து நிலையத்துக்கு அண்மையில் இறங்கிக்கொண்டோம்.

அங்கிருந்து கரடிப்போக்குச் சந்திக்கு வந்து, மேற்காக மூன்று மைல் தொலைவு சென்றால்தான் உருத்திரபுரம் எட்டாம் வாய்க்காலை அடையலாம். அங்கேதான் தற்பொழுது ஜேம்ஸ் பத்திநாதன் அடிகள் ஆரோபணம் இல்லத்தில் இயக்குநராகவிருந்தார். அவரிடம் சென்றுவிட்டால் மேற்கொண்டு என்ன செய்வது என்று திட்டமிடலாம் என்ற நம்பிக்கையிருந்தது. இந்தத் துன்பவேளையில் ஒரு சகோதரனைக் கண்டு பெறும் ஆறுதலைப் பெறலாம் என்ற நம்பிக்கையும் இருந்தது.

கரடிப்போக்குச் சந்திக்கு வந்து உருத்திரபுரம் பாதையால் திரும்புகின்றோம். பாதையின் மேற்குப் புறமாக வீதியின் நீளத்துக்கு ஒரு வாய்க்கால். அதில் நீர் நிறைந்திருந்து, பாய்ந்துகொண்டிருந்தது. எனது சைக்கிளில் முன் ஹாண்டிலில் இருந்த என் கடைசி மகள் திடீரென்று கேட்டாள் 'இந்த அலைகளும் அகதிகளா பப்பா?' என்று.

ஏனவள் அப்படிக் கேட்கின்றாள் என்று எனக்குப் புரியவில்லை 'ஏனம்மா?' என்றேன்.

'நாங்கள் சந்தியில இருந்து வரத்தொடங்கின அலையும் எங்களோடேயே வந்துகொண்டிருக்குது அதுதான் அப்படிக் கேட்டன்!'

அவளுடைய வினாவுக்கு என்ன விடை அளிப்பது என்று எனக்குப் புரியவில்லை. ஏழுவயதுச் சிறுமியான அவளது கேள்விக்கு விடை அளிக்கும் ஆற்றல் இல்லாது விடினும் அவளது கேள்வியில் கலைத்துவமான கற்பனை இருப்பது கண்டு மகிழ்ந்தேன்.

'அலைந்து கொண்டிருப்பதால்தான் அதற்கு அலை என்று பெயர் வந்தது. நாங்கள் வந்திராவிட்டாலும் அது இப்படித்தான் அலைந்துகொண்டிருக்கும்' என்று கூறிச் சமாளித்தேன்.

எத்தனை மைல்கள் தொலைவு நடந்துவந்த பொழுது ஏற்படாத தளர்வு இந்த மூன்று மைல்களைத் தாண்டி வரும்போது ஏற்பட்டது. பசிக்களைவேறு. 8ம் வாய்க்காலை நோக்கி நடந்துசென்று கொண்டிருந்தோம்.

ஆரோபணம் இளைஞர் இல்லத்தின் பெயர்ப்பலகையைக் கண்டபொழுது மனதுக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது. நம்பிக்கையோடு அந்த வளவினில் காலடி வைக்கின்றோம். நேரே அவரது அலுவலக வாசலுக்குச் சென்றோம். அங்கு நின்ற இளைஞரிடம் 'சுவாமி இருக்கின்றாரா?' என்று விசாரித்தோம். 'இல்லை'யென்ற பதில் கிடைத்தது.



அந்தப் பதில்கேட்டு அதிர்ச்சியடைந்தாலும் அடுத்து அவர்கள் சொன்ன பதில்கள் ஆறுதலைக்கொடுத்தன.

'பாதர் எங்கேயோ அவசரமாய்ப் போறார். யாரும் தேடிவந்தால் இருக்கச் சொல்லிச் சாப்பாடு கொடுக்கச் சொன்னவர். வாங்கோ' என்றனர்.

ஏற்கனவே இரண்டு குடும்பங்கள் அங்குவந்திருந்தன. இளைஞர் இல்லத்தின் எமிலியானுஸ்பிள்ளை நினைவு மண்டபத்தில் வருபவர்களைத் தங்க வைக்க ஒழுங்கு செய்திருந்தார்கள். அந்த மண்டபத்தில் ஒரு மூலையில் சென்று இடம் பிடித்துக் கொண்டோம். பாணும் பருப்புக்கறியும் உணவாக வழங்கினார்கள். உண்டு பசியாறினோம். தான் இல்லாவிட்டாலும் தன்னைத்தேடிவரும் மக்களின் தேவைகளைக் கவனிக்க முன்னேற்பாடாக அனைத்தையும் திட்டமிட்டுச் சொல்லி வைத்துச் சென்ற ஜேம்ஸ் பத்தினாதன் அடிகளாரின் பரந்த மனதை எண்ணி பெருமைகொண்டேன்.

அடிகளார் வந்த பின்னர் எங்களனைவரையும் சந்தித்துப் பேசினார். மேலும் மேலும் இடம் பெயர்ந்தவர்களால் ஆரோபணம் நிறையத் தொடங்கியது. குருக்கள், கன்னியர்கள், குருமட மாணவர்கள் எனப்பலரும் வந்திருந்தவர்கள். இந்த இடத்திற் தங்குவதற்கு முன்னுரிமை உடையவர்கள் அவர்கள் என்பதால் வெகுவிரைவில் நாங்கள் வெளியேற வேண்டிவரும் என்று. எனது மனதுக்குள் எண்ணிக்கொண்டேன்.

அன்றைய குருமட அதிபரும், யாழ். மறைமாவட்ட குரு முதல்வருமான அருட் கலாநிதி எஸ்.ஜே.இம்மானுவேல், மற்றும் கரவையூர்ச் செல்வம் போன்றோரும் அங்கு வந்திருந்தனர்.

இரண்டு மூன்று நாள்களில் ஓர் இரவு ஒன்பது மணிச் செய்திகேட்டுக்கொண்டிருந்தோம். அதில் எதிர்பாராததும்

> *'யாழ் மறைவாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு குருக்கள் தாண்டிக்குளம் சோதனைச் சாவடியில் பெருந்தொகைப் பணத்தைக் கொண்டுவர முயற்சித்தபோது கைது செய்யப்பட்டனர் என்றும் அவர்கள் விசாரணைக்காகக் கொழும்பு கொண்டு செல்லப்பட்டனர்'*

அதிர்ச்சி தரக்கூடியதுமான ஒரு செய்திகூறப்பட்டது. 'யாழ் மறைவாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு குருக்கள் தாண்டிக்குளம் சோதனைச் சாவடியில் பெருந்தொகைப் பணத்தைக் கொண்டுவர முயற்சித்தபோது கைது செய்யப்பட்டனர் என்றும் அவர்கள் விசாரணைக்காகக் கொழும்பு கொண்டு செல்லப்பட்டனர்' என்றும் அந்தச் செய்தி கூறியது.

அந்த இரண்டு குருக்களும் மறைமாவட்டத்தின் மூத்த குருக்களும் அனைவராலும் அறியப்பட்டவர்களுமாவார். ஒருவர் யாழ்ப்பாணம் மனித முன்னேற்ற நடு நிலையத்தின் இயக்குநர். அருட்திரு. எம்.இ. பயஸ், அடுத்தவர். கிளிநொச்சி மனிதமுன்னேற்ற நிலையத்தின் இயக்குநர் அருட்திரு. ஹில்லறி ஜெபநேசன். மனித முன்னேற்ற நிலையம் ஓர் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனம் Human Development Centre (HUDER) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்றது. அந்த நிறுவனத்தின் பிரதிநிதிகள் தமது சமூகப் பணிகளுக்காகக் கொழும்பில் உள்ள தலைமைச் செயலகத்தில் இருந்து பணம் கொண்டுவந்தபோதே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. கொழும்பில் உள்ள நாலாம் மாடிவரை விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டார்கள். விசாரணையில் அவர்களை எந்தவிதமான உடல் உள ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்குகின்றார்களோ தெரியாது. பொருளாதாரத் தடையை மிக உச்சமாக அரசு தமிழ் மக்கள் மீது சுமத்திய காலமது.

குறிப்பிட்ட தொகைக்கு மேல் பணம் கொண்டு வந்தால் அது புலிகளுக்காகவே கொண்டு செல்கின்றார்கள் என்று அரசு சந்தேகப்பட்டது. யாழ். குடாநாட்டில் இருந்து வெளிவந்த பத்திரிகைகளை வெளியிடக்கூடக் காகிதம் இல்லாத நிலைமை. பத்திரிகையாளர்களோ விடுவதாய் இல்லை. எல்லாவிதமான காகிதங்களிலும், காகித மட்டைகளிலும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அளவுகளில் பத்திரிகைகள் வெளிவந்தன.

(தொடரும்)




## குறுங்கதை

### மதிப்பு




'வாழ்ந்தால் குயிலைப்போல்
வாழவேண்டும்' என்றது பட்டாம் பூச்சி.
இன்னொரு பட்டாம்பூச்சி கேட்டது:
'ஏன்?'
'அதோ பார்.. மா மரத்தில் பாடுகிறது
குயில். மா மரத்துக்காகத்தான் அது
பாடுகிறது. பின்பு மாங்கனியைச்
சாப்பிடுகிறது. பறக்கிறது.'
'புரியவில்லையே...'
'யாருக்கும் கடமைப் படக்கூடாது'
கொடுத்துப் பெறு. தங்கி வாழாதே.'
'ஓ! இப்போது புரிகிறது!' என்றது இரண்டாவது பட்டாம்
பூச்சி.
'மரத்துக்கு ஒரு பாட்டு
குயிலுக்கு ஒரு பழம்'

*- காசி ஆனந்தன்.*

## கண்டுபிடியுங்கள்

### கடந்தவார விடை

1-B ஒருவகைக் கழுகு
2-G கினிக்கோழி
3-I ஆந்தை
4-E கடற்பறவை *(கொக்கு இனத்தைச் சேர்ந்தது)*
5-C தீக்கோழி
6-A கொக்கு
7-H பென்குயின்
8-D பஞ்சவர்ணக் கிளி
9-F சேவல்
10-J ஒருவகைக் கிளி



இரு படங்களுக்குமிடையே 14 வேறுபாடுகள் உண்டு. கண்டு பிடியுங்கள். முடியாவிட்டால் அடுத்த வாரம்வரை பொறுத்திருங்கள்.

**விடை அடுத்த வாரம்**

## கதை முற்றம்

### ஆகாது பொறாமை

கந்தனிடம் வயல் ஒன்று இருந்தது. அவன் அதில் நெல் விதைத்திருந்தான். கந்தனுக்குப் புத்தி குறைவு. ஆனாலும், நல்லவன். கந்தனின் வீட்டிற்கு எதிர் வீட்டுக்காரன் விமலன். விமலனுக்கும் வயல் இருந்தது. ஆனால், அதில் விளைச்சல் சரியில்லை. அதனால், கந்தன் மீது அவனுக்குப் பொறாமை.

நன்றாக விளைந்திருக்கும் கந்தனின் வயலை விமலன் நிர்மூலமாக்கி அழித்துவிடவேண்டும் என்று திட்டமிட்டான்.

கடைசியாக அறுவடைசெய்யப்போகும் வயலில் தங்கம் இருப்பதாகப் பொய் கூறுவதென முடிவெடுத்தான். கந்தனை அருகில் அழைத்தான். 'உன் வயலில் நெல் மிகவும் நன்றாக விளைந்திருக்கிறது போலிருக்கே. ஆனால் நீ பாவம்' என்றான். அதற்கு அப்பாவியான கந்தன், 'ஏன்?' என்று கேட்டார். 'நான் நேற்று ராத்திரி ஒரு கனவு கண்டேன். அதில் உன் வயலில் தோண்டும்போது தங்கப் புதையல் இருப்பதுபோல் கண்டேன். அதனால், உடனேயே தோண்டவேண்டும்' என்றான்.

'அப்படியா! தங்கப் புதையலா?' என்று வாயைப் பிளந்தான் கந்தன். உடனேயே அவனுக்குத் தங்கப் புதையலைப் பார்க்க ஆசை எழுந்தது. ஆட்களைக் கூட்டிவந்து தன் வயலைத் தோண்ட ஆரம்பித்தான். இதனால், விளைந்திருந்த நெல் எல்லாம் பாழாயிற்று. ஆனால், அதனைப் பற்றிக் கவலைப்படாமல் கந்தன் வயலைத் தோண்டிக் கொண்டிருந்தான். இதைப் பார்த்த விமலன் மனதிற்குள்- 'கந்தன் சரியான அப்பாவி. நான் சொன்னதை அப்படியே நம்பிவிட்டான். நெல்லும்போய், தங்கப் புதையலும் கிடைக்காமல் திண்டாடப் போகிறான்' என மகிழ்ந்தான்.

ஆனால், கந்தனின் வயலில் இருந்து திடீரென வித்தியாசமான ஒரு சத்தம் கேட்டது. மேலும், தோண்டியபோது, ஒரு குடம் இருந்தது. அதனை வெளியே எடுத்துப் பார்த்தபோது -அது முழுவதும் தங்கக் காசுகளால் நிரப்பப்பட்டிருந்தது. அதைப் பார்த்த விமலனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. 'பொய் சொன்னேன். ஆனால், பலித்து விட்டதே.' என அவன் திகைத்தான். அப்போது, அவன் மனம் மீண்டும் சிந்தித்தது. 'இந்தப் புதையல் கிடைக்க நானே காரணம். கந்தனை சும்மாவிடக் கூடாது' என மீண்டும் அவனிடம் சென்றான் விமலன். 'கந்தா உனக்குப் புதையல் கிடைக்க நான்தான் காரணம். அதனால், கிடைத்ததில் பாதியை என்னிடம் கொடுத்துவிட வேண்டும்' என்று கேட்டான்.

'உண்மைதான் விமலன். நீ மட்டும் சொல்லியிருக்காவிட்டால், எனக்குத் தங்கப் புதையல் கிடைத்திருக்குமா? அதனால், நீ கேட்டபடியே உனக்குப் பாதியைத் தந்துவிடுகின்றேன். வைத்துக்கொள்....' என்றான். கந்தனின் இந்தப் பதில் விமலனைத் திடுக்கிட வைத்தது. இத்தகையதொரு பதிலை அவன் எதிர்பார்க்கவில்லை. கந்தன் நல்லவன். அதனால் அவனிற்கு நல்லதே நடக்கிறது. அதற்கு ஏற்ப அவனும் நல்லதையே நினைக்கின்றான். அதே போல், நானும் பொறாமையைக் கைவிட்டு நல்லவனாக மாறினால், நமக்கு நல்லது நடக்கும் எனச் சிந்தித்தான். அடுத்த நிமிடம் முதல் விமலனின் மனதிலிருந்த பொறாமை அகன்றது. நீங்களும் நல்லதைச் சிந்தியுங்கள். பொறாமை ஆகாது சிறுவர்களே.

## அறிஞர் முற்றம்

### கவிஞர் மா. பீதாம்பரன்

ஈழத்துக் குழந்தை இலக்கிய முன்னோடிகளுள் அடுத்து நம் கவனத்தை ஈர்ப்பவர் கவிஞர் மா. பீதாம்பரன் ஆவார். இவரது குழந்தைப் பாடல்கள் எளிமையும் இனிமையும் கொண்டவை. அவை 'ஈழகேசரி' இதழ்களிலும் பிள்ளைப் பாட்டு என்னும் நூலிலும் இடம் பெற்றுள்ளன. சிறந்த குழந்தைக் கவிஞராகப் போற்றப்பட்ட இவர், முன்னைநாள் வித்தியாதரிசி (அமரர்) கே.எஸ்.அருணந்தி அவர்களின் பெருமுயற்சியால் வட இலங்கைத் தமிழாசிரிய சங்கத்தின் மூலம் நடத்தப்பட்ட குழந்தைகளுக்கான பாடல் இயற்றும் போட்டியில் முதற்பரிசு பெற்றவர். சிறுவர்களுக்கான பாடல் இயற்றும் போட்டியிலும் இவருக்கு இரண்டாவது பரிசு கிடைத்தது. குழந்தைகளுக்கான பாடற் போட்டியில் பரிசு பெற்ற இவரது பாடல்களில் ஒன்று ஆலமரம் பற்றியது.

ஆலமரம் ஆலமரம்
அழகான ஆலமரம்
பாலர் நாங்கள் பாடல் ஆடல்
பழக நல்ல ஆலமரம்.

சின்னஞ் சிறு குழந்தை ஆலமரத்தைப் பற்றித் தானே பாடுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. எளிமையான சொற்களும் இனிய சந்தமும் இவரது பாடல்களில் தலைதூக்கி நிற்பதைப் பெரிதும் காணலாம்.

காலையில் சூரிய உதயம் கண்டு தாமரை குளத்தில் மலர்கின்றது. இதனைக் கண்ணுற்ற சிறுவன் மாலையில் மல்லிகையும் ஆம்பலும் மலர்வதைக் காண்கிறான். அவற்றை வண்டினம் சுற்றி வட்டமிட்டு ரீங்காரம் செய்வதையும் காண்கிறான். வாய் திறந்து பாடுகிறான்.

மகிழ்வு கொண்டேன்
காலை விரிந்திடும் கமலம் கண்டேன்
களிப்புக் கொண்டேன் நான்
களிப்புக் கொண்டேன் –நான்

மாலை விரிந்திடும் மல்லிகை கண்டேன்
மகிழ்வு கொண்டேன் – நான்
மகிழ்வு கொண்டேன் –நான்

அந்தி மலர்ந்திடும் ஆம்பல் கண்டேன்
அக மகிழ்ந்தேன் – நான்
அக மகிழ்ந்தேன் – நான்

வந்திசை பாடும் வண்டினம் கண்டேன்
மன மகிழ்ந்தேன் –நான்
மன மகிழ்ந்தேன் –நான்

இயல்பாகவே சிறுவன் பார்த்து இன்புற்றுத் தன் மன உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் இப்பாடல்கள் அமைந்துள்ளன. கவிஞர் பீதாம்பரனே இதனைப் பாடியவராவார்.

## தகவல் முற்றம்

### வருடங்கள்

1. லூனா வருடம் - 954 நாட்கள்
2. லீப் வருடம் - 366 நாட்கள்.
3. ஜூலியன் வருடம் - 356 1/2 நாட்கள்.
4. கோலார் வருடம் - 365 நாட்கள், 5 மணித்தியாலம், 48 நிமிடம், 8 செக்கன்.
5. சைபில் வருடம் - 368 நாட்கள், 6 மணித்தியாலம், 9 நிமிடம், 8 செக்கன்.
6. அனாமலிஸ்லிக் வருடம் - 365 நாட்கள், 6 மணித்தியாலம் 13 நிமிடம் 19.3 செக்கன்.
7. கிரிகோரியன் வருடம் -965 நாள், 5 மணித்தியாலம், 49 நிமிடம், 12 செக்கன்.

### தெரிந்துகொள்ள...

உலகில் மிக ஆழமான ஏரி - பைக்கால் ஏரி.
உலகில் மிகப் பெரிய தீபகற்பம் - அரேபிய தீபகற்பம்.
உலகில் மிக நீண்ட குகை - ரெஸ்பூடு, மாமிற்.
உலகில் மிக உயரமான எரிமலை -கொடாபாக்கினி.
உலகில் மிக நீளமான அணை - கௌஸ்டாம்.
உலகில் மிக ஆழமான அகழி - மரியானா.
உலகில் மிக உயரமான நீர்வீழ்ச்சி - நயாகரா.

*– லோ. காந்தரூபி*

### சர்வதேசக் குறியீடுகள்

ஒலிவ் மரத்தின் இலை - சமாதானம்
வெண்புறா - சமாதானம்
சக்கரம் - வளர்ச்சியைக் குறிக்கும்.
தாமரை - பண்பாடு, நாகரிகம்.
கையில், சட்டையில் கறுப்புத்துணி - துக்கம்.
கறுப்புக்கொடி - எதிர்ப்பு, துக்கம்
எலும்பு நடுவில் மண்டையோடு - ஆபத்து.
சிவப்பு விளக்கு - ஆபத்து, நிறுத்து
செஞ்சிலுவை - மருத்துவமனை, செஞ்சிலுவைச் சங்கம்.
சிவப்பு முக்கோணம் - குடும்பக்கட்டுப்பாடு.

## பேனாத் துப்பாக்கியுடன் கைதான பெண்

ஸ்பெயினில் கடந்த வாரம் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார். அவரிடம் இருந்து 38 பேனாத் துப்பாக்கிகளைக் கைப்பற்றியுள்ளதாக ஸ்பெயின் பொலிசார் தெரிவித்துள்ளனர். 27 வயதான அந்தப் பெண் ஒரு ரஷ்ய அல்லது கொசோவாப் பிரஜையாக இருக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ள பொலிசார், அவரது பெயர் விபரங்களை வெளியிட மறுத்துவிட்டனர். அத்துடன் அத் துப்பாக்கிகளுடன் 99 தோட்டாக்களையும் கைப்பற்றியுள்ளனர்.

இதுவரை படங்களில்தான் இவ்வாறான துப்பாக்கிகள் இருப்பதாகக் காண்பிக்கப்பட்டதைப் பாத்திருக்கின்றோம். ஆனால் இப்போதுதான், உண்மையிலேயே இவ்வாறான துப்பாக்கிகளை நேரில் பார்க்கின்றோம் என ஒரு பொலிசார் தெரிவித்திருக்கின்றார்.

## கோவாப் பெண்!

உயிரினங்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் மிருகங்கள் சட்டக் குழு என்ற அமைப்பைச் சேர்ந்த இந்தப் பெண், உயிர்களைக் காப்பாற்றுவதற்காகத் தாவர உணவுகளை உண்ணுமாறு வலியுறுத்தி வருகின்றார்.




கடந்த 8ம் திகதி பிலிப்பைன்ஸ் தலைநகர் மனிலாவில் நடைபெற்ற பிரச்சார நடிவடிக்கை ஒன்றில், கோவா இலைகளை ஆடையாக்கித் தன் உடலை மறைத்து மரக்கறியின் மகிமையை உணர்த்தியுள்ளார்.

## பலசும் பத்சும்

## அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்குத்தான்...

ஜப்பானியக் கலாச்சாரப் போட்டியான சுமோ மல்யுத்தம் சீனாவில் உள்ள சாங்காய் நகரில் கடந்தவாரம் நடைபெற்றது. 111 சுமோ மல்யுத்த வீரர்கள் கலந்து கொண்ட இந்தப் போட்டி 2 நாள் நடைபெற்றது. இதன் ஒரு பகுதியாகச் சிறுவர்களுடன் மோதும் நிகழ்ச்சி ஒன்றும் நடைபெற்றது. மலைகளுடன்





தனியாக மோதி வெல்ல முடியாத இந்தச் சிறுவர்கள் ஒன்றாக மோதி மலையையே சரித்து விட்டார்களே..!

### மலையுடன் மோதிய மடுக்கள்..!




## நூல் நிலையங்களுக்கு 323,042,000 பேர்!

*இங்கிலாந்தில் 2002ம் ஆண்டிலும் 2003ம் ஆண்டிலும் நூல்நிலையங்களுக்குச் செல்வோரின் எண்ணிக்கை 323,042,000பேர் என பதிவாகியுள்ளது. இவ்வெண்ணிக்கை 1995ம் ஆண்டின் எண்ணிக்கையைக் காட்டிலும் 50 இலட்சம் கூடுதலாக இருக்கிறதாம்!*

## வாழைப்பழத்தில் இருந்து மின்சாரம்!

வாழைப்பழத்தில் இருந்து மின்சாரம் தயாரிக்க முடியும் என்று அவுஷ்திரேலிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இதுபற்றி அவுஷ்திரேலிய வாழை பயிரிடுவோர் சங்கத் தலைவர் டோனி ஹெய்ட்ரிச் கூறுகையில், கெட்டுப்போன வாழைப்பழங்களில் இருந்து. 500 வீடுகளுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். அரசாங்க நிதி உதவியுடன் நடத்தப்பட்ட ஆராய்ச்சி மூலம் இது கண்டுபிடிக்கப்பட்டது. மற்றப் பழங்களில் இருந்தும் மின்சாரம் தயாரிக்க முடியும். தொடக்கத்தில் வாழைப்பழத்தின் மூலம் மின்சாரம் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என ஹெய்ட்ரிச் கூறினார்.



## உலக சாதனை படைத்த இந்திய இராணுவத்தினர்

34 இந்திய இராணுவத்தினர் ஒரு மோட்டார் சைக்கிளில் பயணம் செய்து உலக சாதனை ஒன்றைப் படைத்திருக்கின்றனர். பெங்களூரில் உள்ள இராணுவத்தினரின் ஒரு பிரிவினரே இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளனர். கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற இந் நிகழ்வில் இந்தச் சாதனைக்காக 500 சிசி ரக றோயல் என் பீல்ட் மோட்டார் சைக்கிள் பயன்படுத்தப் பட்டது. சுமார் ஐந்து நிமிடங்கள் 600 மீற்றர் தூரம் இந்த மோட்டார் சைக்கிளில் 34 பேர் பயணம் செய்து சாதனை படைத்துள்ளனர். இந்த ரக மோட்டார் சைக்களில் 30 பேர் பயணம் செய்ததே இதுவரை சாதனையாக இருந்து வந்தது. இது இப்போது முறியடிக்கப் பட்டுள்ளது.





## எமது விடிவிற்காகத் தமது உயிர்களை...



## ஆனையிறவின் வெற்றிக்காக வீழ்ந்த வீரன்

# லெப்.கேணல் மதன்

கடல் வளம் அற்ற மாவட்டம் வவுனியா. ஆனால் குளங்கள் நிறையப் பெற்ற குளிர்மையான பிரதேசங்களை வவுனியா மாவட்டம் தன்னுள் அடக்கியுள்ளது. அழகிய இயற்கை வளங்களையும் தன் மேனி குளிரப் போர்த்தி உள்ளாள், இயற்கைத் தாய். அடர்ந்து வளர்ந்தோங்கி இருக்கும் பச்சைக் காடுகள். படர்ந்து விரிந்திருக்கும் பசும் வயல் வெளிகள். சலசலத்து ஓடும் அருவிகள். வயல் வெளிகளில் தோகை விரித்தாடும் மயில் கூட்டங்கள். கண் கவர் அழகு தரும் இயற்கை அன்னைக் கொடைகள். இவ்வளவு பெருமைகளுக்கும் உரியதாய் வன்னிப் பெருநிலப் பரப்போடு இணைந்த மாவட்டம் வவுனியா.

இங்கே கூமாங்குளம் எனும் இயற்கை எழில் நிறைந்த ஓர் ஊர் உண்டு. கூமாங்குளத்திலே திரு.திருமதி துரைச்சாமி குடும்பத்தினருக்கு 1972ம் ஆண்டு பிறந்தான் மதன். இவனுக்கு இயற்பெயர் சுந்தரலிங்கம் என்பதாகும். இவனது பள்ளிப் பருவ வாழ்க்கை இனிமையாகக் கழிந்தது. ஆடலும் பாடலும் விளையாட்டும் இவனுக்குப் பிடித்த கலைகள்.

இவனது இளமைப் பருவ காலத்திலே சிங்கள இனவாத அரசின் அராஜகங்கள் தலைவிரித்தாடின. கொலைகள் காட்டிக் கொடுப்புகள் கைதுகள் என சித்திரவதைகள் நீண்டு கொண்டு போகும். தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தனர். சிங்களக் காடையர்களின் வெறியாட்டங்கள் இவனது ஊரையும் விட்டு வைக்கவில்லை. இவற்றைப் பார்த்து உளம் நொந்து போனான் சுந்தரலிங்கம்.

எனினும் சாதாரண குடிமகனாய் இருக்கும் தன்னால் என்ன செய்ய முடியும். 1990ம் ஆண்டில் சிங்கள இனவாதத்திற்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராட என்று தன்னைக் கரிகாலன் படையிலே இணைத்துக் கொள்கிறான் சுந்தரலிங்கம். 'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே' என்ற மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் அர்த்தம் செறிந்த வரிகளைக் கற்றறிந்த போதும் கூட இவனுள் மனக்கிளர்ச்சி வரவில்லை. ஆனால் தனது கண் முன்னே தனது தாய் மண் படும் துயரத்தைக் கண்டு பொறுக்க முடியாமலே புலியானான் சுந்தரலிங்கம்.

சுந்தரலிங்கத்திற்கான அடிப்படைப் பயிற்சிகள் முடிந்தது. இவன் தனது பெயரை மதன் என்று தலைவனின் பிள்ளையாக மாற்றிக் கொள்கிறான். வீட்டிற்கு துரைச்சாமியின் மகன் - மதன். நாட்டிலோ கரிகாலனின் - மகன் என்று இலட்சியத்தோடு களப்புலியானான். இவனது முதற் களமாக பாவற்குளம் பகுதியில் அமைந்திருந்த சிறீலங்கா காவலரண் மீதான தாக்குதல் ஆகும். இது ஒரு வெற்றிகரத் தாக்குதல் ஆகும்.

இந்தமுதற் தாக்குதலே இவனுக்கு அனுபவத்தைக் கற்றுக் கொடுத்தது. மதன் பின்னர் வவுனியாக் கோட்டத்தில் வேவுப்புலி வீரனாயும் நின்று செயலாற்றினான். இவனிடம் ஆற்றல், ஆளுமை தாராளமாக இருந்தது. அவனது இலட்சியம் சிறந்த விடுதலை வீரனாக இருப்பது என்பதே.

இந்த வகையில் 1995ம் ஆண்டு காலப்பகுதியில் வவுனியாக் கோட்டப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான். பொறுப்பாளர் என்ற பொறுப்புணர்வுடன் போராளிகளுடன் அன்பாக நடந்து கொள்வான். எல்லாப் போராளிகளையும் தன் உடன் பிறப்புகள் என்றே நினைத்துக் கடமைபுரியும் விடுதலை வீரன் இவன். பின்பு 1995ம் ஆண்டு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றவென இராணுவத்தால் மேற்கொண்ட சூரியக்கதிர் நடவடிக்கையின் எதிர் முறியடிப்புச் சமரில் கொம்கனிப் பொறுப்பாளராக நின்று திறம்படச் சண்டையை வழி நடத்தினான். திறமையாய் சண்டை பிடித்த வீரப்புலி மதன்.

சூரியக்கதிர் எதிர்முறியடிப்புச் சமரின் போது தன்னுடலில் பல விழுப்புண்களை ஏற்றுக்குருதி சிந்தி தமிழ் அன்னை விலங்கொடித்த மாவீரன். அதன் பின்னர் 1996ல் வன்னி மாவட்டத் தாக்குதல் 'சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியுடன்' இணைக்கப்பட்டபோது இவனுக்கு ஆனையிறவுப் படைத்தளம் மீதான வேவுப்பணி கொடுக்கப்பட்டது.

'நீரும் அசையாமல் நிலமும் அதிராமல் நிழல் எனப் போய் வருகின்றீர்'

என்ற பாடல் வரிகளுக்கு ஏற்றாற் போல் இவனது வேவு நடவடிக்கைகள் இருக்கும். எந்த இக்கட்டான சூழ்நிலையிலும் தன் பணி முடிக்கத் துடிக்கும் மறப்புலி வீரன் இவன். இவ்வாறு வேவு நடவடிக்கையில் ஈடுபடும் பொழுது ஒருநாள் மதன் தனது வலதுகாலை முழங்காலுக்கு கீழே இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் பின் வன்னியை முற்று கையிட்டு முன்னேறிய ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கைக்கு எதிர் முறியடிப்புச் சமருக்கு மதன் ஒரு வேலைத் திட்டத்தின் பொறுப்பாளராய் நின்று களமாடினான். மதனைத் தெரியாத போராளிகளோ பொறுப்பாளர்களோ இல்லையெனலாம். காரணம் இவனது சிநேகப்பழக்கம் தான்.

1998ம் ஆண்டு காலப்பகுதியில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் நிர்வாகப் பொறுப்பாளராக் கடமையேற்றான். தனது திறமையால் சிறந்த நிர்வாகப் பொறுப்பாளராய் பணியாற்றிய வீரன்.

சண்டைக்களங்களில் விழுப்புண்ணடைந்து மருத்துவமனையில் இருக்கும் போராளிகளை தினமும் சென்று பார்வையிடும் பண்பு கொண்டவன். அவர்களுடன் பரிவாகக் கதைத்து ஆறுதல் வார்த்தை கூறும் இயல்பு இவனது இதயத்து உணர்வை வெளிக்காட்டி நிற்கும். அந்தப் போராளியின் தேவையை உணர்ந்து நிவர்த்தி செய்யவும் ஆவன செய்யும் நிர்வாகி எனில் அது மிகையாகாது.

தனது ஒரு காலை தாயக விடுதலைக்காய் இழந்தும் கூட மனதளவில் ஊனமடையாத மாவீரன். உள்ளம் நல்லாயிருந்தால் ஊனம் ஒரு குறையில்ல என்ற கவிஞனின் பாடல் வரிகளுக்கேற்ப மதன் உடம்பில் ஊனம் அடைந்தாலும் உள்ளத்தில் நல்ல உணர்வுகளைப் பெற்றுத் தமிழீழ விடுதலைக்காய் தன்னை வருத்தி உழைத்த வேங்கை என்றுதான் குறிப்பிட வேண்டும்.

அதன் பின் ஓயாத அலை-3 பெருஞ் சமர் எழுந்து வெற்றி வாகை சூடிக் கொண்டிருந்த காலம். அப்போது தமிழீழத்திலேயே முதன்முதலாக யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற குடாரப்பு தரையிறக்கத் தாக்குதலுக்கு கண்டி வீதியைக் கைப்பற்றும் அணிகளுக்கான 'சப்ளை'ப்பொறுப்பாளராக இருந்தான். இத்தாக்குதலில் பல இன்னல்களைச் சந்தித்தும் பலமாக நின்றான். சண்டையில் சளைக்காது நின்று போராடிய மாவீரன் மதன். பின் ஆனையிறவைக் கைப்பற்ற இரண்டு நாட்களுக்கு முன் எதிரியின் எறிகணையொன்று இவனருகில் வீழ்ந்து வெடித்தபோது குருதிக்குளத்தில் அமிழ்ந்து போனான்.

லெப்.கேணல் மதனாக எமை விட்டுப் பிரிந்து போய் விட்டான். மதனின் தோழர்கள் அவனின் நினைவுடன் களம் வெல்வர். விடுதலைப் பயிருக்கு உரம் சேர்த்த வீர மறவனே உன் கனவு ஈடேறும் காலம் வெகு விரைவில்...

**– நி.குமுதன்**

---

# என்னோடு நான்

**கந்தையா நவரேந்திரன்**

## சொற்களுக்கிடையே இருக்கும் அமைதி

எங்கள் மீது பொழியப்படும் சொற்களைச் செவிமடுக்கும் நாம், ஏனோ அந்தச் சொற்களுக்கிடையே காணும் அமைதிகளையும், இடைவெளிகளையும், பேச்சிடை ஓய்வுகளையும் தவறவிட்டுவிடுகின்றோம். சொற்களுக்கிடையே இருக்கும் அமைதிகளிலேயே உண்மையான உள்ளார்ந்த செய்தி உள்ளது என்பதை நாம் ஏனோ புரிந்து கொள்ளுகின்றோமில்லை. பேசுபவர்களைப்போல், அவரது பேச்சுக்களும் எங்களது புலன்களுக்குப் புலப்படும் வண்ணம் மேற்பரப்பிலேயே உள்ளது. அமைதி என்ற வலுவான ஊடகத்தினூடாகவே நாங்கள் எவ்விதச் சொற் தடைகளும் இல்லாமல் எமது அகம் நோக்கி ஊடுருவ முடிகிறது. அறிவது விஞ்ஞான் ரீதியானது. அறிவால் 'அன்பு' எம்முள் எழாது. அமைதியிலேயே சரியான உறவு ஏற்படும். எந்த உறவினதும் உச்ச நிலை அன்பேயாகும்.

பொதுவாக நாம் ஒரு சொற்பொழிவைக் கேட்டுவிட்டு மிகவும் திருப்தியுடன் வீடு திரும்புகின்றோம். அது எங்களைத் திருப்திப்படுத்துகிறது. எங்களது மேலெழுந்தவாரியான அறிவுப் பசிக்கு அது தீனி போடுகிறது. சிலருக்கு அது அறுசுவை உண்டியாகவும், வேறு சிலருக்கு நொறுக்குத் தீனியாகவும் அது அமைகிறது. நாங்கள் கேட்பதெல்லாம் சொற்களால் அலங்கரிக்கப்பட்ட - மூடப்பட்ட எண்ணங்களேயாகும். இச்சொற்களால் என்ன பயன்? சொற்களென்னும் ஆயுதங்களின் துணைகொண்டு எங்களுக்குள் சுலபமாக ஓர் ஆக்கிரமிப்புப் போரை ஒருவர் நடாத்துகிறார். நாமும் அவரது அத்துமீறிய ஆக்கிரமிப்புக்கு, அது ஒரு வன்முறையான ஆக்கிரமிப்பு என்பதைப் புரியாமல், இடமளித்துக் கொண்டிருக்கின்றோம். நமது முன்னைய சந்ததியினர் இதைத்தான் செய்துகொண்டிருந்தார்கள். நாமும் இதையே செய்துகொண்டிருக்கின்றோம். நாம் ஏற்கெனவே எமது மனத்தில் தேக்கி வைத்திருக்கும் அறிவுடன் ஒத்துப்போகும் பேச்சை ஆரவாரத்தோடு கரகோஷம் செய்து வரவேற்கின்றோம். எங்களது முடிவுக்கு முரணாக அப்பேச்சு அமைந்தால் முகஞ்சுழித்துக் கூக்குரலிட்டு எங்களது வெறுப்பைத் தெரிவிக்கின்றோம். இதனால் நாம் கண்ட விளைவு தான் என்ன?

விஞ்ஞானம் ஐயத்தையே அடிப்படையாகக் கொண்டு வளர்வது. சமயமோ நல்லெண்ணத்தை அடிப்படையாகக் கொண்டது. இதுவே விஞ்ஞானத்திற்கும் சமயத்துக்கும் இடையே உள்ள அடிப்படை வித்தியாசம். அன்பென்னும் உலகில் ஐயம் இயைபற்றது. அதைப்போலவே பொருட்களை முதன்மைப்படுத்தும் உலகில் நல்லெண்ணம் இயைபற்றது. விஞ்ஞானி வெறுமனே சும்மா இருந்து கொண்டு ஏதாவதொன்று நிகழுமென வெறும் நல்லெண்ணத்துடன் மட்டும் காத்திருந்தால் எதுவுமே நிகழாது. அவர் ஐயப்படவேண்டும். விசாரணையில் ஈடுபடவேண்டும். துருவித்துருவி ஆராயவேண்டும். அறுத்து அறுத்து ஆய்வு செய்யவேண்டும். தனது மனத்தையும், தருக்கத் திறமையையும் முழு அளவில் உபயோகிக்க வேண்டும். அப்படிச் செய்தாலேயே அவரால் ஒரு முடிவுக்கு வர இயலும். அவர் கண்ட அவரது அந்த முடிவுகள் எப்பொழுதும் ஏறத்தாழச் சரியாக இருக்குமேயன்றி என்றும் மாறாத தன்மை கொண்ட முடிந்த முடிவாக இரா. அவர் கண்ட முடிவுகள் யாவும் சார்பு நிலையானவைகளாகவே இருக்கும். ஏனெனில் எதிர்காலத்தில் கிடைக்கப்படும் கூடுதல் அல்லது மேலதிக அல்லது புதிய தரவுகளால் - நிகழ்வுகளால் அவை முற்றுமுழுதாகவே மாறக்கூடும். எனவே விஞ்ஞானிகளின் முடிவுகள் யாவும் ஐயத்திற்கோ - புறநடைக்கோ - மறுப்புக்கோ இடமில்லாதவையாக இரா. அதனால் தான் விஞ்ஞானம் வளர்ந்துகொண்டிருக்கிறது - முன்னேறிக்கொண்டிருக்கிறது. எனவே முடிவுகள் எங்களது நல்லெண்ணத்தை அடிப்படையாகக் கொண்டவையல்ல. அவை என்றும் புனைவுகோளாக, தருக்கத்தை அடிப்படையாகக் கொண்ட தற்காலிகக் கருத்துக்களாக இருக்கின்றன. ஒரு புனைவுகோள் நிகழ்காலம் வரை சரியாக இருக்கும். எதிர்காலத்திலும் அது அவ்வாறே சரியாக இருக்குமா என்று நிச்சயமாகக் கூறமுடியாது. எதிர்காலத்தில் கூடிய நிகழ்வுகள் கிடைக்கும்போது அப்புனைவுகோளில் சிலபல மாற்றங்களைச் செய்ய நேரிடும். எனவேதான் விஞ்ஞானம் மாறிக் கொண்டே இருக்கிறது. புறத்தைப் பொறுத்த மட்டில் மாற்றம் வளர்ச்சியைக் குறிக்கும். புறத்தில் மாற்றமே யதார்த்தம். மாற்றம் என்பது நேரத்திற்குள் - காலத்திற்குள் நிகழ்வது. மனத்தின் இருப்பே நேரத்தில் - காலத்தில் தான் உள்ளது.

மனமானது தற்காலிகமானது. கணத்திற்குரியது. சமயமோ ஒரு முற்றுமுழுதான, வித்தியாசமான உருவளவை (Dimension) க் கொண்டது. அது நல்லெண்ணத்தில் - அன்பில் எழுவது. எனவே அங்கே அறிதல் என்பது முற்றிலும் ஒரு வித்தியாசமான பரிமாணத்தில் நடைபெறுகிறது. நாங்கள் ஒரு பெண்மீது அன்பு செலுத்தும்போது நாங்கள் அவளை அறிந்து கொள்கிறோம். ஒரு பெண் நோய்

> முடிவுகள் எங்களைப் பேராசிரியர்களாகவும், அரசியல்வாதிகளாகவும், கல்விமான்களாகவும், அறிஞர்களாகவும் ஆக்கும். இந்த முடிவுகள் புலன் சார்ந்த உலகப் பகட்டுகளுக்கு உதவும். மூளையை அறிவால் நிரப்பி எம்மைக் காலத்தின் வரையறைகளுக்குள் திணித்து வைக்கவே முடிவுகள் உதவும்.

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

# காயமே கோயிலாக...

அண்மையில் நான் பாரிசின் புறநகர்ப் பகுதியிலுள்ள எனது நண்பர் ஒருவரின் வீட்டுக்குச் சென்ற போது தாயகத்தில் இருந்து அவரது உறவினர் ஒருவருக்கு வந்த கடிதத்தையும் அதனுடன் சேர்ந்து வந்த திட்ட அறிக்கை ஒன்றையும் அவர் எனக்குக் காட்டினார்.

அதைப் பார்த்தபோது உண்மையிலேயே எனக்கு அடக்க முடியாத ஆத்திரம் வந்தது. சிறீலங்கா அரசு எம் மீது திணித்த கொடிய போரினால் பல ஆயிரக் கணக்கான குழந்தைகள் பெற்றோரை இழந்து நிற்கதியாக நிற்கும் நிலையில், இன்னும் பல்லாயிரக் கணக்கான குழந்தைகள் பாடசாலைக்குச் சென்று கல்விகற்க வழியில்லாமல் வறுமையில் வாடும் நிலையில், இலட்சக் கணக்கான மக்கள் சொந்த வீடுகளை இழந்து இரவல் தாழ்வாரத்திலும் கீற்றுக் கொட்டில்களிலும் அவல வாழ்வு நடத்தும் நிலையில், தாயகத்தில் ஓரிடத்தில் ஒன்றரைக் கோடி ரூபா செலவில் ஏற்கனவே நல்ல நிலையில் உள்ள ஒரு கோவிலை புனருத்தாரணம் செய்யப் போகிறார்களாம்.

இந்தப் புனருத்தாரணத் திருப்பணிக்கு அந்தக் கோவில் உள்ள ஊரைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொருவரும் 900 யூரோ பணம் அனுப்ப வேண்டுமாம். பாவம் கடவுள் பக்தியுள்ள அந்த ஊர் மக்கள்

*தன்னைப் பெற்றெடுத்த தாய் பட்டினி கிடக்க, பசிக்காக அவளை மற்றவர்களிடம் கையேந்திப் பிச்சை எடுக்க விட்டுவிட்டு, மகன் ஊருக்கெல்லாம் தங்கக் காசு தானம் செய்வானாக இருந்தால் அதிலே பணச் செருக்குத்தான் இருக்குமே தவிர, நியாத் தன்மை இருக்காது. அது போலத்தான் போர் இன்னும் முழுமையாக முடிவுக்கு வராத இந்தக் காலகட்டத்தில், ஒன்றரைக் கோடி ரூபா செலவில் கோவிலைப் பிரமாண்டப் படுத்துவது அவசியமா?*



இந்தத் தொகையைக் கொடுக்காவிட்டால் கோவில் குற்றம் வந்துவிடுமோ என்று பயந்து கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில் கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் கோவில் கட்டுவதென்பது ஒரு புண்ணிய காரியம் என்று நினைப்பது யதார்த்தமானது. ஆனால் முற்றிலும் அழிந்து சிதைந்து போய், இடிந்து விழும் நிலையில் இருக்கும் ஒரு கோவிலைப் புனரமைப்பது என்பது வேறு, நல்ல நிலையில் இருக்கும் ஒரு கோவிலை அந்தஸ்த்துக்காகப் பிரமாண்டமாக இடித்துக் கட்டுவது என்பது வேறு. ஒருவர் தன்னுடைய சொந்தப் பணத்தில் இவ்வாறான பிரமாண்டங்களைச் செய்வதையிட்டு நாங்கள் பெரிதாக அக்கறைப்பட வேண்டிய அவசியம் இல்லை. அவருடைய தனிப்பட்ட மெய்யியல் ஆன்மீகத் தளத்துக்குள் புகுந்து விமர்சனம் செய்ய வேண்டிய தேவையும் இப்போது இல்லை. அது போல அவர் கோவில் கட்டுவது சரியா பிழையா என்ற விவாதமும் நமக்கு இப்போது அவசியமில்லை.

ஆனால் பொதுமக்களிடம் பணத்தைத் திரட்டி இந்தப் பிரமாண்டத்தைச் செய்ய முற்படும் போது நாம் கொஞ்சம் கதைக்கத்தான் வேண்டி இருக்கிறது. ஊருக்காக, ஊரிலுள்ள மக்களின் முன்னேற்றத்துக்காக, சமூக அக்கறையுள்ளவர்கள் சில விடயங்களைப் பொதுத் தொண்டாக நினைத்து செய்யமுற்படுவது நல்லதுதான். ஆனால் பொதுத் தொண்டாகப் பொதுமைப் படுத்தப்படுகின்ற விடயம் எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது? அது இந்தக் காலகட்டத்துக்கு அத்தியாவசியமானதா? அதன் சமூகப் பெறுமதி என்ன?

என்பதையெல்லாம் கணக்குப் போட்டுப் பார்த்துத்தான் அந்தக் காரியத்தில் இறங்க வேண்டும்.

தன்னைப் பெற்றெடுத்த தாய் பட்டினி கிடக்க, பசிக்காக அவளை மற்றவர்களிடம் கையேந்திப் பிச்சை எடுக்க விட்டுவிட்டு, மகன் ஊருக்கெல்லாம் தங்கக் காசு தானம் செய்வானாக இருந்தால் அதிலே பணச் செருக்குத்தான் இருக்குமே தவிர, நியாத் தன்மை இருக்காது. அது போலத்தான் போர் இன்னும் முழுமையாக முடிவுக்கு வராத இந்தக் காலகட்டத்தில், ஒன்றரைக் கோடி ரூபா செலவில் கோவிலைப் பிரமாண்டப் படுத்துவது அவசியமா? என்ற கேள்வியைக் கேட்டுப் பார்க்க வேண்டியிருக்கிறது.

பிரமாண்டமாகக் கோவில் கட்டுவது என்கின்றபோது எனக்கு ஒரு நாயனாருடைய கதை ஞாபகத்துக்கு வருகிறது.

அவருடைய பெயர் பூசலார் நாயனார். தமிழ்நாட்டைப் பல்லவ மன்னர்கள் ஆட்சி செய்த காலத்தில் திருநின்றவூர் என்ற ஊரிலே வாழ்ந்தவர். மிகச் சிறந்த சிவபக்தரான அவர், தான் தினசரி வணங்கும் நடராஜப் பெருமானுக்குத் தன்னுடைய ஊரில் ஒரு பெரிய கோவில் கட்டவேண்டும் என்று விரும்பினார். ஆனால் அந்தளவுக்கு அவர் பணக்காரர் இல்லை. ஊரெல்லாம் சென்று பொருள் திரட்டி இந்தத் திருப்பணியைச் செய்து முடிக்கலாம் என்று எண்ணினார். அதற்கான முயற்சியில் இறங்கியபோது ஊரெல்லாம் வறுமை வந்து மக்களிடம் பொருளில்லாமல் போனது.

தன்னுடைய முயற்சி கை கூடவில்லையே என்று வருந்திய பூசலாருக்குத் திடீரென்று ஒரு எண்ணம் தோன்றியது. எங்கும் நிறைந்த இறைவனுக்குக் கல்லும் மண்ணும் கொண்டு வெளியில் தானா கோவில் கட்ட வேண்டும்? மனதுக்குள்ளேயே கோவில் கட்டலாமே என்று எண்ணினார். தனது மனதை அடித் தளமாக்கி, தனது சிந்தனைத் தளத்திலே அவர் கோவில் கட்ட ஆரம்பித்தார். அதே நேரத்திலே ஆட்சியிலிருந்த பல்லவ மன்னனும் தனது தலை நகரமான காஞ்சிபுரத்திலே மிகப் பெரிய பொருட் செலவில் பிரமாண்டமான கோவில் ஒன்றைக் கட்டுவித்தான். கோவில் கட்டட வேலைகள் முடிந்து குடமுழுக்குக்கான திகதியும் குறிக்கப்பட்டது. மன்னன் கட்டிய கோவிலுக்குக் குறிக்கப்பட்ட அதே திகதியிலேயே பூசலார் நாயனார், தான் தனது மனதில் கட்டிய கோவிலுக்கும் குடமுழுக்குச் செய்யத் திட்டமிட்டிருந்தார்.

பூசலாரைப் போல மன்னனும் சிறந்த சிவபக்தன். கோவில் குடமுழுக்குக்குத் திகதி அறிவிக்கப்பட்ட அன்றிரவு, மன்னனின் கனவில் தோன்றிய இறைவன் அவன் கட்டிய கோவிலை விடப் பூசலார் கட்டிய கோவிலே மிகப் பெரிய கோவில் என்றும் தான் அந்தக் கோவில் குடமுழுக்குக்குச் செல்ல இருப்பதால் மன்னனின் கோவில் குடமுழுக்கை வேறொரு திகதிக்கு மாற்றும் படியும் கூறினார். திடுக்கிட்டுப் போன மன்னன் தன்னைவிடப் பெரிய கோவிலைக் கட்டிய பூசலார் நாயனார் யார் என்று தேடி அறிந்தபோது அவரது உண்மையான எளிமையான பக்தியைக் கண்டு வணங்கினான்.

இது ஒரு புராணக் கதை என்றாலும் இறைவனின் பேரால் செய்யப்படும் ஆடம்பரங்கள் பிரமாண்டங்கள் விரும்பப்படுவதில்லை என்ற உண்மையை இது உணர்த்துகின்றது.

**திரலோன்**

# மனக்கதவு திறக்குமா?

## காந்தி நிலையம்.



இது கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் உள்ள சிறுவர் பராமரிப்பு இல்லம். இங்கே போரினால் பெற்றோரை இழந்த சிறுவர்களும், பெற்றோர்கள் உயிருடன் இருக்கிறார்களா என்பதைக் கூட அறியாத சிறுவர்களும், வறுமை காரணமாக பெற்றோரால் கொண்டுவந்து ஒப்படைக்கப்பட்ட சிறுவர்களும் தங்கவைத்துப் பராமரிக்கப் படுகிறார்கள்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் நிர்வகிக்கப் படும் இந்த இல்லத்துக்குச் செல்லக் கூடிய வாய்ப்பு அண்மையில் எனக்குக் கிடைத்தது. இரண்டு மூன்று வயதுப் பாலகர்களிலிருந்து கல்லூரிக்குச் செல்லும் சிறுவர்கள் என்று பலதரப்பட்டவர்களும் மகிழ்ச்சியுடன் ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவுஸ்திரேலியா, கனடா, ஐக்கிய இராட்சியம், பிரான்ஸ் என்று பல்வேறு நாடுகளையும் சேர்ந்த சென்ற ஒரு குழுவாக அங்கு சென்ற நாங்கள் அந்தச் சிறுவர்களுடன் ஒரு சிறிய சந்திப்பொன்றை நிகழ்த்தினோம்.

ஆடல், பாடல், கவிதை, பேச்சு என்று அங்கிருந்த சிறுவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி எங்களைப் பிரமிக்க வைத்துவிட்டார்கள்.

அதிலும் அங்கிருந்த ஒரு சிறுவன், அவனுக்குப் பதினொன்று அல்லது பன்னிரெண்டு வயதுதான் இருக்கும், மிகச் சிறந்த பேச்சு வல்லமையுடையவனாக இருந்தான். அவனுக்கு நாங்கள் எந்தத் தலைப்பைக் கொடுத்தாலும் உடனே பேசிவிடுவான். அதிலும் சும்மா நுணிப்புல் மேய்ந்தமாதிரியான பேச்சல்ல. ஆழமான கருத்தியல் மற்றும் புள்ளிவிபரத் தரவுகளைக் கொண்ட பேச்சு.

நான் அவனுக்கு வன்னி மாணவர்களின் கல்வி நிலை என்ற தலைப்பை கொடுத்த போது. வன்னியில் உள்ள பாடசாலைகள் கற்பித்தல் முறை, மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கல்வியில் முதலிடத்தில் இருந்த யாழ்ப்பாணம் வெளிநாட்டுப் பணத்தின் வருகையால் 24வது இடத்துக்குப் பின்தள்ளிப் போயிருப்பது, வன்னி மாணவர்கள் பற்றாக்குறைகளுக்கும் வசதிக் குறைவுகளுக்கும் மத்தியில் கல்வியில் முன்னணியில் இருப்பது. பெற்றோரை இழந்த பிள்ளைகளின் எதிர்காலம் ஈருருளி *(மோட்டார் சைக்கில்)* கலாச்சாரத்தால் தமிழ் மாணவர்களின் ஏதிர்காலம் சீரழிந்து போவது. ஒரு ஈருருளி வாங்கச் செலவாகும் பணம் படிக்க வசதியில்லாத பத்து மாணவர்களைப் படிப்பிக்க உதவும் என்று மடை திறந்த வெள்ளம் என்று சொல்லுமாப் போல வார்த்தை மழை பொழிந்து என்னைத் திகைப்பில் ஆழ்த்திவிட்டான்.

அந்த இல்லத்தை நிர்வகிக்கும் பொறுப்பாளர் சொன்னார்...' நிச்சயம் இந்தப் பிள்ளைகள் வரலாறு படைப்பார்கள். சமூக அக்கறையும் ஆளுமையும் உள்ளவர்களாக இவர்கள் வளர்வார்கள்.

இவர்களை வளர்க்க வேண்டிய பொறுப்பு தாயகத்தை நேசிக்கின்ற எல்லோருக்கும் இருக்கிறது. பெற்றோரை இழந்த ஒரு பிள்ளையை வளர்ப்பதற்கான வருடாந்தச் செலவு 20 ஆயிரம் ரூபா. படிக்க வசதியில்லாத ஒரு பிள்ளையை படிப்பிப்பதற்கான வருடாந்தச் செலவு 12 ஆயிரம் ரூபா.

புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு இது ஒரு சிறிய தொகை. ஆனால் இதனால் கிடைக்கக் கூடிய பலன் பணத்தால் அளவிட முடியாதது...'

இந்தக் குரல் நம்மவர்களின் மனக்கதவைத் தட்டுமா?

# ரெனிஸ் றோலண்ட் கறோஸ் 2004



வருடந்தோறும் முன்னணி வீரர்கள் புறந்தள்ளப்படும் களம் எனக் கூறப்படும் பிரான்சின் றோலண்ட் கறோஸ் சுற்றுப்போட்டி இம்முறையும் பலருக்குத் திரைபோட்டுவிட்டது. ஆண்கள் பிரிவில் காலிறுதி ஆட்டத்திற்கு முதன் முறையாக நான்கு ஆர்ஜென்ரீனா வீரர்கள் தெரிவானார்கள். ஸ்பெயின் நாட்டு வீரர்களின் இடத்தை இம்முறை ஆர்ஜென்ரீனா வீரர்கள் தமதாக்கிக் கொண்டார்கள் என்றே கூறலாம். அதேபோலவே பெண்கள் பிரிவு காலிறுதி ஆட்டத்திற்கு ரஷ்ய நாட்டு வீராங்கனைகள் மூவர் முதல் முறையாகத் தெரிவாகியிருந்தனர். அரையிறுதி ஆட்டத்திற்குத் தெரிவாகிய ரஷ்ய வீராங்கனைகளாகிய அனஸ்ரசியா மிஸ்கினா, எலினா டிமண்டியா ஆகியோர் முறையே 1999ம் ஆண்டு சம்பியனான அமெரிக்காவின் ஜெனிபர் கபிறியாற்றி ஆர்ஜென்ரீனாவின் போவ்லா சோவாஸ் ஆகியோரை வெற்றி கொண்டு இறுதி ஆட்டத்திற்கு தகுதிபெற்றனர். மறு முனையில் ஆண்கள் பிரிவில் 44வது தரநிலை வீரரான ஆர்ஜென்ரீனாவின் கஸ்ரன் கோடியோ தனது நாட்டு வீரரான டேவிட் நல்வெண்டியையும், 3ம் தரநிலைவீரரான குலோர்மோ கொறியா இங்கிலாந்தின் ரம்கென்மன்னேயும் தோற்கடித்து இறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றிருந்தனர்.

முதல் முறையாக இரண்டு பிரிவு இறுதியாட்டத்திற்கு ஆர்ஜென்ரீனா, ரஷ்ய வீரர், வீராங்கனைகள் தெரிவாகித் தமது நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளனர். பெண்கள் இறுதியாட்டத்திற்குத் தெரிவாகிய இரண்டு வீராங்கனைகளும் சிறுபராயத் தோழியர் என்பதுடன் ஒரே பயிற்சியாளரிடம் தமது ரெனிஸ் வாழ்வை ஆரம்பித்தவர்கள். அனஸ்ரசிய மிஸ்கினா 6-1, 6-2 எனும் நிலையில் எலினா டிமண்டியாவை வெற்றிகொண்டு



முதலாவது குறோண்ட் சலம் வென்ற ரஷ்ய வீராங்கனை என்ற சிறப்புப்பட்டத்தைப் பெற்றதோடு 8, 38, 000 யூரோக்களை பரிசுப் பணமாகவும் பெற்றுக்கொண்டார். ஆண்கள் பிரிவு இறுதி ஆட்டத்தில் குலோர்மோ கொறியா முதலாவது, இரண்டாவது செற்றை 6:0, 6:3 எனும் நிலையில் இலகுவாக வெற்றிகொண்டு மூன்றாவது செற்றுக்குள் நுழைந்தார். களம் திறக்கக் காத்திருந்தவர்போல கஸ்ரன் கோடியோ 6-4 எனும் நிலையில் வெற்றிகொள்ளத் தடுமாறிய கொறியா அடுத்த செற்றையும் 1-6 எனும் நிலையில் இழக்க ஐந்தாவது செற் இருவரிற்கும் பெரும் போராட்டமாகியது. அறுபத்தேழு நிமிட போராட்டத்தின் பின்னர் இஸ்ரன் கோடியோ 8:6 எனும் நிலையில் வெற்றிகொள்ள 0:6, 3:6, 6:4, 6:1,8:6 எனும் நிலையில் 211 நிமிடங்களில் ஆட்டம் முடிவுற்றது. 1977ம் ஆண்டு குலோமோ விலாஸ் இக்கிண்ணத்தை வெற்றிகொண்டிருந்தான். இருபத்துநான்கு ஆண்டுகளின்பின்னர் கஸ்ரன் கோடியோ தனது நாட்டிற்குப் பெருமை சேர்த்ததோடு பரிசுப்பணமாக 8,60,000 யூறோக்களையும் பெற்றுக்கொண்டார். இவ்வாண்டுடன் இம் மைதானத்தில் நடைபெற்ற 71வது றோலண்ட்கறோஸ் சுற்றுப்போட்டி இதுவாகும்.




ஜே.ஜே.

# உலகை வலம்வரும் ஒலிம்பிக் தீபம்



ஒலிம்பிக் தீப வரலாற்றில் முதல் முறையாக அனைத்துக் கண்டங்களிற்கும் ஒலிம்பிக் தீபம் செல்லவுள்ளது. ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கப் பிராந்தியங்களிற்கும் இம்முறை செல்லவுள்ளது என்பதைக் குறிப்பிடும் அம்சமாகும்.04.06.2004 அன்று அவுஸ்திரேலியாவின் மென்வோர்ன் நகரில் கத்திபிறிமென் ஒலிம்பிக் தீப உலகவலத்தை ஆரம்பித்து வைத்தார். யூலை 8ம் திகதி வரையிலான முப்பத்தைந்து நாட்களும் 78000கி.மீ தூரத்தினை இத் தீபம் சுற்றிவரும். இதன் 1500 கி.மீ தூரத்தினை 3600 ஆண்களும், பெண்களும் எடுத்துச் செல்வார்கள். இந்நிகழ்வினை 260 மில்லியன் மக்கள் பார்வையிட்டு மகிழ்வார்கள். ஒலிம்பிக் கொண்டாட்டத்தில் அனைத்துப் பிராந்திய மக்களும் மனிநிறைவுடன் பங்குகொள்ளவேண்டும். என்ற நோக்கிலேயே இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டதாக அதிகார வட்டாரங்கள் தெரிவாகின்றன.



ஐரோப்பிய யூனியனின் இதய பூமியான பிரசெல்ஸ், சர்வதேச ஒலிம்பிக் சபையின் நிர்வாகம் பொருட்காட்சி நிலையம் அமைந்துள்ள சுவிஸ் நாட்டின் லவ்சாய் நகரம், இருபத்தொன்பதாவது ஒலிம்பிக்போட்டி நடைபெறவுள்ள சீனாவின் வெய்ஜிங் நகரம் (2008) உட்பட ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற அனைத்து நகரங்களையும் கடந்துவரும் ஒலிம்பிக் தீபம் 09.07.2004 முதல் 13.08.2004 வரையான நாற்பத்து மூன்று நாட்களும் கிரேக்கத்தின் ஐம்பத்து நான்கு நிர்வாகப் பிரிவுகளிற்கும் 7700வீரர், விராங்கனைகளால் எடுத்துச் செல்லப்பட்டு இறுதியாக இருபத்தெட்டாவது ஒலிம்பிக் போட்டி நடைபெறும் எதென்ஸ் நகரிற்கு கொண்டுவரப்படும். அனைத்துப் பிராந்திய கலாச்சாரங்களினையும் முன்னெடுத்துச்செல்லும் நோக்கமும் இத்தீப உலாவிற்கு உண்டு.

ஒலிம்பிக் கொடியிலுள்ள ஐந்து வளையங்களையும் பிரதிபலிக்கும் இத்தீபம் உலக வலம் வருவதானது அனைத்து மக்களையும் தழுவிச் செல்வதை ஒத்ததாகும் என்பதுடன் உலகின் சகோதரத்துவம், அமைதி என்பவற்றின் வெளிப்பாடாகவும் அமைகின்றது.

# இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

## லோர்மன் லடிஸ் அன்ரன்
## (சின்னத்தம்பி)



மறக்க முடியுமா உன்னை?
நினைத்தால் தானே மறப்பதற்கு
எங்கள் நினைவாகி விட்டவனே!

மாண்டார் வருவாரோ மாநிலத்தில்
ஆயினும் ஏங்கி நிற்கின்றோம்
ஆண்டுகள் இரண்டு உருண்டோடி
மாண்டு நீயும் பாடையேறி
மீண்டும் உந்தன் வரம் வேண்டி
இறைவனடி பாதம் தொழுகின்றோம்...

பூக்களின் சிரிப்பில் உந்தன் முகம்
நிலவின் ஒளியில் உன் உருவம்
தென்றலின் வருடலில் உன் ஸ்பரிசம்
கனவின் வழியாய் உன் நினைவில்....

காலம் கரையும் ஓர் நாளில்
நாமும் கரைவோம் வாழ்நாளில்
இணையும் அந்நாள் வரும் வரைக்கும்
கழியும் எம் நாள் உன் நினைவில்....


*என்றும் உன் நினைவில்*
*மனைவி, பிள்ளை*

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்கான திருப்பலிப்பூசை 19.06.04 சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு Chapelle N.D.Réconciliatrice, 75011, Paris, M°: Belleville ல் நடைபெறும்.

உற்றார் உறவினர் நண்பர்கள் யாவரும் கலந்துகொண்டு அன்னாரின் ஆன்ம சாந்திக்காக வேண்டிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்: மனைவி 01 48 41 53 76**

**மலர்வு: 25.06.1972** **உதிர்வு: 18.06.2002**



# ஆராரோ...! ரோ ரோவோ !

( பேராசிரியர் இ.சிவசண்முகம் எழுதும் புதிய தொடர் )





# கேணல் கிட்டுவை பின்தொடர்ந்த ரோ !

## அங்கம் 12

திருகோணமலையில் நிறுவப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எப். தலைமையிலான வடகிழக்கு மாகாண நிர்வாகம் இந்திய இராணுவம் நிறுவிய இராணுவ ஆட்சியின் அரசியல் போர்வையாக அமைந்தது. அது முழுக்க முழுக்க இந்திய நலனையே பிரதிபலித்தது. இராணுவ அடக்குமுறையை மூடிமறைக்கும் திரையாகவும், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் உள்நோக்கங்களை நிறைவேற்றும் நிறுவனமாகவும் அது அமைந்தது.

ஜெனிவா கொன்வென்சன் (Geneva Convention) கூட்டுத் தண்டனை வழங்கலைத் தடை செய்கின்றது. கூட்டுத் தண்டனை வழங்கல் (Collective Punishment) ஒரு பாரிய போர் குற்றமாக அடையாளம் காணப்படுகின்றது. தனது இராணுவத்தினர் மீது ஒருவர் நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியாகத் தாக்கியவரின் இனத்தவர் மீதும் ஒருவர் நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியாகத் தாக்கியவரின் இனத்தவர் மீதும் அவர்களுடைய சொத்துக்கள் மீதும் நடத்தப்படும் படுகொலைகளும் சொத்தழிவுகளும் கூட்டுத் தண்டனை என்று வரையறை செய்யப்படுகின்றது. கூட்டுத் தண்டனை வழங்குதல் இரண்டாம் உலகப் போரின் பின்பு முனைப்புப் பெற்றுள்ளது. ஒரு பிரெஞ்சுக் கிராமத்தின் மீது விதிக்கப்பட்ட கூட்டுத் தண்டனையாக 99 பிரெஞ்சு வாலிபர்களை ஜேர்மன் படைகள் ஜூன் 09, 1944ல் தூக்கிலிட்டனர். இது பற்றிய மனதைப் பிசையும் விவரங்களை The Algeria Hotel: France, Memory and the Second World War By Adam Nossiter, Publishers Houghton Mifflin என்ற நூலில் காணலாம்.

இஸ்ரேலிய உளவுப் படையினரின் ஆலோசனைப்படி கூட்டுத் தண்டனை வழங்கும் உபாயத்தை சிங்களப்படையினர் மேற்கொண்டனர். கிழக்கில் நடந்த பல்வேறு வகை எண்ணிக்கையான பொதுமக்கள் படுகொலைகள் கூட்டுத் தண்டனை ரகத்தைச் சேர்ந்தவை. செம்மணிப் படுகொலைகளும் அவ்வாறானதே. இந்தியர்களும் அதையே தமது ஆக்கிரமிப்புக் காலத்தில் செய்தனர். மனித வரலாற்றில் கூட்டுத்தண்டனை வழங்கலை நாம் பலமுறை சந்திக்கலாம். சிவிலியன்கள் மீது தாக்குதல் நடத்துவதுதான் கூட்டுத்தண்டனையின் முக்கிய அடையாளம். ஒரு சில கூட்டுத் தண்டனை வன்முறைகள் அழியாப் புகழ் பெற்றுள்ளன. அவற்றுள் பிரிட்டிஸ் படைகள் இந்தியாவில் நடத்திய ஜாலியன்வாலா பூங்காப் படுகொலைகள் (13.04.1919), அமெரிக்க இராணுவம் வியட்நாமில் நடத்திய மைலாய்ப் படுகொலைகள் (16.03.1968), இந்திய இராணுவம் இலங்கையில் நடத்திய வல்வெட்டித்துறைப் படுகொலைகள் (02,03,04.08.1989) முதலிடம் வகிக்கின்றன.

இச்சம்பவக் காலத்தில் வடமராட்சியில் இராணுவப் பொறுப்பதிகாரியாகப் பதவிவகித்த பிரிகேடியர் சங்கர் பிரசாத் என்பவர், அப்பகுதி பிரஜைகள் குழுவினரைச் சந்தித்தபோது 'இந்திய இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதல் மேற்கொண்டால் வடமராட்சியின் முழுக்கிராமங்களையும் எரிப்பேன், நூற்றுக்கணக்கில் சுட்டுத்தள்ளுவேன், இராமர் இராணுவயுத்தத்தில் லங்கா எரிந்ததுபோல இல-ங்கை மீண்டும் எரியும், எம்மை எவரும் ஏதும் செய்ய முடியாது, நாம் உலகின் நான்காவது மிகப்பெரிய இராணுவம்' என்று சூளுரைத்தார்.

1989 ஆகஸ்ட் 2, 3, 4 ஆகிய மூன்று நாட்களில் இந்திய இராணுவம் வல்வெட்டித்துறைப் படுகொலைகளை நடத்தியது. புலிகள் நடத்திய தாக்குதல்களுக்குப் பதிலடியாக இது நடத்தப்பட்டது. இந்த மூன்று நாட்களில் 63 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 100ற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். 123 வீடுகளும் 45 கடைகளும் முற்றாக எரிக்கப்பட்டன. 176 மீன்பிடி வள்ளங்கள் எரித்தழிக்கப்பட்டன. அகப்பட்ட பெண்கள் வயது வேறுபாடின்றி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர். வெளியுலகிற்குச் செய்தி எட்டாமல் இருப்பதற்காக மூன்று நாள் ஊரடங்கு உத்தரவு போடப்பட்டது. இறுதிக்கடன் செய்யப்படாமல் தெருவோரம் சடலங்கள் கிடந்தன. வெளியர் வருவதைத் தடுப்பதற்காகப் படைகள் தடைகளைப் போட்டிருந்தனர்.

பத்திரிகையாளார் ஒற்றுமை, சுதந்திரம் போன்ற விடயங்களை வாய் ஓயாமல் பேசும் கொழும்புப் பத்திரிகைகள் காலம் கடந்த பின்பும் வழக்கம் போல் மௌனம் சாதித்தன. இன, மொழி அடிப்படையில் இலங்கையின் ஊடகத்துறை ஒருபோதும் ஒன்றிணையாத அளவுக்கு பிளவுபட்டிருப்பது மீண்டுமொருமுறை நிரூபிக்கப்பட்டது. ஒரு வித்தியாசமான பத்திரிகையாளர் றீற்றா செபஸ்தியன் (RITA SEBASTIAN) வல்வைப் படுகொலைகளை வெளியுலகிற்குத் தெரிவித்தார். றீற்றா செபஸ்தியன் (1935-1996) ஒரு தமிழ்த் தந்தைக்கும் சிங்களத் தாயிற்கும் பதுளையிற் பிறந்தவர். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை, இன்ரர் பிறஸ் சேவிசஸ், ஜப்பானின் கியோடா செய்தி நிறுவனம் ஆகியவற்றின் பிரதிநிதியாக இப்பெண் கடமையாற்றினார். இவர்தான் வல்வைப் படுகொலையை இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை மூலம் வெளிப்படுத்தியவர். இற்றைவரைக் கொழும்புப் பத்திரிகைகளோ, தமிழ் நாட்டின் பிராமணியப் பத்திரிகைகளோ இது பற்றி பேசுவதில்லை.

இந்திய- இலங்கை ஒப்பந்த காலத்தில் ஒரு காலை இழந்த நிலையில் கேணல் கிட்டு சென்னையில் தங்கியிருந்தார். அப்போது அவர் இந்திய இராணுவம் செய்த அட்டூழியங்களை `பவான்ஸ் பேப்பர்ஸ்` (PAWAN PAPERS) என்ற ஆவணத் தொகுதியை வெளியிட்டார். வல்வெட்டித் துறைப் படுகொலைகளை விவரிக்கும் வல்வை ந. அனந்தராஜ் எழுதிய நூலையும் பிரசுரிக்க ஒழுங்கு செய்தார். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைச் சட்டரீதியாக ஆய்வு செய்து அதனுடைய தாக்கங்களைக் கிட்டு வெளிப்படுத்தினார். இதுவரை இதுபோன்றதொரு விமர்சனம் வெளியிடப்படவில்லை. முன்னாள் இலங்கை அமைச்சர் பதியுதீன் முகம்மது தலைமையிலான முஸ்லிம் குழு சென்னையில் வைத்து கிட்டுவைச் சந்தித்தது. இருபகுதியும் நடத்திய பேச்சுவார்த்தைகள் காரணமாக தமிழ் - முஸ்லிம் அதிகாரப் பகிர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து 1993ம் ஆண்டில் கேணல் கிட்டுவும் தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளும் இந்தியக் கடற்படையால் சுற்றிவளைக்கப்பட்டபோது கேணல் கிட்டு கப்பலைத் தகர்த்ததோடு தானும் வீரச்சாவடைந்தார். பவான்ஸ் பேப்பர்ஸ் பிரசுரித்ததற்காக இந்தியப் படைகள் வழங்கிய தண்டனை என இதுபற்றிப் பேசப்படுகின்றது. எம்.வீ.அகத் என்ற புலிகளின் வணிகக் கப்பலில் கிட்டுவும் அவருடைய சகாக்களும் பயணித்தனர். அவரைப் படுகொலை செய்யும் நோக்கோடு றோ உளவுத் துறையினரும் கடற்படையினரும் கப்பலைப் பின்தொடர்ந்து தமது சதியை நிறைவேற்றினர். சரணடைவதிலும் சாமேல் என்ற கோட்பாட்டிற்கு அமைவாக கிட்டு வீரச்சாவடைந்தார். அவருடைய சாவிற்கு றோ உளவுப் படை பொறுப்பென்பது ஆய்வாளர் முடிவு.

வடக்கு கிழக்கு இணைப்பை 1987ம் ஆண்டின் இந்திய இலங்கை ஒப்பந்தம் வலியுறுத்துகின்றது. தமிழர்களுடைய தாயகம் என்று ஒன்றிணைந்த மாகாணங்களை இவ்வொப்பந்தம் ஏற்றுக்கொள்கின்றது. இந்த இணைப்பு தற்காலிகமானது, மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடைபெற்று இணைப்பு நிரந்தரமானது அல்லது தற்காலிகமானது என்று தீர்மானிக்கப்படும். கருத்துக்கணிப்பு இணைப்பின் தலைவிதியை தீர்மானிக்கும் என்று நினைப்பது தவறு. இணைப்பை இல்லாமற் செய்வதற்கு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பேனை மை காய்வதற்கு முன்பே றோ உளவமைப்பு நடவடிக்கை எடுக்கத் தொடங்கிவிட்டது. காணி அமைச்சர் காமினி திசநாயக்காவுடன் இணைந்து றோ அமைப்பினர் தமிழர்களின் வாயில் மண்போடும் நடவடிக்கையை எடுத்தனர்.

1988இல் மிகவும் அவசரமாக, ஒரு போர் நடவடிக்கை போல் மணலாறுப் பிரதேசம் துரித அபிவிருத்திக்காக அரசினால் தெரிவு செய்யப்பட்டது. வேறு அபிவிருத்தித் திட்டங்கள் அப்படியே கிடக்கும் நிலைக்குத் தள்ளப்பட்ட பின், முன்பு திட்டமிடப்படாத மணலாறுத் திட்டம் தெரிவு செய்யப்படுவதற்கு இணைப்பை இல்லாமற் செய்வதே அடிப்படைக் காரணம். அப்பகுதியில் நிலைகொண்டிருந்த இந்திய இராணுவத்திற்கும் றோ உளவமைப்பிற்கும் இது நன்றாகத் தெரியும். ஆனால் மணலாறுத் திட்டத்தை அவர்கள் ஊக்குவித்தனர். ஒரு கையால் கொடுப்பதை அடுத்த கையால் பிடுங்குவதற்கு இதை ஒப்பிடலாம்.

காணி அமைச்சர் காமினி திசநாயக்கா ஏப்பிரல் 14, 1988இல் விடுத்த அரச வர்த்தமானி அறிவிப்புப்படி முல்லை மாவட்டத்தின் மணலாறு வெலி ஓயா என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இது இலங்கையின் 26ம் மாவட்டமாகவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இந்தியாவின் நிரந்தர நண்பன் என்ற அந்தஸ்துடன் அரசியல் செய்த இந்த அமைச்சர், இந்திய ஆதரவோடு தமிழர் மண்ணை அபகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டார். உடனடியாகவே துரிதகதியில் குடியேற்றம் தொடங்கியது.

> *1988இல் மிகவும் அவசரமாக, ஒரு போர் நடவடிக்கை போல் மணலாறுப் பிரதேசம் துரித அபிவிருத்திக்காக அரசினால் தெரிவு செய்யப்பட்டது. வேறு அபிவிருத்தித் திட்டங்கள் அப்படியே கிடக்கும் நிலைக்குத் தள்ளப்பட்ட பின், முன்பு திட்டமிடப்படாத மணலாறுத் திட்டம் தெரிவு செய்யப்படுவதற்கு இணைப்பை இல்லாமற் செய்வதே அடிப்படைக் காரணம். ஒரு கையால் கொடுப்பதை அடுத்த கையால் பிடுங்குவதற்கு இதை ஒப்பிடலாம்.*

இந்திய இராணுவம் புலிகளை மணலாறில் பிரவேசிக்காமல் தடுத்து நிற்க சிறீலங்கா இராணுவம் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்த மணலாறுத் தமிழர்களை விரட்டிக் கலைத்தது. இரு நாட்டு இராணுவங்களும் ஒன்றிணைந்து தமிழர்களுக்கு எதிரான மண்பறிப்பில் ஈடுபட்டனர். ஒப்பந்தத்தை செல்லாக்காசாகவும் வெறும் கடதாசியாகவும் செய்வதே இதன் நோக்கம். இந்திய அரசின் கபடத்தை வெளிப்படுத்துவதற்கு மணலாறு ஒன்றே போதும்.

(இன்னும் வரும்)

## தந்தையின் அறிவுரை !




வியர்த்து விறுவிறுக்க வீட்டுக்குள் ஓடிவந்த மகன் தந்தையிடம் கூறுகிறான், 'அப்பா நான் இன்று 2 ரூபா மிச்சம் பிடித்துவிட்டேன்.'

தகப்பன் மகனைப் பார்த்து, 'எப்படி 2 ரூபா மிச்சம் பிடித்தாய்? கேட்கவே சந்தோஷமாக இருக்கிறது.'

அதற்கு மகன் 'அப்பா நான் இன்று பஸ்ஸில் ஏறாமல் அதற்குப் பின்னால் ஓடிவந்ததால் தான் 2 ரூபா மிச்சம் பிடித்தேன்' என்றான் பெருமையுடன்.

உடனே தகப்பன் மகனைப் பார்த்து, 'ஏனடா மகனே இப்படி முட்டாள்தனமாகச் செய்தாய்? இவ்வளவு வியர்த்து விறுவிறுக்க ஓடி 2 ரூபா மிச்சம் பிடிக்கவேண்டுமா? ஒரு Taxi க்குப் பின்னால் ஓடி வந்திருந்தால் 20 ரூபா மிச்சம் பிடித்திருக்கலாமே?!' என்றார்.



# இணைய வலம்



# புகழ்பெற்ற சிரிப்பு

### மூடநம்பிக்கைக்கு நேரம்

உயரமான அந்தக் கட்டடத்திற்குள் மூன்று திருடர்கள் நுழைந்தனர். தாங்கள் கொண்டு வந்திருந்த பைக்குள் விலை உயர்ந்த பொருள்களை எல்லாம் எடுத்துப்போட்டுக் கொண்டிருந்தனர். 'ஜன்னல் வழியாகக் குதிப்போம் என்றான் இன்னொருவன்'

'நாம் பதின்மூன்றாவது மாடியில் இருக்கிறோம் இங்கிருந்தா குதிப்பது?' என்று கேட்டான் அவன்.

'மூட நம்பிக்கைக்கு இதுவா நேரம்' என்று கத்தினான் மூன்றாமவன்.

### சொல்வதற்கு என்ன பயம்?

அமெரிக்கன் ஒருவனும் ரஷ்சியன் ஒருவனும் பேசிக் கொண்டிருந்தனர்.

'அமெரிக்கர்களாகிய எங்களுக்கு எந்தப் பயமும் இல்லை. இப்பொழுதே நான் வெள்ளை மாளிகைக்குச் செல்ல முடியும். அமெரிக்க ஜனாதிபதியைப் பார்த்து நீ ஒரு முட்டாள் என்று நேருக்கு நேர் சொல்ல முடியும் அதற்காக என் தலையை யாரும் வாங்கி விட மாட்டார்கள். ரஷ்சியர்களாகிய உங்களால் அப்படிச் செய்ய முடியுமா?' என்று கேட்டான் அமெரிக்கன்.

'இப்பொழுதே நானும் கிரெம்ளின் மாளிகைக்குச் செல்ல முடியும். அமெரிக்க ஜனாதிபதி ஒரு முட்டாள் என்று சொல்ல முடியும்' என்று பதில் தந்தான் ரஷ்சியன்.

### குடிதான் காரணம்

நீதிபதி அவனைப் பார்த்து 'இப்பொழுது நீ நல்ல பாடம் கற்றுக்கொண்டிருப்பாய். குடிப்பது கெட்ட பழக்கம் என்று உனக்குப் புரிந்து இருக்கும். நீ மட்டும் குடிக்காமல் இருந்திருந்தால் உன் மாமியாரின் மீது கோபம் கொண்டிருக்க மாட்டாய். குடிக்காமல் இருந்திருந்தால் உன் மாமியாரைச் சுட்டிருக்க மாட்டாய்' என்று அடுக்கிக் கொண்டே சென்றார்.

குறுக்கிட்ட அவன், 'நீதிபதி அவர்களே! நான் நல்ல பாடம் கற்றுக்கொண்டேன். இனி நான் குடிக்கவே மாட்டேன். குடித்ததனால் என் குறி தவறி விட்டது.' என்றான்.

### கோடீஸ்வரன் செயல்

நான் கோடீஸ்வரனானால் என்ற தலைப்பில் மாணவர்களைக் கட்டுரை எழுதச் சொன்னார் ஆசிரியர். ஒரே ஒரு மாணவனைத் தவிர எல்லோரும் கட்டுரை எழுதித் தந்தனர்.

ஒன்றும் எழுதாமல் சும்மா இருந்த அந்த மாணவனைப் பார்த்து, நீ ஏன் எதுவும் எழுதவில்லை, என்று கேட்டார் ஆசிரியர்.

நான் கோடீஸ்வரனானால் எதுவும் செய்யமாட்டேன் சார் என்று பதில் தந்தான் அவன்.

### கெட்டிக்கார வட்டிக்காரர்

பட்டப் பகலில் வட்டிக் கடைக்குள் நுழைந்து திருடன் ஒருவன் கடைக்காரரை நோக்கித் தன் துப்பாக்கியை நீட்டி, கையைத் தூக்கு, இல்லையேல் சுட்டுவிடுவேன், என்றான். உடனே கடைக்காரர், துப்பாக்கி நன்றாக இருக்கிறது. அதற்கு அதிகபட்சம் முந்நூறு ரூபாய் தர முடியும், என்றார்.

### குழப்பம் யாருக்கு?

நாயை இழுத்துக்கொண்டு மகன் வீட்டிற்குள் நுழைந்தான். தந்தை அவனைப் பார்த்து, 'இந்தக் கழுதையோடு எங்கே சுத்திகிட்டு வரே?' என்று கேட்டார். 'அப்பா! நல்லாப் பாருங்க. இது கழுதை அல்ல நாய்' என்றான் அவன்.

'நான் உன்னோடு எதுவும் பேசவில்லை. இந்த நாயிடம்தான் பேசினேன்' என்றார் அவர்.

### யார் இருப்பது உறுதி?

வளர்ந்து பெரியவன் ஆகியும் சிறிதும் பொறுப்பில்லாமல் இருக்கும் தன் மகனை அழைத்தார் தந்தை. 'மகனே! நீ பெரியவனாகி விட்டாய். இனி வாழ்க்கையை விளையாட்டாக எடுத்துக்கொள்ளக்கூடாது. உன் எதிர்காலத்தைப் பற்றி நீதான் சிந்தனை செய்ய வேண்டும். திடீரென்று நான் இறந்து போவதாக வைத்துக்கொள். உன் நிலை என்ன? நீ எங்கே இருப்பாய்?' என்று கம்மிய குரலில் கேட்டார். 'அப்பா! இது என்ன கேள்வி? நான் இங்கேதான் இருப்பேன். இறந்த பிறகு நீங்கள்தான் எங்கே இருப்பீர்கள் என்று தெரியாது' என்றான் அந்தப் புத்திசாலி மகன்.

### பெருமை பேசும் செல்வர்கள்

மூன்று பேர் தாங்கள் எவ்வளவு பெரிய செல்வர்கள் என்று பெருமையடித்துக்கொண்டே சென்றனர். வழியில் ஒரு வைரம் கிடந்தது. முதலாமவர் அதைக் காட்டி, 'இது என்னுடையது அல்ல' என்றார்.

இரண்டாமவரும் அப்படியே சொன்னார்.

மூன்றாமவர் அந்த வைரத்தைக் கையில் எடுத்து 'இது என்னுடையதாகத்தான் இருக்கும். இந்த வழியாக வரும் பொழுது என் சட்டைப் பொத்தானைத் தொலைத்து விட்டேன்' என்றார்.

### ஒத்துப்போகாத மனைவி

மாலை நேரம், வேலை முடிந்து வீடு திரும்பினார் தந்தை. வாசற்படியில் தன் ஆறு வயது மகன் கன்னத்தில் கை வைத்துக்கொண்டு சோகமாக இருப்பதைப் பார்த்தார்.

'மகனே! என்ன நடந்தது?' என்று கேட்டார்.

'உங்க மனைவியோட இனிமேலும் என்னால் ஒத்துப் போக முடியாது' என்று கோபத்துடன் சொன்னான் மகன்.

## அரசியல்: ஒரு விளக்கம்

ஒரே ஒரு ஊரில் ஒரு சின்னப்பையன் தன்னுடைய அப்பாவிடம் சென்று `அரசியல் என்றால் என்ன அப்பா?' என்று கேட்டான்.

அப்பா சொன்னார்: `பையா இப்படி உனக்கு விளக்க முயற்சிக்கிறேன். நான் இந்தக் குடும்பத்துக்குச் சம்பாதித்து, சாப்பாடு கொண்டுவருகிறவன், என்னை முதலாளி என்று கூப்பிடலாம். உன்னுடைய அம்மா, நான் கொண்டுவரும் பணத்தை நிர்வகிக்கிறாள்.' ஆகவே அவளை அரசாங்கம் என்று அழைக்கலாம். நாங்கள் உங்களைக் கவனித்துக்கொள்ள இருக்கிறோம். நீயும் உன் தம்பியும் நம் பொதுமக்கள். நம் வீட்டு வேலைக்காரியை உழைக்கும் வர்க்கம் என்று அழைக்கலாம். உன் தம்பியை எதிர்காலம் என்று கூப்பிடலாம். இப்படி நான் சொன்னதைப் பற்றி.. புரிகிறதா என்று யோசித்துப்பார்' என்றார் அப்பா

பையன் அப்பா சொன்னதை பற்றி யோசித்துக்கொண்டே தூங்கப்போனான். இரவில் தம்பி அழும் குரல் கேட்டு எழுந்தான் பையன். தம்பி டவுசரில் மலங்கழித்து, புரண்டு அழுக்காகக் கிடந்தான். அப்பா அம்மாவின் அறைக்குச் சென்று எழுப்ப முயற்சி செய்தான். அம்மா ஆழ்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். எழுப்ப வேண்டாம் என்று வேலைக்காரியின் அறையைத் தட்டினான். கதவு மூடியிருந்ததால், சாவி ஓட்டை வழியாகப் பார்த்தான். அப்பா வேலைக்காரியுடன் எசகு பிசகாகப் படுத்திருந்தார். எழுந்து திரும்பி தன் படுக்கைக்குச் சென்று தூங்கினான். அடுத்த நாள் காலையில் அப்பாவைப் பார்த்து, `அப்பா எனக்கு அரசியல் புரிந்து விட்டது' என்றான்.

அப்பா,`அடடே... நல்ல பையன். உன்னுடைய வார்த்தைகளிலேயே உனக்கு அரசியல் பற்றி என்ன புரிந்தது என்று சொல் பார்க்கலாம்' என்றார்.

பையன் சொன்னான். `முதலாளி உழைக்கும் வர்க்கத்தை பலாத்காரம் செய்து அனுபவித்துக்கொண்டிருக்கும்போது, அரசாங்கம் நன்றாகத் தூங்கிக்கொண்டிருக்கிறது. மக்கள் உதாசீனம் செய்யப்படுகிறார்கள். எதிர்காலம் ஒரே மலமாக இருக்கிறது.... இதுதான் அரசியல்'

## கடி ஜோக்ஸ்

ஒருவர்: இரண்டு வருசத்துக்கு முன்னாடி என்னோட வாட்ச் காவேரியிலே விழுந்துடுச்சு. ஆனா இன்னும் ஓடிக் கிட்டிருக்கு!

மற்றவர்: அதே வாட்சா?

ஒருவர்: இல்லே, காவேரி.

☺ ☺ ☺

தந்தை: எக்ஸாம் ஹாலிலே தூங்கிட்டு வரேன்னு சொல்றியே, வெக்கமாயில்லை.

மகன்: நீங்கதானேப்பா கேள்விகளுக்கு விடை தெரியலைன்னு முழிச்சுட்டு இருக்காதேன்னு சொன்னீங்க.

☺ ☺ ☺

நம்ம தமிழ் வாத்தியாரை யாரோ அடிச்சுட்டாங்களாமே?

இங்கே தமிழாசிரியர் யாருன்னு இவரைக் கேட்டதுக்கு அடியேன் அடியேன்னு சொல்லியிருக்காரு.

☺ ☺ ☺

நீங்கள் எப்பொழுதுமே இப்படித்தான் திக்குவீர்களா?

எப்பொழுதும் இல்லை. டாக்டர் பே...பே...சு...ம் பொழுது ம...மட்..டு..ந்தான்.

☺ ☺ ☺

காதலி: இனிமையாக ஏதாவது சொல்லுங்களேன்!

காதலன்: லட்டு, ஜிலேபி.

☺ ☺ ☺

அந்த மேசை ரொம்ப வெட்கப்படுது ஏன்?

அதற்கு டிராயர் இல்லை.

☺ ☺ ☺

# Jasijananth ஆதரவில்

## Bern மாநகரில் மாபெரும் மலிவு விற்பனை

**19.06.2004 சனி 09.00 முதல் 20.00 மணி வரை -**
**20.08.2004 ஞாயிறு 10.00 முதல் 20.00 மணி வரை**

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன ரக ஆடைகள், பரிசுப்பொருட்கள்



சிறுவர் சிறுமியருக்கான விளையாட்டுப் பொருட்கள், ஐரோப்பிய நவநாகரிக கோடைகால உடைகள்

மங்கையர் மனம் கவர் அழகுசாதனப் பொருட்கள், சமையலறை உபகரணங்கள், அலங்காரப்பொருட்கள் – இவை அனைத்தும் ஒரே இடத்தில் தரமானதாகவும் மலிவாகவும் வாங்கி மகிழ்ந்திட வாருங்கள்



**MAPPAMONDO RESTAURENT - LANGASSSTRASSE 44-3012 BERN**

அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் - **Tel: 079 -600 89 66 - 078 - 664 89 06**

18

# NATHU CASH & CARRY GMBH

## மாபெரும் மலிவு விற்பனை

### காலவரையின்றி இதுவே எமது நிரந்தர விலையாகும்

| உதாரணத்துக்காக மாற்றம் செய்யப்பட்ட விலை | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| இலங்கை மரக்கறி வகைகள் 1Kg | 6.50Fr | **4.90Fr** |
| இந்திய மரக்கறி வகைகள் 1Kg | 5.50Fr | **3.80Fr** |
| தாய்லாந்து மரக்கறி வகைகள் 1Kg | 8.50Fr | **7.35Fr** |
| கீரை வகைகள் அனைத்தும் | 9.00Fr | **6.90Fr** |
| மீன் வகைகள் | 7.50Fr | **6.90Fr** |
| நண்டு, கணவாய் | 7.50Fr | **6.90Fr** |
| (மீன் வெட்டிச் சுத்தம் செய்து தரப்படும் - இலவசம்) | | |
| நல்லெண்ணெய 7.50Ml | 11.90Fr | **9.35Fr** |
| 375Ml | 6.75Fr | **4.90Fr** |
| அவித்து அரித்த சுத்தமான கோதுமை மா | 14.00Fr | **12.90Fr** |
| நெஸ்டமோல்ட் | 6.50Fr | **5.50Fr** |
| வீவா | 7.50Fr | **6.50Fr** |
| கோர்லிக்ஸ் | 6.90Fr | **5.90Fr** |
| மைலோ | 6.50Fr | **5.90Fr** |
| நெல்லி ரசம் | 6.50Fr | **5.40Fr** |
| பழரச வகைகள் | 6.50Fr | **5.40Fr** |
| லெமன் பஃப் | 2.50Fr | **1.25Fr** |
| டீ டைம் | 3.50Fr | **2.50Fr** |
| கிப்ட் செலக்ஸ்ஸன் | 6.50Fr | **4.80Fr** |
| சீனிச் சம்பல் | 6.50Fr | **4.20Fr** |
| ஊறுகாய் வகைகள் | 5.50Fr | **4.20Fr** |
| பிரியாணி மிக்ஸ் | 5.50Fr | **4.20Fr** |
| ஜாம் வகைகள் | 3.90Fr | **3.10Fr** |
| தேங்காய் பால் பவுடர் 1 Kg | 13.50Fr | **9.60Fr** |

| உதாரணத்துக்காக மாற்றம் செய்யப்பட்ட விலை | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| தேங்காய்ப் பால் பவுடர் 350g | 5.95Fr | **4.50Fr** |
| தேங்காய்ப் பால் பவுடர் 150g | 3.15Fr | **2.30Fr** |
| மொட்டைக் கருப்பன் அரிசி5Kg | 12.50Fr | **9.30Fr** |
| மொட்டைக் கருப்பன் அரிசி 1Kg | 2.50Fr | **1.90Fr** |
| புழுங்கல் அரிசி 5 Kg | 12.50Fr | **9.30Fr** |
| புழுங்கல் அரிசி 1Kg | 2.50Fr | **1.90Fr** |
| பசுமதி அரிசி 5Kg | 10.90Fr | **7.45Fr** |
| முத்துச் சம்பா 5Kg | 12.50Fr | **9.30Fr** |
| முத்துச் சம்பா 1Kg | 2.50Fr | **1.90Fr** |
| மைசூர்ப் பருப்பு 2Kg | 5.50Fr | **3.40Fr** |
| உடன் ஆட்டிறைச்சிப் பங்கு 1 Kg | | **8.00Fr** |
| உடன் ஆட்டிறைச்சித் துடை 1 Kg | 14.00Fr | **11.00Fr** |
| அதி குளிரூட்டப்பட்ட கோழிக்கால் 2.5Kg | 12.50Fr | **9.90Fr** |

எமது அனைத்து உணவுப் பொருட்களும் அதி குறைந்த விலையில் எமது மக்களுக்காக விற்கப்படுகின்றன. மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விஷேட கழிவு உண்டு

வாருங்கள்! நுகருங்கள்!! நது புகழ்பரப்ப நல்லாதரவைத் தாருங்கள்!!!

**Nathu Enterprises(PVT) LTD**
**Importers & Exporters of Textiles, Grocery, Sea Foods, Fruits, Vegetables & Home Needs**
**Attinghausen Str 20, Breiterain, 3014 Bern**
**Tel: 0041 31 332 1010 - 0041 76 539 58 01**

21

# கௌரவம்

யாழ்ப்பாண மக்கள் போக்குவரத்துக்குப் பயன்படுத்தும் வாகனம் பெரும்பாலும் சைக்கிள் தான் என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. சற்றுத் தூர இடங்களுக்குச் செல்வதென்றால் அரச பேருந்து, சற்று கௌரவமாகச் செல்லவேண்டும் என்றால் தனியார் பேருந்தை (மினிபஸ்) பயன்படுத்திக் கொள்வார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால், பல வீடுகளில் போக்குவரத்துக்குச் சைக்கிள் கூட இருக்காது. அப்படி இருந்தாலும் ஒரு சைக்கிள்தான் வீட்டில் உள்ள அனைவரினதும் தேவைக்கும் பயன்படும் ஒரு பொதுச் சொத்தாக இருக்கும். மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கையோ மிகச் சொற்பம். ஒவ்வொரு கிராமத்திலும் மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்களை கைவிரல்களுக்குள் அடக்கிவிடலாம். இது இன்றைக்கு பத்து, பதினைந்து வருடங்களுக்கு முன்பிருந்த யாழ்ப்பாண நிலைமை.

இன்று எல்லாமே மாறிவிட்டன. வெளிநாட்டுப் பணம் எல்லாவற்றையுமே மாற்றிவிட்டுள்ளது..!

இப்போது தேவையோ, தேவையில்லையோ வீட்டுக்கு இரண்டு மோட்டார் சைக்கிள் நிற்கின்றன. அப்படி இருக்காவிட்டால் கௌரவக் குறைச்சல் என்கின்ற அளவிற்கு அங்கு நிலைமை சென்றிருக்கிறது. நடைதூரத்தில் உள்ள இடத்திற்கு செல்வதென்றாலும் இளைஞர்கள் இப்போது மோட்டார் சைக்கிளைத்தான் 'ஸ்ராட்' பண்ணுகிறார்கள். பேருந்தில் பயணம் செய்வதும் குறைந்துவிட்டது. எதற்கும் உடனே கைதட்டி 'ஆட்டோ' தான். யாழ்ப்பாணத்தில் பேருந்தில் பயணம் செய்பவர்கள் வெளிநாட்டில் இருந்து பணம் அனுப்புவதற்கு யாருமே இல்லாதவர்களாகத்தான் இருக்குமோ என்ற எண்ணம் கூட எனக்கு ஏற்பட்டது.

**இப்போது அங்குள்ள இளைஞர்கள் சிலர் மயிலும், குயிலும் இல்லாமல் வெளியிலை போகவே மாட்டார்கள் என்றான் நண்பன். எனக்கு ஆச்சரியம் அது என்ன மயில் - குயில் என்று..!**

இளைஞர்களின் கனவு கல்வியில் இருப்பதை விட 'பஜாசிலையும் (Bajaj), ரீ.வி.எஸ்.சிலையும் (TVS) தான் இருக்கிறது. இந்த இளைஞர்களின் கனவுகளை வளர்த்து விடுவதில் ஆங்காங்கே



ஒட்டப்பட்டிருக்கும் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. 'யாழ்ப்பாணம் வரவேற்கின்றது' என்ற செம்மணி வெளியில் உள்ள வளைவு கண்களுக்குத் தெரிகின்றதோ இல்லையோ பிரமாண்டமான T.V.S விளம்பரம் யாழ்ப்பாண நுழைவாயிலில் நுழையும்போதே எல்லோரையும் வரவேற்கின்றது.

தங்களது இந்தக் கனவு இயந்திரத்தை வாங்கிக்கொடுக்கா விட்டால் புலிகளோட போய்ச் சேர்ந்துவிடுவோம் என்று தாய், தகப்பனை பயமுறுத்தியும் சில பிள்ளைகள் வாங்கி ஓடித் திரிகினம் என அறியமுடிந்தபோது வேதனையாகத்தான் இருந்தது. அந்தத் தாய், தகப்பனுக்கு 18 வயதிற்கு உள்பட்ட பிள்ளையளை விடுதலைப் புலிகள் இயக்கத்திலை சேர்க்க மாட்டினம் எண்டு எடுத்துச் சொன்னாலும் புரியுதில்லை. இயக்கத்துக்குப் போகாமல் இருந்தால் சரியென்று, வெளிநாடுகளிலை இருக்கும் பிள்ளையளிட்டைச் சொல்லி மோட்டார்



சைக்கிளை வாங்கிக் கொடுத்துவிட்டு அவர்கள் நிம்மதியடைகின்றார்கள். இப்போது யாழ்ப்பாணத்திலை நடக்கிற பெரும்பாலான விபத்துக்களும், அதாலை உயிரை விடுகிறவையும் இந்த மோட்டார் சைக்கிள் சாரதிகள்தான் என்பது இன்னொரு விடயம்.

* * *

அச்சகம் ஒன்றை வைத்து இயக்கிவரும் நண்பன் ஒருவனை சந்தித்தபோது வேதனைப்பட்டுக் கொண்டான். 'வேலையிருக்கு ஆனால் வேலைக்கு இளைஞர்களைப் பிடிக்க முடியவில்லை' என்று. 'அப்படித் தேடிப் பிடித்தாலும் வேலையில் அவர்கள் விடும் குறையைச் சுட்டிக்காட்ட முடியாது. நேரம் தாமதமாக வந்தாலோ, அடிக்கடி விடுமுறை எடுத்தாலோ ஏன் என்று கேட்க முடியாது. அவ்வாறு சுட்டிக்காட்டினாலோ, கேட்டாலோ அடுத்தநாள் பெடியன் வேலைக்கு வரமாட்டான்' என்றான். வெளிநாடுகளில் உள்ளவர்கள் அனுப்பும் பணம் இவ்வாறான இளைஞர்களைச் சோம்பேறிகளாக மட்டுமல்ல, எதிர்காலம் குறித்த அக்கறையில்லாதவர்களாகவும் மாற்றியிருக்கின்றது.

இப்போது அங்குள்ள இளைஞர்கள் சிலர் மயிலும், குயிலும் இல்லாமல் வெளியிலை போகவே மாட்டார்கள் என்றான் நண்பன். எனக்கு ஆச்சரியம் அது என்ன மயில் - குயில் என்று..!

அவனே விளக்கமும் சொன்னான்... 1000 ரூபா பணத் தாளிலை மயிலின்ரை படம் போட்டிருக்கு, 500 ரூபா தாளிலை குயிலின்ரை படம் போட்டிருக்குது. பெடியள் வெளியிலை போறதென்றால் சேட்டின்ரை மேல் பொக்கற்றிலை தான் மயிலையும், குயிலையும் வைப்பாங்கள். அந்த மெல்லிய சேட்டின் பொக்கற்றுக்கு உள்ளாலே அது உள்ளுக்குள்ளை இருக்கிறது வெளியிலை தெரியவேணும். அதுதான் இப்ப இங்கயுள்ள பஷன். அப்படித் தெரியாவிட்டால் கொளரவக் குறைச்சல் என்றும் சொன்னான்.

புகலிடத்தில் கௌரவத்தையும் இழந்து எவ்வாறு அந்தப் பணத்தை உழைக்கின்றார்கள் என்பதை அவர்களுக்கு எப்படி புரியவைப்பது. அப்படிப் புரிய வைத்தாலும், நாய் வித்த காசு என்ன அவர்கள் முன் குரைக்கவா போகின்றது...?

**- செந்தூரன்**

## கவிதைக் களம்

# கடிதம்

**1.**

அன்புள்ள தாயகமே...
ஆசைமகன் எழுதும் மடல்

நானிங்கு நலமம்மா
நீயங்கு நலம்தானா ?
எழுத மனம் நினைக்கிறதே
கண்ணீர் அதை நனைக்கிறதே !

எண்ணத்தின் தோற்றமெலாம்
கன்னத்தில் தெரிகிறதே
ஏக்கத்தின் முழு உருவம்
என் உதட்டில் தவழ்கிறதே

சிந்தனையும் சிரிக்கிறதே
சித்திரையும் அழைக்கிறதே
எத்தனை நாள் ஆகியதோ
உன் மடியில் நானுறங்கி

ஏர் பிடித்த கைகளிலே
போர் கொடுத்த ஆயுதமோ
நேர் நிமிர்ந்த மார்பினிலே
யார் பதித்த குண்டுகளோ

நான் நடந்த தெருவினிலும்
வான் அளந்த வடக்கினிலும்
ஏன் இந்த சோதனையோ
என் மனசில் வேதனையே



**2.**

அன்புள்ள தாயகமே...
ஆசைமகன் எழுதும் மடல்

நானிங்கு நலமம்மா
நீயங்கு நலம்தானா
கேட்க நா துடிக்கிறது
சோகம் அதை தடுக்கிறதே !

மான் குட்டி விளையாடும்
அந்திப் பொழுதும் நலம்தானா
என் வீட்டுத் தோட்டத்தில்
பூத்த கொடி நலம்தானா

நில்லாமல் ஓடி வரும்
நிலவொளியும் காண்பீரோ
சொல்லாமல் பாடல் தரும்
குயிலோசை கேட்பீரோ

ஆராரோ கீதம் படிக்க
ஏணையும் அசைகின்றதா
ஊரெல்லாம் ஓலம் ஒலிக்க
உறவுகளும் அழுகின்றதோ

உடல் மடியும் முன்னாலுன்
திருவடியை அடைவேனோ
உயிர் பிரிந்த பின்னாலும்
ஆறடி நிலம் உண்டோ

- சஞ்சீவ்காந்த் (யேர்மனி)

- மன நோய் -

# வெளிவந்த தகவலும் வெளிவராத உண்மையும்


உலக சுகாதார அமைப்பு கருத்துக் கணிப்பொன்று நடாத்தி கடந்த வாரம் அறிக்கையொன்றை வெளியிட்டது. அந்த அறிக்கை உலகையே வியப்பில் ஆழத்தியுள்ளது. காரணம் உலகத்திலேயே அதிகமான மனநோயாளிகளைக்கொண்ட நாடு அமெரிக்கா என்பதுதான். 2001ம் ஆண்டு தொடக்கம் 2003ம் ஆண்டு இறுதி வரை இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. உலகில் மனநோயாளிகளை அதிகம் கொண்ட நாடுகள் மற்றும் மனநோயாளிகள் எவ்வாறு தோன்றுகின்றார்கள் என்பது தொடர்பாக பெல்ஜியம், சீனா, கொலம்பியா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், லெபனான், மெக்சிக்கோ, நெதர்லாந்து, நைஜீரியா, ஸ்பெயின், உக்ரெயின், அமெரிக்கா ஆகிய 14 நாடுகளில் நேரடியாக இறங்கி உலக சுகாதார அமைப்பு ஆய்வுகளை மேற்கொண்டது.

இந்த ஆய்வுகளின் முடிவில் அமெரிக்காவில் 26.4 வீதமான மக்கள் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதும், அமெரிக்காவிற்கு அடுத்ததாக உக்ரேன் மக்களில் 20.5 வீதத்தினர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதும் தெரியவந்துள்ளது. மூன்றாவது இடத்தில் பிரான்ஸ் இருக்கிறது. இங்கு 18.4 வீதமான மக்கள் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என ஆய்வு கூறுகின்றது.

உலக சுகாதார அமைப்பின் இந்த ஆய்வை உற்று நோக்கினால் பொருளாதார வளங்களில் வளர்ச்சியடைந்த நாடுகளிலேயே அதிகளவான மனநோயாளர்கள் இருப்பதைக் காணலாம். இவர்களுடைய மனநோய்க்கான காரணம் பெரும்பாலும் தனிமை, அளவுக்கதிகமான போதை உபயோகம், வேலை வாய்ப்பின்மை, தனிநபர் வன்முறைகள்... என பல்வேறுபட்டவற்றைக் கூறலாம். இவற்றில் உக்ரேன் ஒரு வளர்ச்சியடையாத நாடாக இருக்கின்றபோதிலும் இங்கும் வேலைவாய்ப்பின்மை, மற்றும் குழு மோதல்களால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள், பயம் போன்ற காரணங்களே மனநோயாளர்கள் அதிகமாக காணப்படுவதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

உலகத்தின் பார்வையில் வெளிவந்த தகவல் இதுதான். ஆனால், இவற்றை எல்லாம் விட இன்றும் உலகின் பார்வைக்கு வெளிவராமல் இலங்கையில், குறிப்பாக வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில், மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமல்ல, மன வளர்ச்சி குன்றிய நிலையிற் பிறந்த குழந்தைகளும் அதிகமாக காணப்படுகின்றனர். காரணம் சிறீலங்கா அரசும் அதன் இராணுவமும் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்ட போர்தான். சிறீலங்கா அரசும் அதன் இராணுவமும் தமிழ் மக்கள் மீதும் அவர்களின் வாழ்விடங்களின் மீதும் மேற்கொண்ட அழிப்பு நடவடிக்கைகளின் போது ஏற்பட்ட பதற்றம், பயப்பீதி, வெடியோசை அதிர்வுகள் காரணமாகவும், வீடுவாசல்கள், சொத்து இழப்புக்கள், குடும்ப அங்கத்தவர்கள், உறவினர்களை இழந்த கவலைகளாலும், வீடுகளை விட்டுவெளியேறி அகதிகளாகி இடத்துக்கிடம் அலைந்து திரிந்த மன உழைச்சல்களாலும் ஏராளமானவர்கள் பாதிப்படைந்துள்ளனர். இவர்களில் கர்ப்பிணித் தாய்மார்களின் பாதிப்புத்தான் ஓர் எதிர்காலத் தலைமுறையையே பாதிக்கும் அளவிற்கு சென்றிருக்கின்றது. யாழ்குடாவில் மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான பாடசாலை ஒன்றை ஆரம்பிக்கின்ற அளவிற்கு அங்கு மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் இருக்கின்றார்கள் என்றால் நிலைமையை நீங்களே புரிந்துகொண்டிருப்பீர்கள். சந்திரிகா அரசின் பொருளாதாரத் தடையால் போசாக்கான உணவினைப் பெறமுடியாத காலப்பகுதிகளில், இவ்வாறான நெருக்கடியான நேரங்களில் கருத்தரித்த பல தாய்மார்களின் குழந்தைகள் மனவளர்ச்சி குறைந்தவர்களாகப் பிறந்துள்ள துயரம் வடக்கு - கிழக்கு பகுதிகளில் ஏராளமாக நிகழ்ந்துள்ளன. இவற்றைத் தடுப்பதற்கு விடுதலைப் புலிகள் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போசாக்குத் திட்டங்களை அறிமுகப்படுத்தி ஏற்படவிருந்த பாரிய விபரீதங்களை ஓரளவிற்குத் தடுத்துள்ளனர். எனினும் இதன் தேவை இன்னும் அதிகமாக உள்ளது.

உலக நாடுகள் பலவற்றில் இவ்வாறு மனவளர்ச்சி குறைந்த குழந்தைகளுக்கு, மன நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கருணையோடு செயற்படுகின்ற பல்வேறு அமைப்புகள் உதவுகின்றன. ஆனால், எமது மக்களுக்கு, எமது எதிர்காலத் தலைமுறையினருக்கு உதவவேண்டியவர்களாக நாங்களே உள்ளோம்.




### 14 நாடுகளில் உள்ள மனநோயாளிகளின் விகிதாசாரம்

| | | |
|---|---|---|
| 01. அமெரிக்கா | - | 26.4 |
| 02. உக்ரெயின் | - | 20.5 |
| 03. பிரான்ஸ் | - | 18.4 |
| 04. கொலம்பியா | - | 17.8 |
| 05. லெபனான் | - | 16.9 |
| 06. நெதர்லாந்து | - | 14.9 |
| 07. மெக்சிக்கோ | - | 12.2 |
| 08. பெல்ஜியம் | - | 12.0 |
| 09. ஸ்பெயின் | - | 9.2 |
| 10. சீனா | - | 9.1 |
| 11. ஜேர்மனி | - | 9.1 |
| 12. ஜப்பான் | - | 8.8 |
| 13. இத்தாலி | - | 8.2 |
| 14. நைஜீரியா | - | 4.7 |

## உயிர் காப்பான் தோழன்



13 வயதான றையன் கூறன் இங்கிலாந்திலுள்ள நோத்தம்பேலண்டிலுள்ள கிறெஸ் வெல்லிலுள்ள கடற்கரையின் கற்பாறையில் நின்று கொண்டிருந்த போது கடும் அலையால் கொந்தளிக்கும் கடலுக்குள் தூக்கி வீசப்பட்டு உயிருக்குத் தத்தளித்துக் கொண்டிருப்பதைக் கண்ட அவனது வகுப்புத் தோழன் 13 வயதான கிறிஸ் உர்வின் தனது சொந்த முயற்சியில் காப்பாற்றிய வீரச்செயலை அனைவரும் போற்றிப் புகழ்ந்தனர். கடலில் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருந்தவனை இழுத்துக் காப்பாற்றுவதற்கு முயன்ற அவனது குடும்ப நண்பரான டேவிட் பரர்ரும் கடலுக்குள் இழுத்து வீசப்பட்டார். இவ்விருவரும் வடக்குக் கடலில் தொங்கற்பாறைகளுடன் முட்டிமோதி நொறுக்கப்படுவதை வழிப்போக்கர்கள் செய்வதறியாது நடுக்கம் கலந்த பேரச்சத்துடன் பார்த்துக்கொண்டிருந்தனர். கிறிஸ் ஒரு நொடியைத் தானும் வீணாக்காமல் இந்த அபாயம் பற்றிக் கூறி உதவிகோர அண்மையிலுள்ள வீட்டிற்கு ஓடிப்போனான். மூடப்பட்டிருந்த அவ் வீட்டிலிருந்து ஒரு பதிலும் வராததனால் அவ்வீட்டுத் தோட்டத்தில் தனது நண்பனைக் காப்பாற்ற ஏதாவது கிடைக்குமாவெனத் தேடினான். தோட்டத்துப் பூமரங்களுக்கு நீர் பாச்சும் ஒரு பழைய நெளிவுடைய 20 அடி நீளமுள்ள குழாய் (hosepipe) அவனது கண்களுக்குப்பட்டது. அதனைத் தண்ணீர்க்குழாயின் இணைப்பிலிருந்து திருகிப் பிடுங்கி எடுத்துப் பாறைகளுக்கு வலிந்து இழுத்துக்கொண்டுபோய், ஒரு முனையை



இறுகப்பற்றியபடி மற்ற முனையை நீருக்குள் பலமாக வீசினான். றயன் அந்தக் குழாயை இறுகப்பிடிக்க, வெளியே இழுத்துக் காப்பாற்றப்பட்டான். திரு. பரரர் தாழ்ந்து கொண்டிருந்த பையனைக் கடலில் மிதக்க வைத்துக் கொண்டிருப்பதற்கான தனது முயற்சியில் கடுங்களைப்புற்றிருந்தபடியால் அந்தக் குழாயைப் பற்றிப் பிடிக்கச் செல்ல முயன்றும் அவரால் முடியவில்லை. அவசரப் பாதுகாப்புச் சேவையினர் அங்கு வருவதற்கு முன்னர் அங்கிருந்தவர்களால் அவரைக் காப்பாற்றுவதற்கு ஒரு பாதுகாப்பு மிதவை கடலுக்குள் வீசப்பட்டது. 25 நிமிடங்களின் பின்னர் கடலுக்குள் தத்தளித்துக்கொண்டு இருந்த பையன் பாதுகாப்பாக இழுத்தெடுத்ததற்காக றயனின் தந்தையார் நீல் குர்ரன் தனது மகனது நண்பனை ஒரு 'சின்ன வீரன்' என நன்றியுடன் கூறினார். கிறிஸ் உர்வினது துரித சிந்தனையாலும் செயற்பாட்டாலும் றயனும், டேவிட்டும் இன்று உயிருடன் இருக்கிறார்கள். அவ்விருவரும் இப்பொழுது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு 'hypothermia' என்று சொல்லப்படும் அசாதாரணமாக உடலின் ஏற்படும் தாழ்ந்த வெப்பநிலைக்குச் சிகிச்சையளிக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

## சடலங்களால் எவ்வித சுகாதார இடரும் ஏற்படுவதில்லை

சடலங்களிலிருந்து நோய்கள் தொற்றுமென்ற அச்சம் எவ்வித ஆதாரமுமற்றதாம். காசநோய், வாந்திபேதி, நெருப்புக் காய்ச்சல், கொள்ளை நோய், நச்சுப்பரு போன்ற கடும் வியாதியில் ஒருவர் மரணமுற்றாலும் அவரது சடலத்திலிருந்து அவ்வியாதி மற்றவர்களுக்குத் தொற்றாது. அந்நோய் கண்டவர்கள் இறந்தபின்பு அந்தச் சடலத்தில் அந்நோய்க் கிருமிகள் நீண்ட நேரத்திற்கு உயிருடன் இரா. எனவே இவ்வச்சம் அடிப்படையில்லாதது என லத்தீன் அமெரிக்க, இந்தியா, ஆபிரிக்க, போல்கன்ஸ் போன்ற நாடுகளில் ஆராய்ச்சிகளை வேறு உலகப் புகழ்வாய்ந்த மருத்துவச் சுகாதார ஸ்தாபனங்களுடன் மேற்கொண்ட டொக்டர் மோகன் தெரிவித்துள்ளார்.

## மரணத்து நிழலின் பள்ளத்தாக்கு

'இயேசு நாதரே எனது மேய்ப்பர்' என்ற 23வது தோத்திரப் பாடலில் வரும், 'ஆம், நான் மரணத்து நிழலின் பள்ளத்தாக்கில் நடக்கின்ற போதிலும்' என்ற சொற்கள் நீக்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாக 'முழு அளவிலான வன்முறை நேருக்கு நேர் வெடித்தாலும் நான் அஞ்சமாட்டேன், யேசுவே' என்ற சொற்கள் சேர்க்கப்பட்டுள்ளது. மாற்றப்பட்ட இந்தத் தோத்திரப்பாடலை The church of England வெளியிடவுள்ளது.

IATA

# sivatravel

## Gold Award Winning Top Agent for Sri Lankan Airlines In Switzerland 2002-2003



SriLankan Airlines

உங்கள் பிரயாண திகதிகளை கொழும்பில் இருந்து இலவசமாக மாற்றிவரக்கூடியதும் 30 கிலோ எடை எடுத்து செல்லக்கூடிய வசதியுடன் அனைத்து ரிக்கெட்டுக்களும்

**now flies you to**

# COLOMBO

## 5 times a week (Sun./Mon./Wed./Fri./Sat.)

(Monday+Saturday via Male / Sunday+Friday Nonstop/ Wednesday via Frankfurt (sometime)

**Zürich-Colombo Return : Adult 1180 Fr. / Child 791 Fr./ Baby 152 Fr)**
(Valid till end of June 2004)

**Zürich-Colombo Return : Adult 1380 Fr. / Child 925 Fr./ Baby 162 Fr)**
(Valid from 01.July till end of July and 01.October till 31.October 2004)

**Zürich-Colombo Return : Adult 1280 Fr. / Child 858 Fr./ Baby 152 Fr)**
(Valid from 01.August till end of Septermber 2004)

(அறிவித்தல்: எமது முயற்சியின் வெற்றியாக 12.06.இல் இருந்து அனைத்து விமானச்சீட்டுகளிலும் 30 கிலோ எடையை எடுத்துசெல்லும் வசதியாக ரிக்கெட்டிலேயே பிரின்பண்ணிகொடுக்கப்படும்)

**Spitalgass-Passage 16, 3011 Bern**

**Tel.031 318 44 60 / Fax.031 318 44 61**

# நீலவாணி எண்டர் பிறைஸ்

## இரண்டாவது வருட பூர்த்தியை முன்னிட்டு
## பேர்ண் மாநகரில்

# மாபெரும் மலிவு விற்பனை

| உதாரணத்துக்காக மாற்றம் செய்யப்பட்ட விலை | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| உடன் இலங்கை மீன் வகைகள் 1Kg | 7.50Fr | 6.90Fr |
| உடன் இலங்கை நண்டு கணவாய் 1Kg | 9.00Fr | 6.90Fr |
| இலங்கை கீரை வகைகள் 1Kg | 9.00Fr | 6.90Fr |
| மரவள்ளி | 3.80Fr | 3.00Fr |
| இராச வள்ளி | 8.00Fr | 5.50Fr |
| வெண்டி, புடோல், பூசணி, முருங்கை | 5.50Fr | 3.80Fr |
| உள்ளி | 3.00Fr | 1.75Fr |
| சின்ன வெங்காயம் | 8.00Fr | 5.50Fr |
| தாய்லாந்து பயற்றங்காய், பாகற்காய் | 9.00Fr | 7.35Fr |
| நெஸ்டோமோல்ட் | 6.90Fr | 5.50Fr |
| விவா | 8.90Fr | 6.90Fr |
| கோர்லிக்ஸ் | 6.90Fr | 5.90Fr |
| மைலோ | 6.90Fr | 5.90Fr |
| நெல்லி ரசம் (தோலகட்டி) | 6.50Fr | 5.40Fr |
| பழரச வகைகள் | 6.50Fr | 5.40Fr |
| லெமன் பஃப் | 2.50Fr | 1.25Fr |
| டி டைம் | 3.50Fr | 2.50Fr |
| கிப்ட் செலக்ஸ்ஸன் | 6.50Fr | 4.80Fr |
| ஃபமிலி ஷசேட்மன்ட் | 4.80Fr | 3.50Fr |
| கிறிம் கிறேக்கர் | 2.50Fr | 1.70Fr |
| சீனி சம்பல் | 5.50Fr | 4.20Fr |
| ஊறுகாய் வகைகள் | 5.50Fr | 4.20Fr |

| உதாரணத்துக்காக மாற்றம் செய்யப்பட்ட விலை | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| பிரியாணி மிக்ஸ் | 5.50Fr | 4.20Fr |
| ஜாம் வகைகள் | 3.90Fr | 3.10Fr |
| தேங்காய் பால் பவுடர் 1 Kg | 13.50Fr | 9.60Fr |
| தேங்காய் பால் பவுடர் 350g | 5.95Fr | 4.50Fr |
| தேங்காய் பால் பவுடர் 150g | 3.15Fr | 2.10Fr |
| மொட்டைக் கருப்பன் அரிசி 1Kg | 2.50Fr | 1.90Fr |
| புழுங்கல் அரிசி 5Kg | 12.50Fr | 9.30Fr |
| புழுங்கல் அரிசி 1Kg | 2.50Fr | 1.90Fr |
| சம்பா 5 Kg | 13.50 Fr | 9.30Fr |
| சம்பா 1Kg | 2.50Fr | 1.90Fr |
| பசுமதி அரிசி 5Kg | 12.00Fr | 7.50Fr |
| U.S.A அரிசி 25 Kg | 35.00 Fr | 28.50Fr |
| மைசூர் பருப்பு 2Kg | 5.50Fr | 3.50Fr |
| நல்லெண்ணெய் 375 Ml | 6.90Fr | 4.90Fr |
| 750 Ml | 11.90Fr | 9.40Fr |
| வறுத்த அரிசி மா 1 Kg | 3.90Fr | 2.90Fr |
| யாழ்.மிளகாய்தூள் 900g | 9.60Fr | 7.90Fr |
| கிங்ஸ், லீலா, சூரியா 500g | 5.50Fr | 4.30Fr |
| அதி குளிரூட்டப்பட்ட கோழிக்கால் 2.5Kg | 12.90Fr | 9.90Fr |
| உடன் ஆட்டிறைச்சி பங்கு 1Kg | 9.50Fr | 8.00Fr |
| உடன் ஆட்டிறைச்சி தொடை 1Kg | 14.00Fr | 11.00Fr |
| உடன்கோழி | 6.50Fr | 5.50Fr |

**மீன்வெட்டிச் சுத்தம் செய்து தரப்படும் இலவசம்**

இங்கு குறிப்பிடப்படாத மேலும் பல பொருட்கள் அதி குறைந்த விலையில் விற்பனை செய்கிறோம் மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விஷேட கழிவு உண்டு

**வாருங்கள்! நுகருங்கள்!**
**நல் ஆதரவைத் தாருங்கள்!!!**

**Bubenbergplatz 8 - 3011 bern**
**Tel: 031 -312 17 50**
**Natel: 079-300 37 49**
**Fax: 031 - 312 17 49**
பேர்ண் பெரிய தபால் நிலையத்துக்கு அருகே

காலவரையின்றி இதுவே எமது நிரந்தர விலையாகும்
எமது ஸ்தாபனம் உங்களுக்காக 365 நாட்களும் திறந்திருக்கும்

(14ம் பக்கத் தொடர்ச்சி)

## நாய்கள் குரைப்பது உனக்குக் கேட்கவில்லையா?

குடித்து விடுவாய் என்பதால் உனக்கு அவள் தண்ணிரைக் கொடுப்பாள். உன் பசியைப் போக்கவே முடிந்ததில்லை. நீ வெறிபிடித்துப் போவாய். வயதாக ஆக அந்த வெறியும் உன்னுடனேயே வளர்ந்து உன் மண்டையில் போய்விடும் என்று அப்போது தெரிந்திருக்கவில்லை. ஆனால் அப்படித்தான் இருந்தது. என் அம்மா, அவள் ஆத்மா சாந்தி அடையட்டும், நீ பலசாலியாக வளர வேண்டும் என்று ஆசைப்பட்டாள். நீ பெரியவனானதும் தான் சார்ந்திருக்க நீ இருப்பாய் என்று நினைத்தாள். அவளுக்கு நீ மட்டும்தான் இருந்தாய். அவளின் மற்றக் குழந்தை பிறக்குமுன் அவளைக் கொன்றது. அவள் இப்போது உயிரோடு இருந்திருந்தாலும் நீ கொன்று விட்டிருப்பாய்.'

தான் முதுகில் சுமக்கும் மனிதன் தன் முட்டிகளைத் தளர்த்தி பக்கவாட்டில் கால்களைத் தொங்கப் போட்டு ஆடவிடுவதை உணர்ந்தான். அவனின் தலை விம்மியழுவதால் குலுங்குவதையும் உணர்ந்தான். கண்ணீரைப் போன்ற பெரிய துளிகள் தலைமயிரில் விழுவதை உணர்ந்தான்.

'அழுகிறாயா இக்னேஷியோ? உன் அம்மாவின் நினைவு உன்னை அழவைக்கிறதல்லவா? ஆனால் நீ அவளுக்கென்று எதுவும் செய்ததில்லை. நீ எப்போதும் எங்களுக்குத் தீமைதான் செய்திருக்கிறாய். ஏதோ நாங்கள் உன்னை அன்புக்குப் பதிலாகத் தீமையைப் புகட்டி வளர்த்தாற்போல. இப்போது பார்த்தாயா? நீ காயமுற்று இருக்கிறாய். அவர்கள் எல்லாம் கொல்லப்பட்டு விட்டார்கள். அவர்களுக்கு ஒருவரும் இல்லை. அவர்கள் 'எங்களைக் கவனித்துக்கொள்ள யாரும் இல்லை' என்று சொல்லியிருக்கக்கூடும். ஆனால் உனக்கு, இக்னேஷியோ?'

இப்போது கிராமம் கண்ணில் பட்டது. நிலாவெளிச்சத்தில் வீட்டுக் கூரைகள் பளபளப்பதைப் பார்க்க முடிந்தது. முட்டி வலித்து ஒடிந்துவிடுகிறாற் போல மகனின் கனம் அந்தக் கடைசி நேரத்தில் அழுத்தியது. முதல் வீட்டை நெருங்கியதும் அவன் உட்கார்ந்த தன் மேலிருந்த உடலைத் தளர்த்தினான். அது பொத்தென்று விழுந்தது. கழுத்தைச் சுற்றியிருந்த மகனின் கைகளை விடுவிக்க மிகவும் சிரமப்பட்டான். உடனே சுற்றி எங்கும் நாய்கள் குரைத்தன.

'ஆனால் இக்னேஷியோ, நீ அவற்றைக் கேட்கவில்லை. அந்த ஒரு துளி நம்பிக்கையைக் கூட நீ எனக்குக் கொடுக்கவில்லை.'

(18ம் பக்கத் தொடர்ச்சி)

## என்னொரு நான்

கந்தையா நவரேந்திரன்

மருத்துவரோ, மகப்பேறு மருத்துவரோ அவளை அறிவதுபோல் அல்லாது நாங்கள் அவளை வேறு வகையில் அறிகிறோம். நாங்கள் அவளை உயிரினங்களின் உடலுறுப்பின் இயற்கைச் செயற்பாடு ரீதியாகவும், தோற்ற ரீதியாகவும் அறிவோம். ஆனால் நாம் அவளது உயிர்சார்ந்த -ஆன்ம இயலான இருத்தலை அறியோம். அன்பால், அன்பு ஒன்றால் மட்டுமே, அவளது இந்த ஆன்ம இருத்தலை அறிய முடியும். நான் அவளைக் காதலிக்கும்போது, அவளது உடல்மீது அல்லாமல் அவளது ஆன்ம இயலான இருத்தலின் மீதே காதல் கொள்கின்றேன். இது, நல்லெண்ணம் (Trust) இருந்தாலேயே சாத்தியமாகும்.

எனவே 'உண்மை' பற்றிய முடிவுக்கு நாம் வந்தால், நாம் எமது வாழ்நாள் முழுவதும் கருதுகோளுடனேயே வாழவேண்டிவரும். நல்லெண்ணத்துடனான விசாரணையில் எம்முள் இயல்பு மாற்றம் ஏற்படுமேயன்றி அறிவின் சேகரிப்பு ஏற்படுவதில்லை. இதனாலேயே 'காதலுக்குக் கண்ணில்லை' என்று தருக்கவாதம் கூறுகிறது. காதலுக்குச் சொந்தக் கண் உண்டு. ஆனால் தருக்கவாதம் கூறும் 'கண்' அதற்கு இல்லை. காதலின் - அன்பின் கண் ஆழமானது. மனதின் தருக்க வாதத்துடன் நாம் சொற்பொழிவைக் கேட்கும்போது அது முடிவுகளைத்தான் காட்டும். முடிவுகள் எங்களைப் பேராசிரியர்களாகவும், அரசியல்வாதிகளாகவும், கல்விமான்களாகவும், அறிஞர்களாகவும் ஆக்கும். இந்த முடிவுகள் புலன் சார்ந்த உலகப் பகட்டுகளுக்கு உதவும். மூளையை அறிவால் நிரப்பி எம்மைக் காலத்தின் வரையறைகளுக்குள் திணித்து வைக்கவே முடிவுகள் உதவும்.

நாம் சொற்களுக்கிடையே இருக்கும், நிகழும் அமைதியைச் செவிமடுப்போமேயானால் அது எம்மை அச் சொற்களுக்கு அப்பால் இட்டுச் செல்லும். அது எம்முள் கசிந்து, பரவி, வியாபித்து எம்மையே ஆட்கொள்ளும்.

(12ம் பக்கத் தொடர்ச்சி)

## பிக்குகள்...

அக்மீமன தயாரட்ண தேரர் பதவியேற்கக்கூடாதென ஆளும் தரப்பு உறுப்பினர்கள் ஆட்சேபனை எழுப்பியதுடன் கூச்சலிட்டவாறு பதவிப் பிரமாணத்தைத் தடுக்க முயன்றனர்.

சபை அலுவல்களை நிறுத்துவதற்காக செங்கோலை ஆளும் கட்சி உறுப்பினர் ஓடோடி வந்து எடுத்துச்சென்று எங்கேயோ ஒளித்து வைத்துவிட்டார். ஆயினும், சபாநாயகர் இது தொடர்பாக பணிப்புரை எதுவும் விடுக்காததால் அக்மீமன தேரர் கூச்சல் குழப்பம், இழுபறிக்கு மத்தியில் சத்தியப் பிரமாணம் எடுத்து விட்டார். ஹெல உறுமய கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ரட்ணசீகர தேரர் தனது பதவியை இராஜினாமாச் செய்ததாக சபாநாயகருக்கு அறிவித்ததையடுத்து அவரின் இடத்திற்கு அக்மீமன தயாரட்ண தேரர் பதவியேற்கவிருந்தார். ஆனால், தனது பதவியை இராஜினாமாச் செய்ததாக முன்னர் அறிவித்திருந்த ரட்ணசேகர தேரர் தன்னைக் கட்டாயப்படுத்தியே தனது இராஜிநாமாக் கடிதம் பெறப்பட்டதாகத் தெரிவித்து அதனை இரத்துச் செய்யுமாறு கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார். இம்மனுவை விசாரித்த நீதிமன்றம் அவரது இடத்திற்கு புதியவரொருவர் சத்தியப்பிரமாணம் செய்வதை 11ம் திகதி வரை இடைக்கால தடை உத்தரவு விடுத்திருந்தது. இந்த நிலையில் 8ம் திகதி நாடாளுமன்றம் கூடிய போது அக்மீமன தயாரட்ண தேரரைப் பதவிப்பிரமாணம் செய்ய வருமாறு சபாநாயகர் அழைப்பு விடுத்தார். இவ்வழைப்பிற்கு உடனடியாகவே ஆட்சேபம் தெரிவித்த அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே குறிப்பிட்ட தேரர் சத்தியப் பிரமாணம் செய்வதற்கு நீதிமன்றம் தடை விதித்திருப்பதால் அவர் பதவிப் பிரமாணம் செய்துகொள்ள முடியாது எனவும், அதையும் மீறிச் செய்தால் அது நீதித்துறைக்கும் நிர்வாகத் துறைக்கும் முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் எனவும் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர் நீதிமன்றத்தின் தீர்ப்பு தனக்கு இதுவரை இடைக்கவில்லை எனவும் எனவே தேரர் சத்தியப் பிரமாணம் செய்வதில் தடையெதுவும் இல்லை எனவும் தெரிவித்தார். இதன்போது குறுக்கிட்ட ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நீதிமன்றத் தீர்ப்பை மீறி செயற்பட முடியாது எனவும் தீர்ப்பின் பிரதி சட்டத்தரணியால் சபாநாயகருக்கு அனுப்பப்பட்டதாகவும் தெரிவித்தார். ஆனால், தீர்ப்பு தனக்குக் கிடைக்கவில்லை எனத் தெரிவித்த சபாநாயகர் அக்மீமன தயாரத்ன தேரரைச் சத்தியப் பிரமாணம் செய்ய வருமாறு மீண்டும் அழைப்பு விடுத்ததையடுத்தே வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியது.

(12ம் பக்கத் தொடர்ச்சி)

## துகிலுரியப்பட்ட...

கல் பெரேராவிற்கும் இடையே கைலப்பு ஏற்பட்டது. இந் நிலையில் படைக்கலச் சேவிதரும் அவரது உதவியாளரும் பிக்குவிற்குப் பாதுகாப்பு வழங்கி அவரை சபாநாயகரை நோக்கி அழைத்துவரப் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தனர். எனினும், ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூச்சலிட்டுக் குழப்பம் விளைவித்து சபையின் நடுவில் நிலத்தில் அமர்ந்து சபை நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்துக் கொண்டிருந்தனர். இச் சமயம் நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன், புதிதாகச் சத்தியப் பிரமாணம் செய்யவிருந்த தேரரை எதிர்க்கட்சியினர் அமர்ந்திருக்கும் ஆசனங்களுக்குப் பின்னால் உள்ள பாதையினால் சபாநாயகரிடம் அழைத்து வந்தார். அங்கு வந்து சேர்ந்த பின்னர் இரண்டாவது தடவையாகவும் அவரது ஆடைகளைத் துகிலுரிவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. எனினும் மகேஸ்வரன் போன்றவர்கள் அவருக்கு ஆடையாக நின்று ஏற்பட இருந்த அவமானத்தைத் தடுத்து நிறுத்தியுள்ளனர். ஆனால் அவர் மீது விழுந்த தாக்குதல்களை தடுத்துநிறுத்த முடியவில்லை.

(12ம் பக்கத் தொடர்ச்சி)

## செங்கோலுடன்...

தேரர் சத்தியப் பிரமாணம் செய்து முடித்ததும் ஏனைய மூவரையும் சத்தியப் பிரமாணம் செய்ய வருமாறு சபாநாயகர் அழைப்பு விடுத்த போதிலும் அவர்கள் சத்தியப் பிரமாணம் செய்யவில்லை. இந்நிலையில் காலை 10.40 மணிக்கு செங்கோலை மீள ஒப்படைப்பதற்கு 3 நிமிட அவகாசம் வழங்கி சபாநாயகர் சபையை ஒத்திவைத்தார். 3 நிமிட கால அவகாசத்தின் போது செங்கோல் மீள ஒப்படைக்கப்படாததையடுத்து அறிக்கையொன்றை வெளியிட்ட சபாநாயகர் 15 நிமிட நேரம் சபையை ஒத்திவைத்து செங்கோலை மீள ஒப்படைக்கும்படி வேண்டுகோள் விடுத்தார். எனினும் மாலை 2.30 மணியளவிலேயே படைக்கலச் சேவிதர் மீண்டும் செங்கோலைக் கொண்டு வந்து சேர்த்தார். இதையடுத்து மாலை 2.35 மணிக்கு மீண்டும் சபை கூடியது. இதனையடுத்து சபையை யூலை 20ம் திகதி வரை ஒத்திவைப்பதாக சபாநாயகர் அறிவித்தார்.

இதேநேரம், பத்திரிகையாளர் பகுதியில் இருந்த இந்திய பத்திரிகையாளரொருவர், இந்தியப் நாடாளுமன்றத்தில் செங்கோல் இல்லை எனவும் இந்தியாவில் மக்கள் ஆட்சியே நடப்பதால் அங்கு செங்கோல் இல்லை எனவும் கூறிய அவர், இதேபோன்றதொரு சம்பவம் இங்கிலாந்துப் நாடாளுமன்றத்திலும் முன்னர் இடம்பெற்றதாகவும் அச்சமயம் செங்கோலை எடுத்துச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் அதை அருகில் உள்ள தேம்ஸ் நதியினுள் வீசி விட்டதாகவும் தெரிவித்தார்.

துயர்துடைப்பு நாட்கள்-2004
ஜூன் 01 முதல் ஜூலை 05 வரை
தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - பிரான்சு
Organisation Pour La Réhabilitation Des Tamouls
26, Rue Du Département, 75018 Paris, France.Tél/Fax:01 40 38 30 74
e-Mail:trofrance@trofr.com - web:http://www.trofr.com

L
Auto Theorie Kurs
Car Driving Licence
கார் தியோறி படிக்க வேண்டுமா?
(ஓரளவு டொச்மொழி போதும்)
கார் ஓட லைசென்ஸ் வேண்டுமா?
(குறைந்த செலவுடன்)
BERN SWISS
2004 ம் ஆண்டுக்கான புதிய புத்தகம், புதிய வினாக்களுடன் புதிய வகுப்புக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன
தொடர்புகளுக்கு:
றூபா சிவரூபன் 079 314 16 43

S.A.NATHAN CREDIT AG
உங்கள் பணத் தேவையை உடனே எங்களுடன் தொடர்புகொள்வதன் மூலமாகத் தீர்த்துக் கொள்ளுங்கள்...
நீங்கள் சுவிஸின் எந்தப் பாகத்தில் வசிப்பவராயிருந்தாலும் குறைந்த வட்டி வீதத்தில், அதிக தொகையை வங்கிக் கடனாகப் பெற்றுத் தருகின்றோம்.
Kasparstrasse 15/94, 3027 Bern Tel: 031 991 62 14, Fax: 031 992 62 11, Natel: 079 208 50 46

## 'கப்டன் டோக்' இவரும் பட்டம் பெறுகிறார்!

சிறீலங்காவில் இராணுவத்தினரால் பயிற்றுவிக்கப்படும் நாய்களுக்குப் பட்டமளிப்பு விழாவும் நடைபெறுகின்றது. எம்பிலிப்பிட்டியப் பகுதியில் துப்பறியும் நாய்களுக்கான பாடசாலை ஒன்று அமைக்கப்பட்டு, பயிற்சிகள் வழங்கப்பட்டுவருகின்றன. பயிற்சிகளின் முடிவில் துப்பறியும் நாய்களுக்கு பட்டமளிப்பு விழாவும் நடைபெறுகின்றது. நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டுள்ள வெடிபொருட்களைக் கண்டுபிடிப்பதிற் சிறந்த பயிற்சியைப் பெற்றுள்ள இந் நாய்க்குக் கடந்த வாரம் பட்டமளிப்பு விழா நடாத்தப்பட்டது. நாயுடன் அதன் பயிற்சியாளரான சிறீலங்கன் சிப்பாய் உள்ளார். இதே வேளை, கண்ணி வெடிகளை மோப்பம் பிடித்து அறிவதற்காக அமெரிக்க மோப்ப நாய்களுக்கு வவுனியாவில் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. ஆறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு வரும் இந்த நாய்கள் இம் மாத நடுப் பகுதியிலிருந்து கண்ணி அகற்றும் பணிகளில் ஈடுபடுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## தற்போதைய நிலைமையில் பேச்சுக்கள் தொடர்வது சந்தேகமே

- சு.ப.தமிழ்ச்செல்வன் -



சிறீலங்கா அரசாங்கத்தின் தற்போதைய குழப்பமான நிலைமைகளின் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்வதில் சந்தேகம் தோன்றியுள்ளதாகத் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பொன்றின் போது, வெளிநாட்டு ஊடகவியலாளர் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். சிறீலங்கா அரசாங்கத்தின் இவ்வாறானதொரு நிலைப்பாட்டையடுத்தே, ஐரோப்பாவுக்கான தனது உத்தியோகபூர்வ விஜயத்தை இரத்துச் செய்ததாகவும், சந்திரிக்காவே தற்போதைய நிலைமைகளுக்கான முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். மேலும், பலமான ஓர் அரசாங்கத்துடனேயே சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்வதில் தமிழீழ விடுதலைப் புலிகள் மிக ஆவலுடன் இருப்பதாவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## லெப்.கேணல் சார்ள்ஸ் நினைவாக மண்டபம் திறப்பு

கடற்புலிகளின் தாக்குதற் தளபதி லெப்.கேணல் சாள்ஸ் அவர்களின் 11ம் அண்டு நினைவு தினமான கடந்த 11ம் திகதி வெள்ளிக்கிழமை, முல்லை மாவட்டத்தில் அமைந்துள்ள கடற்புலிகளின் பாசறை ஒன்றில் கடற்புலி லெப்.கேணல் சாள்ஸ் மண்டபம் கடற் புலிகளின் விசேட தளபதி கேணல் சூசை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.




## கட்டுநாயக்க விமான நிலையப் பாதுகாப்பு விமானப்படையினர் வசம் ஒப்படைப்பு

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பு சிறீலங்கா விமானப் படையினரிடம் ஒப்படைக்கப்படடுள்ளது. விமான நிலையப் பாதுகாப்பு ஏற்பாட்டிலுள்ள பல்வேறு குறைபாடுகளைக் கருத்திற்கொண்டே விமான நிலையம் மற்றும் விமானச் சேவை திணைக்களம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

விமான நிலையப் பாதுகாப்பு ஏற்பாட்டில் பல்வேறு தரப்பிலிருந்தும் அரசியல் தலையீடுகள் மற்றும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதாக முறைப்பாடுகள் எழுந்துள்ளதால் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த முடிவை எடுத்துள்ளதாக விமான நிலைய மற்றும் விமானச் சேவை நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சாளிக்க விஜயசுந்தர தெரிவித்துள்ளார். விமான நிலையத்திற்கு நாளாந்தம் வந்து செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதனால் அதன் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டிய தேவை அவசியமாகியுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.


# மரண அறிவித்தல்

## அமரர் வேலுப்பிள்ளை கனகலிங்கம்

(முன்னாள் சமாதான நீதவான் – யோகபுரம்)

*மண்ணில்:* *16.11.1936*

*விண்ணில்:* *11.06.2004*



கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், யோகபுரம் 3ம் யூனிற் மல்லாவியை வதிவிடமாகவும் கொண்டிருந்த வேலுப்பிள்ளை கனகலிங்கம் 11.06.2004ல் இந்தியா சென்னையில் காலமானார்.

இவர் வேலுப்பிள்ளை தங்கம்மா அவர்களின் அன்பு மகனும், விஸ்வலிங்கம் செல்லம்மா அவர்களின் அன்பு மருமகனும், கமலாம்பிகையின் அன்புக் கணவரும், ராஜகுலேந்திரன் (சுவிஸ்), பாலசுப்பிரமணியம் (சந்திரன்-சுவிஸ்), காலஞ்சென்ற புவனேஸ்வரன், வனிதா (சுவிஸ்), ராஜேஸ்வரன் (லண்டன்), ரவீந்திரன் (சென்னை), சிவகௌரி (சென்னை) ஆகியோரின் அன்புத் தந்தையும், கலா, வக்சலா, சிவநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், யசிகா, ஜனந்-கிருஷன் றேஷ்னி ஆகியோரின் அன்புத் தாத்தாவும்

காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், செல்வரட்ணம் மற்றும் மகேஸ்வரி, தேவி, மலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 15.06.2004 செவ்வாய்க்கிழமை மாலை சென்னையில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல்: Jasi. Janan Th. Travels*
*Swiss- Natel: 0041796008966*
*Swiss: சந்திரன்- Natel: 0041 793 19 93 14*




# கடந்த ஆண்டு கடற்பரப்பில் ஏற்பட்ட விபத்தில் 4 கடற்கரும்புலிகள் வீரச்சாவு

(13.06.04)

கடந்த ஆண்டு யூலை 30ம் திகதி சர்வதேச கடற்பரப்பில் ஏற்பட்ட வெடிவிபத்தின்போது நான்கு கடற்கரும்புலிகள் வீரச்சாவடைந்துள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். கடற்கரும்புலி லெப்.கேணல் கில்லறி அல்லது முருகேசன் (கணேசன் சிவகுருநாதன் சொந்த முகவரி: மூத்தவிநாயகர் கோவிலடி ஆனைக் கோட்டை, யாழ்ப்பாணம், தற்காலிக முகவரி: சூசையப்பர் கோவிலடி, காத்தான்குளம், நட்டாங் கண்டல், மன்னார்), கடற்கரும்புலி மேஜர் இசைநிலவு அல்லது மதிவண்ணன் (கந்தசாமி தனேந்திரன் சொந்த முகவரி: தோப்புக்காடு, காரைநகர், யாழ்ப்பாணம், தற்காலிக முகவரி: 2ம் யுனிற் பாலிநகர், வவுனிக்குளம், மல்லாவி), கடற்கரும்புலி மேஜர் புகழினி (வடிவேல் விஜயராணி சொந்த முகவரி: இலங்கைத்துறை முகத்துவாரம் ஈச்சிலம்பற்றை மூதூர் திருமலை, தற்காலிக முகவரி: கணேஸ் திட்டம், வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு), கடற்கரும்புலி மேஜர் தனிசுடர் அல்லது பூவிழி (இராசலிங்கம் மலர்விழி

சொந்த முகவரி: பாடசாலை முன்பாக வேரவில் பூநகரி மன்னார், தற்காலிக முகவரி: இல. 106 கோட்டைகட்டியகுளம், மல்லாவி) ஆகிய பொராளிகளே வீரச்சாவைத் தழுவிக்கொண்டுள்ளனர்.

## இலங்கை நாணயப் பெறுமதியில் பெரும் வீழ்ச்சி

(13.06.04)

கடந்த பல வாரங்களாகப் பெரும் பின்னடைவைச் சந்தித்து வரும் இலங்கை ரூபாவின் பெறுமதி, இவ் வாரம் மிக உச்சக்கட்ட வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. தற்போது ஒரு அமெரிக்க டொலரின் பெறுமதி 100 ரூபாவைத் தாண்டியுள்ளதாகவும் ஈரோவின் பெறுமதி 120ற்கும் மேல் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


ஈழமுரசு
POOBALAM WEEKLY

"POOBALAM"
JOURNAL TAMOUL HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

**RCS PARIS**
B 452 164 817 (2004B03079)

**Directeur de la publication:**
A.F. Santiogu

**Redacteur:** K. Jeisanthar

**Impression:**
IMPRIMERIES SAGITTAIRE
157 Boulevard Davout
75020 Paris.
Via - Imprimé chez I.C.T.
Z.A. de l' EPI d'Or, 94800 Villejuif.

நிர்வாகி: அ.பி. சந்தியோகு

ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

தபால் தொடர்புகளுக்கு:
POOBALAM
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-
Poobalam_murasu@hotmail.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பிரான்ஸ்:
Tel: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16

ஜேர்மனி:
T C C (வெளியீட்டுப் பிரிவு)
POSTFACH 101 613
46016 OBERHAUSEN
GERMANEY
TEL: 0208 205 99 103
FAX: 0208 205 99 104
HAND: 0049 172 28 86 291

சுவிஸ்:
MEDIA HOUSE
POSTFACH 6707, 3001 BERN.
TEL: 031 381 75 72

டென்மார்க்:
அன்பு
P.O.Box 65
7400 Herning, Denmark.
Tel: 86336352 - Fax: 65302588

பிரித்தானியா:
பரணி : - Tel: 07958675021
மோகன் : - Tel: 07961582285

இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
Tel: 61 3 8802 8368

**குறிப்பு:**
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.



**LA CHAPELLE**
**இறைச்சிக் கடை**
சுவையான, சுத்தமான, தரமான ஆடு, மாடு, உயிர் கோழி மற்றும் கோழிக் கால்களுடன் அனைத்து வகையான இறைச்சி வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்
34 Rue Philippe Girard
Paris 75010, M° : La chapelle
Tel : 01 42 05 00 95

**அதிசயம் ஆனால் உண்மை**
உங்கள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் தேவையான பேப்பர் பிளேட்ஸ், கப், மேசை விரிப்பு, கரண்டி, பாயாசக்கப், கை துடைக்கும் பேப்பர் மற்றும் உங்களுக்குத் தேவையானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
விமல் விநியோக நிலையம்
**VIMAL DISTRIBUTION**
1 Bis , Rue Chemain Vert
93800 Epiny Sur Saine
Port 0616812200 Ou 0666795689
Tel.et Fax - 01 42 35 24 98
குறிப்பு - மிகுதிப் பொருட்கள் திரும்பப் பெறப்படும்.

**Asha Video Movies**
உங்கள் இல்லத்தின் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா பிறந்தநாள் மற்றும் அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளைச் சிறந்த முறையில் (Digital - DV Camera) மூலம் வீடியோவில் படம் பிடித்து, நவீன முறையில் கணினி (Computer) மூலம் பதிவுசெய்து தருகின்றோம். அத்துடன் புகைப்படமும் எடுத்துக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 01 48593429 / 0615737073
Pub-Fr-39


# மரண அறிவித்தல்



## திருமதி ஜீவா இரத்தினேஸ்வரன்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி ஜீவா இரத்தினேஸ்வரன் 09.06.04 புதன் கிழமை காலமானார். அன்னார் இரத்தினேஸ்வரனின் (புனர்வாழ்வுப் பகுதி) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சோமசேகரம், சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், றோகினியம்மா ஆகியோரின் மருமகளுமாவார்.

இவர் ஷஜிந்தன், கஜானன், (பரியோவான் கல்லூரி), கம்சாயினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஜனகன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவலோகநாதன், சேகரன், சிவநாதன், மகேஸ்வரன், குகதாசன், காலஞ்சென்ற யோகேந்திரன், வாமதேவா, கஜேந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான தேவராசா, வாமதேவா மற்றும் கமலாதேவி, கணேசராசா, மேகலாதேவி, சிறீதேவா, கலாதேவி, மகேஸ்வரன், சித்திரா, றூபி, சுபாஜினி, கருணாவதி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் அவரது இல்லத்தில் 14.06.04 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்று அரியாலை சிந்துப் பாத்தி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*தகவல்: கணவன். பிள்ளைகள், சகோதரர்கள்*
31, நடுத்தெரு ஒழுங்கை
அரியாலை, யாழ்ப்பாணம்
**0094776127554**



Restaurant **Tharsana's**
* இலங்கை, இந்திய உணவுவகைகளை உங்கள் குடும்பத்தோடு வந்து சுவைத்து மகிழ்ந்திடவும்
* உங்கள் இல்லத்தின் இனிய விழாக்களை கொண்டாடி மகிழ்ந்திடவும், அனைத்து உணவு வகைகளையும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கும் லாச்சப்பலில் நீங்கள் நாடவேண்டியது.
**தர்ஷனா & பிரஷா உணவகங்கள்**
இங்கு சாப்பாடுகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்வதுடன், உங்கள் விழாக்களையும் இங்கு மகிழ்வுடன் கொண்டாடலாம்
**தர்ஷனாஸ் உணவகம்**
23, Rue Perdonnet, 75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
M°: La Chapelle *ou* Stalingrad
Restaurant **Prassah**
*Gastronomiques Indiennes*
**பிரஷா உணவகம்**
54 Rue Louis Blanc, 75010 Paris
Mo: La Chapelle *ou* Louis Blanc
Tel: 01 53 26 39 41

# மட்டு–அம்பாறை விவசாயம், மீன்பிடித் துறைகளை முன்னேற்ற ஜப்பான் உதவ வேண்டும்

## – கௌசல்யன் வேண்டுகோள்

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் விவசாயம், மீன்பிடித் தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கென மூலவளங்கள் நிறைய இருந்தும் அவை சரியான முறையில் பயன்படுத்தப்படாததால் இத்தொழில்கள் அபிவிருத்தி அடையவில்லை. எனவே இவற்றினை ஆராய்ந்து அத்தொழில் முயற்சியில் மக்கள் ஈடுபடுவதற்கென ஒத்துழைப்புக்களை நல்க வேண்டும் என்று மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்திற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்ட ஜப்பானிய தூதரகப் பொருளாதாரக் குழுவினர் கொக்கட்டிச்சோலை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



மட்டு - அம்பாறை மாவட்ட மக்களின் முக்கியமான தொழில் விவசாயமும், மீன் பிடித்தலும் ஆகும். விவசாயக் காணிகள் இங்கு நிறையவுள்ளன. நீர்ப்பாசன முறை திட்டமிட்ட முறையில் நன்கு அமைக்கப்பட்டுள்ள போதிலும், சரியான வடிகால் அமைப்புக்கள் இல்லாததினால் பெரும் அளவிலான நீர் விரையமாகின்றது.

புதிய தொழில் நுட்ப முறையில் பாசன வசதிகளை அமைத்து நீர் விரையமாகுவதைத் தடுக்க வேண்டுமென்றும், மாரி காலங்களில் இந்நீர் பெருக்கெடுத்து வீணாகக் கடலுக்குச் செல்வதைத் தடுத்து நிறுத்திச் சிறு சிறு குளங்களை அமைத்து, இந்நீரைத் தேக்கி வைத்தால் கோடை காலங்களில் விவசாயிகள் பயன்படுத்தலாம் என்றும் கௌசல்யன் கூறினார் மீன் பிடித்தொழிலைப் பொறுத்த மட்டில் இத்தொழிலுக்குரிய வசதி வாய்ப்புக்களைச் செய்து கொடுக்க வேண்டும். மீன்பிடி உபகரணங்கள், வலை, தோணி, முதலியவற்றை மீனவர்களுக்கு அவர்களது அமைப்புக்கள் மூலம் கொடுத்துதவி இத்தொழிலை அபிவிருத்தி செய்யலாம் என்றும் இவ்விரு தொழில்களுக்குரிய சந்தை வாய்ப்புகளையும், உற்பத்திகளைச் சேமித்து, பாதுகாத்து வைப்பதற்குரிய நவீன மயப்படுத்தப்பட்ட பாதுகாப்புத் திட்டங்களும் அமைத்துக் கொடுக்கப்படல் வேண்டும் என அவர் வேண்கோள் விடுத்தார்.

அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் நாவலடியில் இருக்கும் மீன்பிடிப் பயிற்சிக் கல்லூரிக்கு நவீன உபகரணங்களையும், இத்தொழிலுக்கு நன்கு பயிற்றப்பட்ட விரிவுரையாளர்களையும், நவீன மீன்பிடிப் படகுகளையும் அறிமுகப்படுத்தி இளைஞர்களை ஊக்குவித்து இத்தொழிலில் ஈடுபடுத்துவதற்கு ஒத்தாசை புரிய வேண்டும் என்றும் அவர் கூறினார். இதேவேளை கடைசியாகக் கிடைத்த செய்திகளின்படி ஜப்பானிய தூதுக்குழுவினர் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்கு 8 மில்லியன் வரையான நிதியை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளனர்.

## மட்டக்களப்பில் கண்ணிவெடி அகற்றும் பணிகள்

மட்டக்களப்பின் மீள்குடியேற்றக் கிராமங்களில் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் மிதிவெடிகள், கண்ணிவெடிகள் புதைக்கபட்ட 37 கிராமங்களைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மனிதநேய கண்ணிவெடியகற்றும் பிரிவினர் இனம் கண்டுள்ளனர். இவற்றில் பாலையடிவெட்டை, வெல்லாவெளி, புல்லுமலை, வவுணதீவு, கண்ணாபுரம், கோமதியாமடு ஆகிய இடங்கள் முன்னுரிமைப்படுத்தப்பட்டு வெடிபொருள் அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்மையில் வெல்லாவெளிப்பகுதியில் இராணுவ மிதிவெடியில் சிக்கி 2 சிறுவர்கள் படுகாயங்களுக்கு உள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு முன்னுரிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் வெடிபொருள் ஆபத்து நிறைந்த பிரதேங்களாக உள்ளன.

## காந்தரூபன் அறிவுச்சோலை மாணவர்கள் மட்டக்களப்புக்குச் சுற்றுலா

வன்னியிலுள்ள காந்தரூபன் அறிவுச் சோலையைச் சேர்ந்த மாணவர்கள் கடந்த வாரம் மட்டக்களப்புக்குச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டனர். மாவட்டத்தின் பல்வேறு இடங்களையும் சென்று பார்வையிட்ட இவர்கள், கடந்த வெள்ளிக்கிழமை காலை கொக்கட்டிச்சோலை மாவட்டச் செயலகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு. அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளரைச் சந்தித்து கலந்துரையாடினர். இச்சந்திப்பில் புளியந்தீவுக் கோட்டப் பொறுப்பாளர் சேனாதிராசா கலந்து கொண்டார். சுமார் 40க்கும் மேற்பட்ட மாணவர்கள் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

## ஆதரவற்ற இளம் பெண்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கணவனால் கைவிடப்பட்ட நிலையில் சுமார் 2,065 இளம் பெண்கள் வாழ்ந்து வருவதாக அண்மையில் மாவட்ட சமுர்த்திப் பணிமனை மேற்கொண்ட ஆய்வின் மூலம் தெரிவிக்கப்படுகின்றது. இதில் சுமார் 200 பேருக்குச் சுயதொழில் முயற்சிக்கான வாய்ப்பினைச் சமுர்த்திப் பிரிவினரால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் 8,25000 ரூபா பெறுமதியான 30 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

## ஒட்டமாவடி வாவியில் சடலம் மீட்பு

ஓட்டமாவடி வாவியில் உரப்பையில் கட்டியிருந்த நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து வாழைச்சேனையிலுள்ள சிறீலங்காக் காவல்துறையினர் கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சடலத்தை மீட்டனர். தற்போது இந்தச் சடலம் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் அடையாளம் காணப்படாத நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

## வசதியற்ற நிலையில் மட்டு. திருப்பளுகாமம் விபுலானந்த ஆண்கள் பராமரிப்பு இல்லம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் திருப்பளுகாமம் பகுதியில் இயங்கிவந்த விபுலானந்த ஆண்கள் பராமரிப்பு இல்லம் நிரந்தர இடவசதிகள் இன்மையால் தொடர்ந்து இயங்க முடியாதுள்ளதாக அதன் நிர்வாகி தெரிவித்துள்ளார். தனியாருக்குச் சொந்தமான வீடுகளில் இயங்கிவந்த இந்த இல்லத்தினை, ஒப்பந்த காலம் முடிவடைந்ததால், உடன் வெளியேறுமாறு வீட்டு உரிமையாளர் நெருக்கடி கொடுத்துவருகிறார் என்றும் இந்த இல்லத்திற்கான புதிய கட்டிடங்கள் சொந்தக்காணியில், அமைக்கப்பட்டு வருகின்ற போதிலும் போதியளவில் நிதி வசதியின்மையால் விரைவாக நிர்மாணப் பணிகளைப் பூர்த்திசெய்ய முடியாதுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அம்பாறையில் போரினால் பாதிப்படைந்த சிறுவர்களைப் பராமரிக்க நடவடிக்கை

அம்பாறை மாவட்டத்தில் சிறுவர்களை இனம்காணும் நடவடிக்கைகளைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொண்டுவருகின்றது. அம்பாறை மாவட்டத்தில் கடந்த காலப்போர் நடவடிக்கை மூலம் பாதிக்கப்பட்ட சிறுவர்களை இனம் கண்டு அவர்களுக்கான வாழ்க்கை மேம்பாட்டுத்திட்டத்தினை மேற்கொண்டுவருகின்றது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள சுமார் 21 கிராமங்களில் போரினால் பாதிக்கப்பட்ட 701 சிறுவர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 204 பேர் பாடசாலையைவிட்டு விலகியும், 141 பேர் ஒழுங்கற்ற வரவற்றவர்களாகவும் 173 பேர் கூலிவேலை செய்பவர்களாகவும், 152 பேர் பெற்றோரை இழந்தவர்களாகவும், 21 உடல் உளரீதியாகப் பாதிக்கப்பட்டும், பாராமரிப்பின்றி 12 சிறுவர்களும், இனம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இனங்காணப்பட்டவர்களில் 108 பேர் மீளவும் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும் 5 சிறுவர்களைப் புதிதாகப் பாடசாலையில் இணைத்துடன் 3 சிறுவர்கள் பராமரிப்பு இல்லங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். போரினால் பாதிக்கப்பட்ட 364 சிறுவர்களின் குடும்பங்கள், கடனுதவியை எதிர்பார்த்துள்ளன. 260 சிறுவர்கள் சிறுகைத்தொழில் முயற்சியில் ஈடுபட விரும்புகின்றனர். இவ்வாறு 415 சிறுவர்கள் வாழ்வு மேம்பாட்டுக்கான உதவியை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

## மாவீரர்களின் பெற்றோர்களுடன் திருமலை கட்டளைத் தளபதி சந்திப்பு

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மாவீரர்களின் பெற்றோர்களைச் சந்திக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை சேனையூர் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட மகளிர் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் யாழிசை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மங்கல விளக்கினை வனவளப் பொறுப்பாளர் சக்தி, நிதர்சன உதவிப் பொறுப்பாளர் தவா ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தேசியக் கொடியினை விடுதலைப் புலிகளின் மூதூர் பிரதேச இராணுவப் பொறுப்பாளர் குஞ்சன் ஏற்றி வைத்தார். இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் கலந்து கொண்டு உரையாற்றியதுடன், மாவீரர்களின் பெற்றோர்களின் பிரச்சினைகளையும் கேட்டறிந்தார். இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் சிறப்புரையாற்றினார்.

தமிழீழத் தேசியத் தலைவரின் விருப்புக்கு அமைவாக மாவீரர்களின் குடும்பங்களைச் சேர்ந்த பெற்றோர்களுக்கு அன்பளிப்புப் பொருட்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் சுமார் 350க்கு மேற்பட்ட மாவீரர்களின் பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.




விசேட விலைக் கழிவு
RHYTHM
Website
rhythmentertainment.com
Tamil, English, Hindi Movies for Sale
Tamil, English, Hindi Movies for Rent
Tamil, Hindi Audio Cd's, Audio Cassette
790 Harrow Road, Wembley, HA0 3EL
Tel : 02089049040
Fax: 02089049070
e-mail
info@rhythmentertainments.com
Telephone Cards
Party Shop
Video Filming
Photography

ஈழமுரசு
ஐரோப்பா
POOBALAM WEEKLY
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"POOBALAM"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16

வீடு வாங்குதல்–விற்றல்–முதலீடு செய்தல்
☒ வீடு வாங்குவோருக்கான 100% கடன் வசதி
☒ SCI ஸ்தாபனத்தின் மூலம் வீடுகள் வேண்டி முதலீடு செய்து கொள்ளுதல்
☒ கட்டப்பட்ட புதிய – பழைய வீடுகள் வேண்டுதல்
☒ நிலம் வேண்டி புதிய வீடுகள் கட்டுதல்
முழு அளவிலான இலவச ஆலோசனைகள் வழங்கப்படும்
தொடர்புகள்: 06 64 73 49 82



# சிறீலங்கா இராணுவத்தின் போர் அனுபவங்களை அமெரிக்கப் படைகள் பெற்றுக்கொள்ள போகின்றன!

## - அமெரிக்க இராணுவத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய கட்டளைத் தளபதி தெரிவிப்பு

(13.06.04)

சிறீலங்கா இராணுவத்தினரின் போர்முனை அனுபவங்களை அமெரிக்கப் படையினரும் பெறக் கூடிய அரிய சந்தர்ப்பமொன்று தனது விஜயத்தின் மூலம் கிடைத் திருப்பதாக அமெரிக்க இராணு வத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய கட்டளைத் தளபதி லெப். ஜென ரல் ஜேம்ஸ் எல் கம்பல் தெரிவித் துள்ளார். சிறீலங்கா இராணுவத் தலைமையகத்திற்கு கடந்த வியா ழக்கிழமை சென்றிருந்த ஜெனரல் கம்பலை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல, இராணுவ அணிவகுப்பு மரியாதை யுடன் வரவேற்றார்.

அதன்பின்னர் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில், கேட் கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக் கும்போதே அவர் இதனைத் தெரி வித்தார். அங்கு அவர் மேலும் கூறுகையில், சிறீலங்கா இராணு வம் நீண்டகால போர் முனை அனுபவங்களையும் போர்த் தந்தி ரோபாயங்களையும் பெற்றுள்ளது. போர்க்கள அனுபவங்கள் நிறைந்த சிறீலங்கா இராணுவம் ஏனைய நாட்டு இராணுவத்தினருக்கு தனது அனுபவங்களைப் பகிர்ந்துள்ளது. இவ்வாறான திறமையும், அனுபவ மும் நிறைந்த சிறீலங்கா இராணு வத்தின் போர் முனை அனுபவங் களை, ஈராக் மற்றும் ஆப்கானிஸ் தானில் நடைபெற்றுக் கொண்டி ருக்கும் போரில் ஈடுபட்டுள்ள அமெ ரிக்கப் படைகளுக்கு பெற்றுக் கொடுக்கும் சந்தர்ப்பம், இலங் கைக்கான இந்த விஜயத்தின் மூலம் கிடைத்துள்ளது.

அமெரிக்க இராணுவத்திற்கும் சிறீலங்கா இராணுவத்திற்கும் இடையில் சிறந்த முறையில் நட்பு பேணப்பட்டு வந்துள்ளது. அந்த நட்பு எதிர்காலத்தில் மேலும் சிறந்த முறையில் பேணப்படும். வெடி பொருட்களை செயலிழக்கச் செய் யும் மற்றும் கண்ணி வெடி அகற் றும் நடவடிக்கைகளிலும் சிறீலங்கா இராணுவத்தின் அனுபவங்களை அமெரிக்கப் படைகள் பெற்றுக் கொள்வர். சிறீலங்கா இராணுவத் திற்கு போர் தளபாட விநியோக மும், பயிற்சிகளும் தொடர்ந்தும் வழங்கப்படும்.

இதேவேளை, சர்வதேச பயங் கரவாதத்திற்கு எதிராகவும் சர்வ தேச சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவாகவும் அமெரிக்காவின் பங்களிப்பு தொடர்ந்தும் முழுமை யாகக் கிடைப்பதுடன் இலங்கை யில் நிரந்தர சமாதானம் ஏற்படவும் அமெரிக்கா உதவிக்கரம் நீட்டும் என்றும் தெரிவித்தார். இச் சந்திப்பு தொடர்பாக சிறீலங்கா இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல தெரிவிக்கையில், அமெரிக்க இராணுவம் தமது இராணுவத்தின் தேவைகளுக்கு இராணுவத் தளபா டங்களை வழங்க எப்போதும் தயாராக இருப்பதாகக் கூறினார். அமெரிக்க படைகள் தமது படை களிடம் யுத்த நடவடிக்கைகள் தொடர்பாக கற்றுக் கொள்ள ஆவல் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்ப்பாணத் துக்கு ஒரு நாள் விஜயம் மேற் கொண்ட அமெரிக்க - பசுபிக் பிராந்திய கட்டளைத் தளபதி லெப். ஜெனரல் ஜேம்ஸ் எல். கம்பெல், அங்குள்ள சிறீலங்கா படை அதிகாரிகளுடன் கலந்துரை யாடினார்.வெள்ளியன்று காலை பலாலிக்கு சென்ற அமெரிக்கத் தளபதி, அங்கு படையினரின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டதன் பின்னர், யாழ். மாவட்ட இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவுடன் பேச்சுக்களை நடத்தினார். அதைத் தொடர்ந்து காங்கேசன்துறை கடற்படை முகா முக்கும் அவர் விஜயம் செய்தார். பின்னர் விசேட உலங்குவானூர்தி ஒன்றில் காரைநகர் கடற்படைத் தளத்திற்கும் சென்று அங்கு பாது காப்பு நிலைமைகள் குறித்து கடற்படையினருடன் ஆராய்ந்தார். பின்னர் யாழ். நகரப் பகுதி, தென் மராட்சி ஆகிய பிரதேசங்களைச் சுற்றிப் பார்வையிட்டார். பின்னர் முகமாலை சோதனை நிலையத் திற்கும் சென்றார். அங்கு பயணி களின் போக்குவரத்தை அவதா னித்தபின் பலாலி திரும்பிய அவ நேற்று மாலையே கொழும்பு திரும்பினார். முன்னர் அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ஆமிட்றேசும் இவ்வாறு சிறீலங்காப் படைகளின் முன்னணி நிலை களை சென்று பார்வையிட்டிருந் தது தெரிந்ததே. இதேவேளை, குருநாகல் மாவட்டத்தில் ஆரம்ப மாகியுள்ள சமாதானம் தொடர் பான இராணுவ ஒத்திகை நடவடிக் கையில் இவரும் கலந்து கொண் டுள்ளார். அமெரிக்கா, சிறீலங்கா உட்பட 5 நாட்டுப் படையினர் இந்த ஒத்திகையில் பங்குபற்றியுள்ளனர்.



சிறீலங்கா இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வில் சிறீலங்கா இராணுவத் தளபதி லயனல் பலகல்ல, அமெரிக்க பசுபிக் பிராந்திய தளபதி லெப்.ஜெனரல் ஜேம்ஸ் கம்வெல் இடம் நினைவுப் பரிசினை வழங்குகின்றார்.

## தாயகம் தழுவிய ரீதியில் மாபெரும் தடகள விளையாட்டுப் போட்டி 5 மாவட்டங்களில் தடகள உதைபந்தாட்ட மைதானங்கள்

1600 தமிழீழ விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்ளும் மாபெ ரும் தடகளப்போட்டி யாழ்ப்பாணத் தில் இம்மாதம் தமிழீழ விளை யாட்டுத்துறையினரால் நடத்தப்பட ஏற்பாடாகிவருகின்றது. தடகள விளையாட்டு வீரர்களின் திறமையை தாயகம் தழுவிய ரீதியில் வெளிப் படுத்துவதற்காக இந்தப்போட் டிகளை தமிழீழ விளையாட்டுத் துறை நடத்தவுள்ளது. இம்மாதம் 19ம், 20ம் நாட்களில் யாழ் நகர பொது மைதானத்தில் தமிழீழ தடகளப்போட்டிகள் நடைபெறவுள் ளன.

இதேவேளை, தமிழீழ விளை யாட்டுத்துறை ஐந்து மாவட்டங் களில் தடகள உதைபந்தாட்ட மைதானங்களை அமைத்து வரு கின்றது. ஒவ்வொரு மைதானமும் தலா 5 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படுகின்றன. மட்டக்களப் பில் கரடியனாறு, திருக்கோண மலையில் சம்பூர், வவுனியாவில் கனகராயன்குளம், மன்னாரில் அடம்பன், கிளிநொச்சி ஆகிய இடங்களில் 5 விளையாட்டு மைதா னங்களும் மொத்தம் 25 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன. இவை 400 மீற்றர் ஓட்டத்தடத்தையும், உதைபந்தாட்ட மைதானத்தையும் கொண்டிருக் கும். இவை மாவட்ட மைதாங்களா கவே இருக்கும். அத்துடன் கிளி நொச்சி அறிவியல் நகரில் 30 ஏக்கர் பரப்பளவில் விளையாட்டுக் கல்லூரி ஒன்றை அமைக்கும் நடவடிக்கையையும் தமிழீழ விளை யாட்டுத்துறை மேற்கொண்டுள்ளது.

PHONE 2000
LES PROFFESSIONNELS DE LA TÉLÉPHONIE MOBILE À VOTRE SERVICE
SFR
Reparation -Abonnements Telephones Mobiles -Vente en Gros et Detail - Deblocage
Internet-installation Cybercafe -Abonnement ADSL -Creation de Site web.
PHONE 2000 2, Rue Perdonnet, 75018 Paris. ☎: 01 40 05 03 43 Fax: 01 40 05 03 53 M°: La Chapelle
PHONE 2000 85, Rue des Pyrénées, 75020 Paris. ☎: 01 40 09 13 15 Fax: 01 40 09 01 31 M°: Maraîchers
PHONE 2000 19, Rue du Labat, 75018 Paris. ☎: 01 42 58 55 40 Fax: 01 42 58 55 46 M°: Marcadet Poissonniers
PHONE 2000 Informatique 87, Rue des Pyrénées, 75020 Paris. M°: Maraîchers Tél: 06 20 21 11 11
PHONE 2000 4, Rue de Cail, 75010 Paris. ☎: 01 40 05 93 28 Fax: 01 40 05 97 03 M°: La Chapelle ou Gare du Nord
PHONE 2000 5, Bld. davout, 75020 Paris. ☎: 01 43 71 40 30 Fax: 01 40 09 01 31 Mobile: 06 17 17 28 17 M°: Porte de Vincennes
Pour plus Dinformation Visitez: www.Phone2000.net -Tel: SFR Siva: 06 20 21 11 11